# இந்து ஒளி
HINDU OLI

தீபம் - 17 சுடர் - 04




## நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மடாலயத் திறப்பு விழா சிறப்பு மலரும்
## சுவாமி விபுலானந்தர் நினைவு இதழும்


விஜய வருடம்
ஆனி - ஆடி


அகில இலங்கை இந்து மாமன்ற ஆன்மிக இதழ்
Religious Journal of All Ceylon Hindu Congress

June - July
2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## யாழ் பணிமனையில் 22.06.2013 அன்று...








நல்லை ஆதீன மடாலயம் பேணுவதற்கான நம்பிக்கை நிதியம் நிறுவும் உறுதி குரு மகா சந்நிதானத்தினால் கைச்சாத்திடப்படும் காட்சி.



மாமன்றத்தலைவர் உரை




'சத்திய வித்தகர்' நீதியரசர் விக்னேஸ்வரன் உரை




மாண்புமிகு மகாலிங்கம் மாமன்றத்தின் சார்பில் கணனிகளை வழங்கும் காட்சி



சபையோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# இந்து ஒளி

தீபம் - 17 சுடர் - 04

விஜய வருடம் ஆனித் திங்கள் 31ஆம் நாள் (15.07.2013)

## பஞ்ச புராணங்கள்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

பனித்திளம் திங்கள் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாகம்
ஆகமுன் கலந்தவர் மதின்மேல்
தனித்தபேர் உருவ விழித்தழல் நாகம்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே!

### திருவாசகம்

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்கள் குளிர்ந்தனவே!

### திருவிசைப்பா

அற்புதத் தெய்வம் இதனின் மற்றுண்டோ
அன்பொடு தன்னைஅஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளம் அள்ளூறும்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே!

### திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே!

### திருப்புராணம்

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவ மாகி
அற்புதக் கோலநீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பரவி யோகமாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி!

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் நானிலம் உள்ளவரை நிலைக்கட்டும்

தமிழ் வேந்தர்கள் காலம் முடிவுற்ற பின்பு சைவப் பாரம்பரியத்தை நிலைநாட்டுவதற்கு பெரிதும் உழைத்தவர்கள் தென்னாட்டில் எழுந்த ஆதீன கர்த்தாக்களே. போரின் அனர்த்தங்களால் சைவத் தமிழ் வேந்தர்களின் வாழ்வு முற்றுப்பெற்றபோது இனிமேல் யார் கதி? என்று சைவ உலகம் ஏங்கியது. தென்னாடு முழுவதும் நாயக்க மன்னர்கள் ஆட்சியை கைப்பற்றினர். இவர்களது காலத்தில் பல சைவ ஆலயங்கள் சத்திரங்கள், மடங்கள் என்பன அழிந்தொழிந்து போகும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில் சில துறவிகள் ஆதீனங்களை நிறுவி ஆலயங்கள், சத்திரங்கள், மடங்கள் போன்றவற்றை கண்காணிக்கத் தொடங்கினர். திருவாவடுவறை ஆதீனம், மதுரை ஆதீனம், தருமபுர ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம் என்பன காலத்தால் முந்தியவை. குன்றக்குடி ஆதீனம், பேரூர் ஆதீனம் சென்ற நூற்றாண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டவை. சில ஆதீனங்கள் நூற்றுக்கணக்கான திருக்கோயில்களையும், மடங்களையும் கண்காணித்து வருவது பாராட்டுக்குரியது. சைவ மாநாடுகளை நடத்துவதிலும், பழம்பெரும் சைவ நூல்களை அச்சிடும் பணியிலும் சில ஆதீனங்கள் உன்னதமான பங்களிப்பை செலுத்தின. சைவத்தமிழ் வகுப்புகள், தத்துவ ஆராய்ச்சிகள் பண்ணிசை, மற்றும் முத்தமிழ் கலைகள், சிற்பாகமங்கள் போன்றவைகளைக் கற்பிக்கும் கல்விக்கூடங்களாகவும் செயற்பட்டு வந்தன. காலத்திற்குக் காலம் ஆதீன சம்பிரதாயத்திற்கு அமைய ஆதீன முதல்வர், தம்பிரான், சின்னப்பட்டம், வித்துவச்சபை மேலாளர்கள், தொண்டர்கள் என ஒரு சமூகக் குழுவினர் ஆதீன செயற்பாடுகளை திறம்பட செயற்படுத்தி வந்தனர். வேந்தர்களுக்குப் பின்பு தென்னாட்டில் சைவ சமயத்தின் தலைவர்களாக, காவலர்களாக ஆதீன முதல்வர்களே இருந்து வருகின்றனர்.

ஈழத்திருநாட்டில் நாவலர் போன்ற நன்மக்கள் தனித்தனியாக பல்வேறு சைவத்தமிழ்ப் பணிகளை ஆற்றிவந்த போதிலும், இந்திய ஆதீனங்களுக்கு இணையாக ஒரு சைவ ஆதீனம் இல்லாத குறைபாடு சென்ற நூற்றாண்டுவரை தொடர்ந்தது. சில மடங்கள் தோற்றம் பெற்று இந்திய ஆதீனங்களோடு சில தொடர்புகளைக் கொண்டிருந்தபோதிலும், தனித்துவமான ஆதீனம் உருவாக்கம் பெறவில்லை. இந்நிலையை தன் அகத்தே கொண்டு ஈழத்திருநாட்டில் முதன்முதலாக சைவ ஆதீனத்தை உருவாக்குவதற்கு அல்லும் பகலும் அயராது உழைத்தவர் மணிபாகவதர். சிறந்த கல்விமான். தமிழ், வடமொழி, ஆங்கிலம், இசை, நடனம், ஓவியம் என பல்வேறு ஆற்றலும் தன்னகத்தே கொண்டு விளங்கிய இப்பெருமகன் சிறந்த கதாப்பிரசங்க விற்பன்னராகவும் திகழ்ந்தார். இவரது அர்ப்பணிப்பிலேயே நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் தோற்றம் பெற்றது.

(தொடர்ச்சி 4 ஆம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தச் சுடரில்...


- பஞ்சபுராணங்கள் 1
- ஆன்மீகச்சுடரின் அருள்மடல் 3
- புதுப்பொலிவு பெற்ற நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் 4
- ஆசிச்செய்திகள் / வாழ்த்துச் செய்திகள்
  - மதுரை ஆதீன குருமகா சந்நிதானத்தின் ஆசி 6
  - அகில இலங்கை இந்து மாமன்ற அறங்காவலர் சபைத்தலைவரின் வாழ்த்து 6
  - இலண்டன் கட்டடக் குழுத்தலைவரின் செய்தி 7
  - அகில இலங்கை மாமன்றச் தலைவரின் செய்தி 8
  - கட்டிடக் குழுக் பொருளாளரின் செய்தி 9
  - கட்டிடக் குழு உபதலைவரின் செய்தி 9
- நன்கொடை தந்தவர்களின் விபரம் 10
- ஆதீன வரலாற்றுக்குறிப்பு 11
- நல்லை ஆதீன முதல்வருடன் நேர்காணல் 12
- நிகழ்வின் பதிவுகள் 14
- கலையார்வமுள்ளவராக விளங்கிய மணிபாகவதர் 16
- நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்களின் சிறப்புரை 18
- விபுலானந்தர் அடிகள் பக்கம் 20
- யாழ் நகரில் நினைவு பேருரையும் நூல் வெளியீடும் 22
- ஒட்டுறவும் ஒருமைப்பாடும் 23
- ஆலயங்களும் ஆராதனைகளும் 29
- நாவலர் பக்கம் 33
- ஆனி உத்தரம் 35
- யோகர் சுவாமிகள் பக்கம் 36
- உலகளாவிய ரீதியில் இந்து மதம் 38
- மணி விழா கண்ட நாகேஸ்வரன் 39
- மாமன்றச் செய்திகள் 40


## வாழ்த்து

வானொடு வையம் வாழ்க வளமெலாம் பொலிந்து
தானமுந் தவமுமோங்கி தரணியி லுள்ளோர் வாழ்க
ஆனைந்து மாடுவான்தன் னருளினா லென்று மெங்கள்
தேனினுமினிய தெய்வத் தமிழொடு சைவம் வாழ்க!


# இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்ற வெளியீடு
விஜய வருடம் ஆனி – ஆடி
15.07.2013



ஆசிரியர் குழு :
திரு. கந்தையா நீலகண்டன்
சைவஞானபானு கலாநிதி ஆறு. திருமுருகன்
கலாநிதி முத்தையா கதிர்காமநாதன்
சிவஸ்ரீ ம. பாலகைலாசநாத சர்மா
திரு. த. மனோகரன்
திரு. அ. கனகசூரியர்



| | |
|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா 50.00 |
| வருடாந்தச் சந்தா (உள்நாடு) | ரூபா 300.00 (தபாற் செலவு தனி) |
| வருடாந்தச் சந்தா (வெளிநாடு) | US டொலர் 15 |



## அகில இலங்கை இந்து மாமன்றம்

A.C.H.C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 2, இலங்கை.
யாழ் பணிமனை : 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
இணையத்தளம் : http:/www.hinducongress.lk
மின்னஞ்சல் : hinducongress@gmail.com
தொலைபேசி : 0112434990, தொலைநகல் : 0112344720



இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.



# HINDU OLI

Issue of
**ALL CEYLON HINDU CONGRESS**
AANI - AADI 15.07.2013



**Editorial Board :**
Mr. Kandiah Neelakandan
Dr. Aru. Thirumurugan
Dr. Muthiah Kathirgamanathan
Sivasri M. Balakailasanatha Sarma
Mr. D. Manoharan
Mr. A. Kanagasooriar



| | |
|---|---|
| Price : | Rs. 50.00 |
| Annual Subscription (Inland) | Rs. 300.00 (Excluding Postage) |
| Annual Subscription (Foreign) | U. S. $ 15 (Including Postage) |



**ALL CEYLON HINDU CONGRESS**
**A.C.H.C. Bldg.**
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha Colombo - 2, Sri Lanka.
Jaffna Office : 211/17, Temple Road, Nallur, Jaffna.
Website : http://www.hinducongress.lk
E-Mail : hinducongress@gmail.com
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720




**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**


**அடுத்த சுடர்**
**விஜய வருடம் ஆவணி - புரட்டாதி**

**Next Issue**
**AAVANI - PURADDATHI**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆன்மீகச்சுடரின்

## அருள் மடல்




# கிராமத்து மக்களிடையே மேலோங்கி இருக்கும் ஆன்மீக உணர்வு

நம் நாட்டின் சகல பகுதிகளிலும் சிவ தொண்டும் சமய விழிப்புணர்ச்சியும் பரவுவது கண்டு மகிழ்கிறோம்.

1983 இன் பின் திருகோணமலைக்கு விஜயம் செய்யும் சந்தர்ப்பம் கடந்த தைமாதம் தான் கிட்டியது. அங்கு மூன்று நாட்களில் ஆலயங்களையும், கிராம புறங்களில் இருக்கும் பாடசாலைகளையும் தரிசிக்க முடிந்தது. கடந்த தசாப்தங்களில் மக்கள் சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்திருக்கின்றனர். எனினும் தங்களது ஆன்மீக உணர்வையும் விருந்தோம்பல் பண்பையும் மறக்கவில்லை. குறிப்பாக கிராமங்களில் அவை மேலோங்கி நிற்கிறது.

என் தயாருடன் சென்றிருந்த யான் அங்கு கடந்த முப்பது வருடங்களில் ஏற்பட்ட மாற்றங்களை காணக்கூடியதாக இருந்தது. எங்களின் விஜயத்தை ஒழுங்கு செய்தமைக்கு திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை, அகில இலங்கை இந்து மாமன்றம் மற்றும் என்னுடன் கூடவந்த அகில இலங்கை இந்து மாமன்ற யாழ் பணிமனை இணைப்பாளர் திரு. ஜெயசிங்கம் ஆகியோருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

கிளிநொச்சி மாவட்டத்தில் முளங்காவில் என்ற ஒரு விவசாய கிராமத்திற்குச் செல்லும் ஒரு வாய்ப்பும் கிடைத்தது. 2008 இல் அக்கிராம மக்கள் எல்லோரும் இருப்பிடங்களை விட்டு அகதிகளாக முகாம்களில் தஞ்சம் அடைந்தது அவர்களின் சோக வரலாறு. போர் முடிந்த பின் கிராமத்திற்கு மக்கள் திரும்பியிருக்கிறார்கள். முதலில், பாதிக்கப்பட்ட கிருஷ்ணர் ஆலயத்தை புனருத்தாரணம் செய்திருக்கிறார்கள். அங்கு அவர்களை சந்தித்து உரையாடிய பின்பே ஏன் அவர்கள் அதை முதலில் புனருத்தாரணம் செய்தார்கள் என்பது தெரியவந்தது. ஆலயம் வெறும் பூஜைகளுடனும், எமது கட்டிடக் கலையை பிரதிபலிக்கும் இடமாகவும் இல்லாது அது ஒரு சமூக மையமாக விளங்குவதை அறிந்துகொண்டேன். கிராமத்தில் யாராவது ஒருவர் மரணித்தால் கூட அவரின் மரணச் செலவுக்கு ஆலயம் உதவுகிறது. ஞாயிற்றுக்கிழமைகளில் மாணவர்களுக்கு அறநெறி போதனை மட்டுமல்ல அன்னதானமும் நடத்தப்படுகிறது. உள்ளூர் பாடசாலையை கட்டியெழுப்ப ஆலய பக்தர்கள் பணியாற்றுகின்றனர். "இப்படி தருமமெல்லாம் செய்ய எங்கிருந்து பணம் வருகிறது?" என்று கேட்டேன். "உண்டியல் (பிளாஸ்டிக்) பெட்டி ஒன்றை ஒவ்வொரு குடும்பத்திற்கும் கொடுத்திருக்கிறோம். அவர்கள் ஒவ்வொரு நாளும் தங்களுக்கு கிடைக்கும் நாணயங்களை போட்டு சேகரிக்கிறார்கள். மாதம்தோறும் தாங்கள் சேகரித்த பணத்தை ஆலயத்திற்கு கொண்டுவந்து கொடுக்கிறார்கள்." என பதில் கிடைத்தது.



யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் 50 மைல் தூரத்திலுள்ள இக்கிராமத்திற்குப் போகும் பாதை கூட கரடுமுரடானது கடந்த பங்குனி மாதம் 50 மைல்களை கடக்க மூன்றரை மணித்தியாலங்கள் எடுத்த ஆலயத்தின் பூசை வழிபாட்டில் கலந்து பிள்ளைகளுக்கு வகுப்பும் நடத்தி அவர்களுடன் உரையாடும் போது எங்களுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. அந்த ஆலயத்தின் தர்மகர்த்தாக்களின் ஒருவரின் பெயர் ஜோசப் (Joseph). நான் மகிழ்ச்சிதரும் அதிர்ச்சியுடன் அவரை பார்த்தேன். "ஆம். நான் ஒரு கிறிஸ்தவன் ஆனால் கிருஷ்ணரும் அவரின் திருவருளும் என்னை ஆட்கொண்டு விட்டன." என்று ஒரு போடுபோட்டார் அவர்.

செல்வி அஞ்சலியின் சைக்கிள் திட்டத்தின் கீழ் உதவி தேவையான பத்து மாணவிகளுக்கு சைக்கிள்கள் வழங்கினோம். அவர்கள் எல்லோரும் போரின் போது தந்தைமாரை இழந்தவர்கள். மாணவர்களுக்கு பலவித உதவிப் பொருட்களையும் வழங்கினோம்.

மேலும் மேலும் ஆலயங்கள் இந்த கிருஷ்ணர் ஆலயத்தின் முன்மாதிரியை பின்பற்ற வேண்டும் என்பதே என் பிரார்த்தனை.

இலங்கைக்கு வந்த போது என்னுடன் பல மைல்கள் கூட வந்து வயோதிப காலத்திலும் மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற உணர்வை அளித்துவரும் என் அன்னைக்கும், அகில இலங்கை இந்து மாமன்ற கூட்டிணைப்பாளர் திரு. ஜெயசிங்கம் அவர்களுக்கும் கடமைப்பட்டிருக்கிறேன். எனது அன்னைதான் தொடர்ந்தும் எனக்கு அகத்தூண்டுதலை தரும் பெரும் சக்தியாகும்.

**தொண்டுநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புக்கட்டுரை

# புதுப்பொலிவு பெற்றுள்ள நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



**(விஜயவருடம் ஆனிமாதம் 9ஆம் நாள் (23.06.2013) அன்று நடந்த ஆதீன மடாலயக் கட்டடித் திறப்புவிழாவையொட்டி இந்த இதழ் சிறப்புமலராக மலர்கின்றது.**



இலங்கையிலுள்ள ஒரேயொரு சைவ ஆதீனமாக பெருமை பெறுகிறது யாழ் நல்லூரில் அமைந்துள்ள திருஞானசம்பந்தர் ஆதீனம். மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் கிளை நிறுவனமாக 1966ஆம் ஆண்டு ஆவணி மாதம் 6ஆம் நாளன்று கோயில் வீதியிலுள்ள 'கந்தகோட்டம்' இல்லத்தில் நல்லை ஆதீனம் ஸ்தாபிக்கப்பட்டு செயற்படத் தொடங்கியது. ஒரு கதாப்பிரசங்கியாக இந்து மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றுத் திகழ்ந்த மணிபாகவதர், மணி ஐயர் என்ற பெயர்களில் அழைக்கப்பட்டு வந்த சிவசுப்பிரமணிய ஐயர் அவர்கள், மதுரை திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளை குருவாகக் கொண்டு துறவற வாழ்க்கையை மேற்கொள்ளும் வகையில் அவரது சீடராகி, ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் என்ற நாமாகரணமும், மந்திரோபதேசமும் பெற்று இலங்கை திரும்பி நல்லூர் ஆதீனத்தை ஆரம்பித்தார். சில வருடங்களின் பின்னர், அதாவது 1970ஆம் ஆண்டிலிருந்து மதுரை ஆதீனத்தின் கிளையாக அல்லாமல், சுயாதீனமாக தனித்து இயங்கத் தொடங்கியது. 1972ஆம் ஆண்டிலிருந்து ஆதீனம் இப்போதுள்ள இடத்திற்கு மாற்றப்பட்டது.

நல்லை ஆதீனம் செயற்பட்டு வரும் இந்தக் கட்டிடம் நல்லைக் கந்தன் ஆலயத்தை நிர்வகித்துவரும் மாப்பாண முதலியார் பிறந்து வளர்ந்த வீடாகும். இது, பல தர்ம காரியங்களைச் செய்து வந்துள்ள புத்தூர் மழவராயர் குடும்பத்தினருக்கு கைமாறியது. வாடகை வீட்டில் இயங்கிவந்த நல்லை ஆதீனத்தை சிறப்பான வகையில் நடத்திச் செல்வதற்காக அப்போது ஆதீன முதல்வராகவிருந்த முதலாவது குருமகா சந்நிதானம் அவர்களுக்கு 1972ஆம் ஆண்டில் மழவராயர் குடும்பத்தினர் இந்தக் கட்டிடத்தை அன்பளிப்புச் செய்தார்கள்.

நல்லை ஆதீனம் தோற்றம் பெற்ற காலத்திலிருந்து, சைவசமயத்தை வளர்க்கும் வகையிலான பல நல்ல பணிகளை செய்து வருகிறது. சிறுபிள்ளைகளுக்கான தேவார வகுப்புகள், சமயபாட வகுப்புகள், வெள்ளிக்கிழமைகளில் வீதி பஜனை போன்றவற்றுடன் சைவமக்களுக்கான சமய தீட்சையும் வழங்கப்பட்டு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்தினுடைய அருளாசியோடு நல்லூரில் வாடகை வீட்டில் நல்லை ஆதீனம் செயற்படத் தொடங்கியது. பின்னர், நல்லூர் கந்தன் ஆலய மேற்கு வீதியில், புத்தூர் மழவராயர் அறக்கட்டளைக்கு உரித்தான பெரிய நாற்சார வீட்டில் ஆதீனம் நிரந்தர வாசம் செய்தது. ஆதீனம் அமைந்துள்ள கட்டிடம் புராதனமான செல்வாக்குமிக்க வீடு. இது நல்லூர் ஆலய எஜமானராக விளங்கிய மாப்பாண முதலியார் பரம்பரையினருக்கு சொந்தமானது. இந்தவீடு புத்தூர் மழவராயர் அவர்களிடம் கைமாறிய வரலாறு பலரும் அறிந்ததே. ஆதீனம் இயங்குவதற்கு புத்தூர் மழவராயர் அறக்கட்டளை செய்த உதவியை சைவத்தமிழ் உலகம் மறக்கமுடியாது.

முதலாவது குருமகா சந்நிதானமாக பதவியேற்ற ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் (மணிஐயர்) தகுந்த ஒரு இளவரசை தேர்ந்தெடுத்து ஆற்றுப்படுத்தியதன் விளைவாக, இன்றைய குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது காலத்தில், ஆதீனம் பல்வேறு வளர்ச்சிகளை சந்தித்து வந்துள்ளது. ஆதீனத்திற்கான புதிய கலாமண்டபம், உணவு மண்டபம் என்பன உருவாக்கப்பட்டன. முதலாவது குரு முதல்வரின் சமாதிக் கோயிலும் இவரால் கட்டுவிக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது.

இன்று இவரது பெரும் முயற்சியின் பலனாக இலண்டன் வாழ் சைவ அன்பர்கள் ஒன்றிணைந்து நல்லை ஆதீன புனருத்தாரணப் பணிக்கான அமைப்பை உருவாக்கி, நிதிதிரட்டி, அகில இலங்கை இந்து மாமன்றத்தின் மேற்பார்வையில் சகல வசதிகளையும் கொண்ட இருமாடிக் கட்டிடத்தை கட்டி முடித்திருப்பது பெருமைக்குரிய விடயமாகும்.

நல்லூர் ஆதீன சுவாமிகளின் குரு பாரம்பரியம் தொடர்வதற்கு இளைய தலைமுறையினர் முன்வரவேண்டும். எம் மண்ணில் நல்லை ஆதீனம் சூரியன், சந்திரன் உள்ளவரை நிலைத்து விளங்க வேண்டும். இந்திய ஆதீனங்களுக்கும், தென்னிலங்கையிலுள்ள ஏனைய மதபீடங்களுக்கும் ஈடாக, நல்லை ஆதீனம் திகழவேண்டும். அதற்கு சைவ மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளது. சில வருடங்களின் பின் ஆதீனத்துக்கான கலாமண்டபமொன்று அமைக்கப்பட்டு சைவசமயம் சார்ந்த விழாக்களும், தெய்வீக திருநெறிய மாநாடுகளும், குருபூசை வைபவங்களும் நடைபெற்று வந்தன. நல்லைக் கந்தன் மகோற்சவ காலத்தில் இங்கு இசை நிகழ்ச்சிகளும் சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெறுவது வழக்கமாகும்.

நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் அவர்களுடன் இணைந்து, ஆதீன செயற்பாடுகளில் பெரிதும் உதவிவந்த இப்போதைய ஆதீன முதல்வரான ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கு முதலாவது குருமகா சந்நிதானம் 1979ஆம் ஆண்டில் 'தம்பிரான்' என்ற பதவி நிலையை வழங்கியிருந்தார். சில மாதங்களின் பின்னர் தனது வாரிசாக இளவரசு பதவி நிலைக்குரிய பட்டாபிஷேகத்தை செய்துவைத்தார். 1981ஆம் ஆண்டில் ஆதீன முதலாவது குருமகா சந்நிதானம் சமாதியானதால், இளவரசு நிலையிலிருந்த இரண்டாவது சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் என்ற நாமாகரணத்துடன் ஆதீன முதல்வரானார். இவர் அன்றைய நாளிலிருந்து ஆதீனத்தின் செயற்பாடுகளை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதில் பெரிதும் பங்காற்றி வருகிறார்.

நல்லை ஆதீனக் கட்டிடம் பழமையானதாகவும் வசதி குறைந்த நிலையிலும் இருந்ததால் அதனை மீள்நிர்மாணம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. ஆதீன சுவாமிகள் வெளிநாடுகளுக்கு செல்லும்போது அங்குள்ள இந்து மக்கள் மத்தியில் இதுபற்றி அடிக்கடி சொல்லிவருவதும் வழக்கம். இதற்கு இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து பெரியபிரித்தானியாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்து மக்கள் பலர் உதவ முன்வந்தார்கள். அந்த வகையில் அங்கு திரு. எஸ். பாலசிங்கம் அவர்களை தலைவராகக் கொண்டு நல்லை ஆதீன கட்டிட புனருத்தாரண நிர்வாகக் குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது. அதன் ஊடாக நிதியுதவி முதலான சகல செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

2011ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் திகதியன்று புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இடம்பெற்றது. அகில இலங்கை இந்து மாமன்றம் இதற்கான இணைப்பாளராகவிருந்து கட்டிடப் பணியை மேற்பார்வை செய்துவந்தது. இந்து மாமன்றத்தின் ஆலோசனையின் பேரில் ஊரெழு ஜெயசன்ஜன் கட்டிட நிர்மாண நிறுவனத்திடம் கட்டிட வேலைகள் ஒப்படைக்கப்பட்டன.

ஆதீன கட்டிடத்தின் முதலாம் கட்ட வேலைகள் நிறைவுபெற்ற நிலையில் தைப்பூச தினமான 2012 பெப்ரவரி 7ஆம் திகதியன்று இரண்டாம் கட்டத்தின் ஆரம்பமாக நிலை வைக்கும் வைபவம் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து ஆதீனத்தின் கலாமண்டபத்தில் அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் பத்திரிகையாளர் சந்திப்பொன்று நடத்தப்பட்டது. அப்போது இந்து மாமன்றத்தின் பொதுச் செயலாளராகவிருந்த (இப்போதைய தலைவர்) திரு. கந்தையா நீலகண்டன் பத்திரிகையாளர் சந்திப்பை ஏற்பாடு செய்து நடத்தியிருந்தார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பேசிய செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் "நல்லை ஆதீனம் இலங்கையின் ஒரேயொரு சைவ ஆதீனமாக விளங்குகிறது. ஏனைய மத பீடங்கள் அழகாகவும், நேர்த்தியாகவும் இருக்கும்போது, பழமை வாய்ந்ததாகவும் வசதிகள் குறைந்த நிலையிலும் இருக்கும் நல்லை ஆதீனக் கட்டிடத்தை திருத்தியமைக்க வேண்டும் என்பது பலரது விருப்பமாக இருந்தது. இக்குறையைப் போக்கும் வகையில் இங்கிலாந்திலுள்ள சைவ அன்பர்கள் ஒன்றிணைந்து எடுத்துக்கொண்ட பெருமுயற்சி போற்றுதற்குரியது" என்று குறிப்பிட்டார்.

பெரிய பிரித்தானியா நல்லை ஆதீனக் கட்டிட புனருத்தாரண நிர்வாகக் குழுவின் தலைவர் திரு. சூ. பாலசிங்கம் பேசும்போது, "இந்தியாவில் இயங்கும் ஆதீனங்களுக்கு பலவகையான சொத்துக்கள் இருக்கின்றன. அதன் மூலம் வருமானமும் கிடைக்கிறது. ஆனால் இங்குள்ள நல்லை ஆதீனத்திற்கு அத்தகைய வசதிகள் இல்லை. எனவே ஆதீனத்தை நல்ல வகையில் புனரமைப்புச் செய்து இங்கு சைவப் பண்பை வளர்க்கவும், அதனூடாக சைவ வாழ்க்கை நெறியினை அமைத்துக் கொள்ளவும், குறிப்பாக சைவப்பாரம்பரிய முறைப்படி இளம் சந்ததியினரை வழிப்படுத்தவும் ஏற்ற வகையிலான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்கு புலம்பெயர் மக்களாகிய நாங்கள் விரும்பியிருக்கிறோம்" என்று கூறினார்.

கட்டிட புனருத்தாரண நிர்வாகக் குழுவின் ஒருங்கிணைப்பாளரான திரு. அ. தேவசகாயம் உரையாற்றும்போது "இங்கிருந்து புலம்பெயர்ந்து வாழும் நாங்கள் லண்டனில் பல சைவ மாநாடுகளை நடத்தியிருப்பதுடன் பல ஆதீன முதல்வர்களையும் அறிஞர்களையும் அழைத்து பேசவைத்துள்ளோம். நல்லை ஆதீன முதல்வர் வந்து பேசும்போது ஆதீனத்தின் குறைபாடுகளையெல்லாம் எடுத்துச் சொல்வார். புலம்பெயர் நாடுகளில் வந்து சமயத்தை வளர்க்கும்போது எங்கள் சொந்த மண்ணில் இருக்கும் ஆதீனத்தை கவனிக்க வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது. சர்வதேச ரீதியாக வாழ்ந்து வரும் அனைத்து சைவ மக்களையும் ஒன்றிணைத்து நிதியுதவிபெற்று ஆதீன புனருத்தாரண வேலைகளைச் செய்வதற்கு ஏற்கனவே நினைத்திருந்தோம். கடந்தகால போர்ச் சூழ்நிலைகள் அதற்கு சாதகமாக அமையவில்லை. இந்தப் பெரும்பணி இங்கிலாந்து வாழ் சைவ மக்களுக்கு மாத்திரம் உரியதல்ல. உலகம் வாழ் அனைத்து சைவமக்களுக்கும் உரியது. ஆதீனப் புனருத்தாரணப் பணிகளுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் முதுகெலும்பாகவிருந்து எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிவருகிறது. இதற்காக இந்து மாமன்றத்திற்கும் ஏற்கனவே ஆதீனம் இயங்குவதற்கு காணியை கொடுத்து உதவிய புத்தூர் மழவராயர் குடும்பத்தினருக்கும் இங்கிலாந்து வாழ் சைவ மக்கள் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்" என்று குறிப்பிட்டார்.

நல்லை ஆதீன புனர்நிர்மாணப் பணி சிறப்பாக நிறைவடைந்து. கீழ்த்தளம் மற்றும் மேல்மாடியைக் கொண்ட கட்டிடமாக கடந்த மாதம் (ஜூன்) 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை சம்பிரதாய பூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

**யாழ் மண்ணிலிருந்து அ. கனகசூரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதீன மடாலயத் திறப்புவிழாவிற்கு ஆசிச் செய்திகளும் வாழ்த்துரைகளும்

## மதுரை ஆதீன குருமகாசந்நிதானம்
## ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களது ஆசிச் செய்தி




எல்லாம் வல்ல எம்பெருமானைப் பிரார்த்தித்து ஆசீர்வதித்து எழுதுவது. யாழ்ப்பாணம் நல்லூர் ஆதீன திருமடாலயம், கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக சைவசமயப் பிரச்சாரம் மேற்கொண்டு சிறப்பாக இயங்கி வருவது மகிழ்ச்சிக்குரியதாக இருக்கிறது. எமது குருநாதராக வீற்றிருந்தருளிய 291ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், நல்லூர் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளுக்கு விசேட தீட்சை, மந்த்ர காஷாயம், ஆசார்ய அபிஷேகம் முதலான மதுரை ஆதீனச் சம்பிரதாயச் சடங்குகளைச் செய்வித்து, ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் என்ற தீட்சா நாமம் சூட்டி, நல்லை ஆதீனத்தின் முதல் பீடாதிபதியாக பட்டம் சூட்டியருளினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருமந்திரம் கந்தரலங்காரம், கந்தரனுபூதி போன்ற நமது சமய நூல்களில் ஆழ்ந்த நுணுக்கமும், புலமையும், பேச்சாற்றலும் மிக்கவராகத் திகழ்ந்தார்கள் என்பதை நாம் நன்கறிவோம். அவர்களது வழியைப் பின்பற்றி இரண்டாவது பீடாதிபதியாக விளங்குகின்ற ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், சமயப் பற்றும் உற்சாகமும் கொண்டு விளங்கி வருவதை அறிய மன நிறைவு ஏற்படுகிறது. நல்லூர் ஆதீனத்தில் புதிய பிரமாண்டமான கட்டிடம் எழுப்பி அதனைத் திறந்து வைத்து ஆசீர்வதிக்க வேண்டும் எனக்கேட்டது, எமக்கு மிக மகிழ்ச்சியே. எனினும் சூழ்நிலைகள் சரியாக இல்லை என்பதால், அவ்விடம் நேரில் எழுந்தருள்வதைத் தவிர்த்துள்ளோம். அப்புதிய கட்டிடம் எழுப்புவதற்கு எல்லாவகைகளிலும் உதவிகளையும், ஒத்துழைப்பையும் நல்கிய பல்வேறு நாடுகளில் வாழும் இலங்கைத் தமிழ்ச் சகோதரர்கள், சகோதரிகள் அனைவருக்கும் நமது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நல்லூர் ஆதீனம் மென்மேலும் நமது சைவத்தையும், தமிழையும் பரப்புகின்ற பெரும் பணியைத் தொய்வின்றிச் செய்துவர எமது நிரந்தரத் தாய் தந்தையாகிய சிவபெருமான் – பார்வதி தேவியாரைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம். எல்லோர்க்கும் ஆசீர்வாதம்.

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

## அகில இலங்கை இந்து மாமன்ற அறங்காவலர் சபைத் தலைவர் மனிதநேயமாமணி இறை சிரோரத்தினம் வி.கயிலாசபிள்ளை அவர்களது வாழ்த்துச் செய்தி



சைவத் தமிழர்களின் உன்னத வாழ்வுக்கு வழிகாட்டிகளாக விளங்குபவர்கள் ஆதீன குரு முதல்வர்கள். பாரத தேசத்தின் பல சைவ ஆதீனங்கள் தோன்றி சைவ சமய வளர்ச்சிக்கு பெருந்துணை செய்து வருகின்றன. எங்கள் நாட்டில் நல்லூர் திருஞான சம்பந்த ஆதீனம் தோற்றம் பெற்று கடந்த 47 ஆண்டுகளாக சிறப்பாக இயங்கி வருகின்றது. தனது சொல்வன்மையால் பல்லாயிரக்கணக்கான சைவ மக்களை கவர்ந்தவர் மணிபாகவதர் அவர்கள். ஈழநாட்டின் சைவ ஆதீனத்தை தோற்றுவித்து தன் வாழ்வை துறந்து துறவியாகி அருஞ் சேவையாற்றிய அப் பெருமகனாரின் கனவு வீண்போகவில்லை. அவரின் வாரிசாக பதவியேற்ற இன்றை சுவாமிகள் குருவின் நெறியில் நின்று வழுவாது ஆதீனத்தை நெறிப்படுத்தி வருகிறார்கள்.

பொது மக்களாகிய நாம் ஆதீனங்கள், மடங்கள், சமய நிறுவனங்கள் சிறப்பாக இயங்குவதற்கு எம்மாலான உதவிகளை செய்ய வேண்டியது கடமையாகும். இலண்டன் வாழ் சைவ மக்கள் ஆதீனத்தின் மீது கொண்ட அக்கறை காரணமாக கோடிக்கணக்கான ரூபா செலவில் பிரமாண்டமான மாடிக்கட்டடத்தை உருவாக்கி கையளிப்பது நன்றிக்குரிய கைங்கரியமாகும். அகில இலங்கை இந்து மாமன்றம் இப்பணியில் இணைந்து செயற்பட்டிருப்பது எமக்குப் பெருமையளிக்கிறது. ஆதீன வளர்ச்சியில் அனைவரும் மிகவும் அக்கறையாக இருப்பது எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை தருகின்றது. இத்தெய்வீகப் பணியில் ஈடுபட்ட அனைவரையும் வாழ்த்துகிறேன். நல்லை திருஞானசம்பந்த ஆதீனம் சைவ சமயத்தவரின் உன்னதமான உயிரோட்டமான பீடமாக விளங்கப் பிரார்த்தித்து அமைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~



உ

குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
# NALLAI THIRUGNANASAMBANDAR ADHEENAM

கட்டட குழு பிரித்தானியக் கிளை

5 Chapel Road, West Ealing, Middlesex, W13 9AE


**Chairman**
Mr.S.Balasingam
07956 513 669

**Vice Chairman**
Dr.S.Somasegaram
07798 780 118

**Secretary**
Dr. Ganan Sritharan
07595 733 330

**Asst. Secretary**
Dr Maheswaran

**Treasurer**
Mr.V.Sivasundararam
07725 567 107

**Asst. Treasurer**
Mr.S.Selvarajah
07956 301 559

**Co-ordinators**

Dr.A.Thevasagayam
07780 975 142

Mr.T.Joganathan
07950 180 312




நல்லை திருஞானசம்பந்த ஆதீனம் புதிய கட்டிடம் கட்டப்பட்டு திறந்து வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 16.06.2011 திரு.யோகநாதன் அவர்கள் தொலைபேசியில் என்னிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். நல்லை ஆதீன கட்டிட திருப்பணி பல நபர்களால் 2005 ஆம் ஆண்டில் தொடக்கப்பட்டு ஒன்றுமே நடைபெறாத நிலையில் 6 வருடகாலமாக பாழடைந்த நிலையில் இருப்பதாக கூறினார். 19.06.2011 அன்று சுவாமியின் தலைமையில் ஒரு கூட்டம் நடப்பதாகவும் என்னை தலைமைப்பதவி எடுத்து கட்டிட பணியை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டார். நான் பணம் தந்து உதவி செய்கிறேன். ஆனால் எனக்கு பதவி வேண்டாம் என்று கூறினேன். நீங்கள்தான் தலைமைப்பதவிக்கு தகுந்தவர், நீங்கள் தலைமை ஏற்றால் நிச்சயம் கட்டிடம் கட்டி முடிக்கப்படும் என கூறினார்.

திரு.யோகநாதன் வேண்டுகோளுக்கிணங்க எழுபதிலும் கூடிய பொதுமக்கள் சைவ திருக்கோயில் அறங்காவலர்கள் கூடிய கூட்டத்தில் 11.6.2011 ல் ஏகமனதாக தெரியப்பட்டு தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டேன். எனது திட்டம் ஒரு வருடத்திற்குள் ஆதீன கட்டிடம் கட்டப்படவேண்டும் என்பதே. 10 நாட்களுக்குள் நான் கொழும்பு சென்று திரு.நீலகண்டனின் உதவியுடன் வரைபடம் முடிக்கப்பட்டது. இரண்டு கட்டட கலைஞர்களிடம் மதிப்பீடு எடுக்கப்பட்டது. திரு.சண்முகநாதன் தெரிவு செய்யப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டது. அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் மேற்பார்வை செய்வதாக புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து இடப்பட்டது. திரு.ஆறு திருமுருகனின் உதவியுடன் மேயர் திருமதி.யோகேஸ்வரி ஆதீனத்துக்கு அழைக்கப்பட்டு சுவாமியின் தலைமையில் வரைபடம் மேயரிடம் கையளிக்கப்பட்டது.

அடுத்த நாள் நானும் எனது மனைவியும் காரியாலயம் சென்று வரைபடத்துக்கு அங்கீகாரம் பெறப்பட்டது. தான் யோகர் சுவாமியின் பக்தர் எனவும் நல்லூரில் பிறந்து வளர்ந்ததாகவும் கூறி, தான் எந்தவித உதவியும் ஆதீனத்துக்கு செய்ய தயார் நிலையில் இருப்பதாக கூறினார். மேயர் திருமதி.யோகேஸ்வரி அவர்களின் உதவிக்கு நானும் யாழ் மக்களும் என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம். கட்டிட கலைஞர் திரு.சண்முகநாதன் அவர்கள் மிகவும் துரித கதியில் கட்டிடத்தை கட்டியிருக்கிறார். அவர் வரைபடத்தில் ஒப்புக் கொண்டதற்கு மேலாக கட்டிடத்தை தனது சொந்த செலவில் அழகுபடுத்தியுள்ளார். கட்டிடப் பொருட்கள் விலை உயர்ந்த பொழுதும் அந்த விலை உயர்வைத் தானே ஏற்றுக்கொண்டார். அவருக்கு நானும் இரண்டன் சைவ சமயத்தின் பெருமக்களும் நன்றி கூறிக் கொள்கிறோம். நான் திரு.ஆறு திருமுருகனிடம் எங்கள் சைவ சமயத்தின் சின்னமும் கடைசி யாழ் தமிழ் மன்னன் சங்கிலியனின் சின்னமுமாகிய நந்தி ஒன்று இந்த ஆதீனத்தின் முன் இருக்கவேண்டுமென கேட்டுக் கொண்டேன். அவர் ஒன்றுக்கு இரண்டாக அழகான நந்திகளை கட்டிடத்தின் மேலே வைத்து அழகு சேர்த்திருக்கிறார். அவரின் அயராத உழைப்புக்கு லண்டன் சைவ பெருமக்களின் சார்பில் நன்றி கூறிக் கொள்கின்றேன். இந்த மணிமண்டபத்துக்கு லண்டன் திருக்கோயில்களும் லண்டன் சைவ பெருமக்களும் 200 லட்சம் ரூபா வரை பங்களிப்பு செய்துள்ளார்கள். மிகுதி ரூபா 17 லட்சத்தை லண்டன் கட்டிட குழு ஒரு சிலரின் நடவடிக்கையினால் கடைசி நேரத்தில் சேகரிக்க முடியாமல் போய்விட்டது. நான் திருமுருகனிடம் அவர்களை இந்த மிகுதிப்பணம் ரூ.17 லட்சத்தை இந்து மாமன்றம் பொறுப்பேற்று கட்டிடத்தை பொறுப்பேற்றுத் தருமாறு கேட்டேன்.

*(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை இந்து மாமன்றத்



## தலைவரின் செய்தி

"ஈழத்திரு நாட்டில் சைவத்தமிழர்களின் பெரும் சொத்தாக விளங்வது, நல்லை திருஞான சம்பந்த ஆதீனம். நல்லை ஆதீனத்தை நிறுவிய முதலாவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் (மணி பாகவதர்) அவர்களின் திருவடியை நினைத்து வணங்குகிறேன். அப்பெருமானார் செய்த பெருந்தொண்டினால் நல்லை திருஞானசந்தர் ஆதீனம் இன்று எழுச்சி பெற்று விளங்குகின்றது. இவ் ஆதீனத்தின் வளர்ச்சியில் அகில இலங்கை இந்து மாமன்றம் அன்றுதொட்டு இன்றுவரை தன்னாலான பங்களிப்பினை செய்து வருகின்றது. இன்றைய ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தன் வாழ்வை அர்ப்பணித்து ஆதீனத்தை வளர்த்து எடுத்து வருகிறார்கள். அவர்களுக்கு சைவ உலகம் என்றும் கடமைப்பட்டிருக்கின்றது. அகில இலங்கை இந்து மாமன்றத்தின் புரவலராக விளங்கும் ஆதீன சுவாமிகள் மாமன்றத்தால் நடாத்தப்படும் சகல வைபவங்களிலும் தவறாது கலந்து கொள்வார். இந்து மாமன்றம் நடத்திய சைவமாநாடுகள் மற்றும் வரலாற்று நிகழ்ச்சிகள் அனைத்திலும் ஆதீன முதல்வர் பங்குபற்றி சிறப்பித்து ஆசி நல்கி வருவது நாம் செய்த பாக்கயம் எனலாம்.

யாழ் மண்ணில் எமது சமயத்தின் மகத்துவத்தைச் சான்று பகரும் நல்லூர் சிவபூமியில் இருக்கும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் மடாலயக் கட்டடத்தின் நிலைமையைக் கண்டு சைவமக்கள் கவலைப்பட்ட தருணத்தில் இலண்டன் வாழ் எமது உடன் பிறப்புக்கள் கடமை உணர்வுடன் செய்த நற்கைங்கரியத்தால் இன்று நாங்கள் எல்லோரும் பெருமைப்படும் வகையில் புதிய மடாலாயக் கட்டம் நிர்மாணிக்கப்பட்டுத் திறந்துவைக்கப்படுகின்றது.

திரு. சூரிப்பிள்ளை பாலசிங்கம் தலைமையிலான இலண்டன் நல்லை ஆதீனக் கட்டடக் குழு இக் கட்டடத்தைக் கட்டுவதற்காக பெருந்தொகையான நிதியினை தங்களின் தளரா முயற்சியால் சேர்த்து மாமன்றத்திற்கு அனுப்பி, புதிய கட்டடத்தை நிர்மாணிக்க, மாமன்றத்திற்கு அவர்கள் வாய்ப்புத்தந்தது திருவருளே.

இப்பணியை எம்மாலானமட்டும் சிறப்பாக நிறைவேற்றி இருக்கிறோம். அதற்கு மாமன்றக் குழுவில் பணியாற்றிய சகலருக்கும் குறிப்பாக கடந்த இரு தசாப்தங்களா எங்களை வழிநடத்தி வரும் மாமன்ற நம்பிக்கை பொறுப்பாளர் சபைத்தலைவர் இறைசிரோரத்தினம், மனிதநேய மாமணி வி. கயிலாசபிள்ளை ஐயா அவர்களுக்கும், மற்றும் பிரதித்தலைவர் திரு. மா. தவயோகராஜா, உபதலைவர் திரு. சின்னத்துரை தனபாலா, உபதலைவர் திரு. சி. த. சி. அருளானந்தன், பொருளாளர் திரு. வே. கந்தசாமி, பொதுச் செயலாளர் கலாநிதி முத்தையா கதிர்காமநாதன் ஆகியோருக்கும் நன்றி கூறும் அதேசமயம் எமது யாழ். பணிமனையிலிருந்து இக் கட்டட வேலைகளைக் கண்ணும் கருத்துமாய் கவனித்து வந்த மாமன்ற உபதலைவரும், இந்து ஆராய்ச்சி நிலையக் கௌரவ இயக்குநருமான கலாநிதி சைவஞானபானு செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களுக்கும் அவருக்கு பல வழிகளில் ஒத்தாசை தந்த யாழ். பணிமனை நிர்வாக அலுவலர் திரு. வீ. ஜெயசிங்கம் அவர்களுக்கும் எமது பழுவைக் குறைத்தமைக்கு சிறப்பான நன்றி கூறவேண்டும்.

இந்த மடாலயக் கட்டடத்திற்குக் காணி தந்த மழவராயர் நம்பிக்கப் பொறுப்பின் சார்பில் எமது குழுவுடன் நம்பிக்கைப்பொறுப்பாளர்களில் ஒருவரான திரு. ஸ்ரீபுருஷோத்தமன் மழவராயர் இணைந்து ஒத்துழைத்தமைக்கும் நன்றி கூற வேண்டும். நல்லை ஆதீனத்தின் எதிர் கால நன்மை கருதி சுவாமிகளின் ஆணைப்படி ஆதீன அறக்கட்ளை உருவாக்கப்படுகின்றது. ஆதீன வளர்ச்சிக்கு அறக்கட்டளை உறுப்பினர்கள் தொடர்ந்து அரசணாக நின்று செயற்படுவார்கள் எனக் கருதுகின்றோம். இந்தியாவில் உள்ள ஆதீனங்களுக்கு ஏராளமான சொத்துக்கள் உண்டு. இவ் ஆதீனத்துக்கு நிரந்தர வருவாய்க்கான சொத்துக்கள் ஏதும் இதுவரை இல்லை. ஆதீன செயற்பாடுகள் அனைத்தும் எவ்வித குறைபாடுகள் இன்றி நடைபெ்ற இவ் அறக்கட்டளை சிறப்பாக இயங்குவதும் இலண்டன் வாழ் எமது சகோதரங்களின் உதவியில் தங்கி இருக்கும். அதற்கும் நிச்சயம் அவர்கள் உதவுவார்கள் என்பதில் எமக்குப் பலமான நம்பிக்கையிருக்கிறது.

இவற்றுக்கும் மேலாக எமது யாழ். பணிமனை மூன்று மாடிக்கட்டடம், கீரிமலை மடம் முதலிய கட்டட வேலைகளைக் பொறுபபேற்று வெறும வர்த்தகரீதியில் நோக்காமல் சேவையுணர்வுடன் எமது பணிகளில் பங்காளராக உதவிவரும் ஜெயசன்யன் நிறுவன உரிமையாளர் திரு. க. சண்முகநாதன் இக்கட்ட வேலைகளையும் அதேபாணியில் பொறுப்பேற்று நிறைவேற்றிய சேவையை மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மறவாது, ஆனால் முக்கியமான, தனிப்பட்டமுறையில் சிறியேன் குறிப்பிடவேண்டியது ஒன்று இருக்கின்றது. இலண்டன் நல்லூர் ஆதீனக் கட்டடக்குழுத் தலைவர் திரு. சூ. பாலசிங்கம், பொருளாளர் திரு. வே. சிவசுந்தரம் ஆகியோருக்குக் கடந்த சில மாதங்களாகச் சிறியேன் கொடுத்த தொந்தரவை அவர்கள் பொறுமை காத்து, ஒத்துழைத்து, இக்கட்டடப் பூர்த்திக்கு தந்த ஆதரவுக்கு அவர்களுக்கும் அவர்களின் குழுவிற்கும் என்றும கடமைப் பட்டிருக்கின்றேன்.

புதிய மடாலயத் திறப்பு விழாவிற்கு மிளிர் ஊட்டும் வகையில் அன்பர் திரு. ந. சச்சிதானந்தன் மற்றவர்களில் குறிப்பாக அன்பர் கலாநிதி அ. தேவகாயம், கலாநிதி ஆறுதிருமுருகன் ஆகியோரின் உதவியுடன், இத்திறப்பு விழாவையொட்டி சிறப்பு மலரை இலண்டன் ஆதீனக் கட்டடக் குழு சார்பில் தயாரித்து வெளியிட எடுத்துவரும் முயற்சிகளையும் மெச்ச விரும்புகிறேன். ஒரு சிலரை பெயர் குறிப்பிட்டுப் பாராட்டினாலும் எந்த ஒரு தனிநபரும் இக்கட்டடப் பூர்த்திச் சாதனைக்குரிய பெருமையை கோரமுடியாது. ஏன் என்றால், எல்லோரும் சேர்ந்து எடுத்த கூட்டுமுயற்சியில் திரண்டபலன் இது. அதற்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ சிவகாமி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானை என்றும் பிரார்த்தித்துக் கொண்டேயிருப்போமாக.

**கந்தையா நீலகண்டன்**
தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டடக் குழுப் பொருளாளரின் நன்றி கலந்த வாழ்த்துக்கள்



நல்லை ஆதீன மடாலயம் புனருத்தாரணம் செய்து இன்று இந்து மக்கள் பெருமைப்படும் வகையில் ஒரு புதிய கட்டிடம் நிறைவு பெற்றதையிட்டு நாங்கள் நிம்மதியடைகிறோம்.

இந்த முயற்சியில் ஈடுபட்ட எல்லோரும் சேர்ந்து செய்த கூட்டுமுயற்சியின் விளைவுதான் இக்கட்டிடம். இதற்குப் பண உதவி தந்த யாவருக்கும், இக்கட்டிட அமைப்பை பொறுப்பேற்று வழிநடத்திய அகில இலங்கை இந்து மாமன்றம், கட்டிட ஒப்பந்தக்காரர் திரு சண்முகநாதன், லண்டன் நல்லை ஆதீன கட்டடக்குழுவினர் சகலருக்கும் நன்றி கூற விரும்புகிறேன்.

**வேலுப்பிள்ளை சிவசுந்தரம்**
பொருளாளர்,
இலண்டன் நல்லை ஆதீன கட்டடக் குழு.

(கிடைத்த நன்கொடைகளின் விபரம் அடுத்த பக்கத்தில்)

# Message from Vice President
## London Nallai Aatheenam Building Committee



I have immense pleasure in sending this message of felicitation and well wishes on the occasion of the ceremonial opening of the monasatery (Madalayam) building on 23rd June 2013 which was constructed with the blessings of the Shrila Shri Somasunthara Thesiga Gnanasambantha Paramachariya Swamigal of Nallai Aatheenam, Jaffna with the financial assistance of Saivites and the Trustees of temples in the United Kingdom with the magnanimous support and co-operation of the All Ceylon Hindu Congress in Sri Lanka.

Nallai Atheenam was founded in 1966 by the present Swamigal's Guru His Holiness Shrila Shri Swaminatha Desiga Gnanasambantha Paramachariya Swamigal. This Atheenam is the only one of its kind in Sri Lanka and is modelled on the lines of the traditional monasteries of South India.

Infact, the head of Nallai Atheenam is considered to be as the spiritual leader of the Hindu Saivites in Sri Lanka. Nallai Atheenam's Swamigal renders his blessings to the Hindu Community to enhance and enrich Hindu traditions and cultural values.

Indeed, this new monastery (Madalayam) building for Atheenam's Swamigal will immensly help Hindus in Sri lanka to participate in several religious activities and community service with greater vigour.

The All Ceylon Hindu Congress and several individuals of eminence and erudition in Sri Lanka and abroad will continue to render their fullest support for the betterment and upliftment of humanity in their sphere of religious activities.

Further, the opening of this building is indeed timely and well deserved gesture on the part of the saivites and undoubtedly will gioe added strength and source of encouragement to the Hindu Community globally.

May the Almighty Lord Shiva shower His Divine blessings to Swamigal abundantly and grant him good health, strength and peace of mind to continue with his Divine service to humanity.


**Dr. S. T. S. Somasegaram**
*Vice President-London Nallai Aatheenam Building Committee,*
*Vice President London Sivan Kovil*
*Board of Trustees*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் புதிய மடாலயம் கட்ட நன்கொடை வழங்கியவர்களின் விபரம்



| நன்கொடை வழங்கியவர்கள் | ரூபா சதம் |
|---|---|
| ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம் - இலண்டன் | 1,920,200.00 |
| வைத்திய கலாநிதி. எஸ். சோமசேகரம் - இலண்டன் | 1,920,200.00 |
| அகில இலங்கை இந்து மாமன்றம் | 1,714,190.00 |
| திரு. வே. சிவசுந்தரம் - இலண்டன் | 1,249,666.16 |
| திரு. சூரிப்பிள்ளை பாலசிங்கம் - இலண்டன் | 1,152,120.00 |
| ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் - இலண்டன் | 1,017,706.00 |
| உயர் வாசல் குன்று முருகன் ஆலயம் - லண்டன் | 960,100.00 |
| ஸ்டோன்லீக் அம்மன் ஆலயம் | 960,100.00 |
| விம்பிள்டன் பிள்ளையார் ஆலயம் | 960,100.00 |
| ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயம் - கனடா | 465,567.85 |
| நாகபூசனி அம்மன் ஆலயம் - லண்டன் | 395,710.00 |
| ஸ்ரீ சக்தி விநாயகர் ஆலயம் - ஹரோ | 384,040.00 |
| உலக சைவ பேரவை | 300,000.00 |
| கனக துர்கை அம்மன் ஆலய பக்தர்கள் | 278,813.04 |
| திருமதி. என். யோகநாதன் | 240,217.02 |
| இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலயம் | 211,222.00 |
| வைத்திய கலாநிதி. திருமதி. சிறிதரன் | 193,556.16 |
| வைத்திய கலாநிதி. திருமதி. இராதாகிருஷ்ணன் | 192,020.00 |
| திரு. பரமநாதன் | 192,020.00 |
| பத்திரகாளி அம்மன் ஆலயம் - வல்றம்ஸ்றோர் | 192,020.00 |
| நலன் விரும்பி | 192,020.00 |
| திரு. வீ. ஆனந்த தியாகர் | 192,020.00 |
| திரு. வீ. ஆர். பத்மநாதன் | 192,020.00 |
| திரு. வீ. ஆர். இராமநாதன் | 192,020.00 |
| வைத்திய கலாநிதி. அ. தேவசகாயம் | 192,020.00 |
| திரு. லோகேஸ்வரன் | 192,020.00 |
| திரு. சன் நவரட்னம் | 192,020.00 |
| வைத்திய கலாநிதி. சிவதாசன் | 192,020.00 |
| திரு. ஜெயசீலன் - டூட்டிங் | 192,020.00 |
| வைத்திய கலாநிதி ராஜசுந்தரம் | 192,020.00 |
| சாக்னா ஜூ வலர்ஸ் | 192,020.00 |
| திரு. எம். தங்கராஜா - குலோபல் எக்ஸ்சேஜ் லிமிடெட் | 192,020.00 |
| திருமதி. கருணா இரட்னராஜா | 192,020.00 |
| திரு. ஆர். டி. இரட்னசிங்கம் | 192,020.00 |
| திரு. என். குகதாசன் | 192,020.00 |
| திரு. பரமேஸ்வரன் | 192,020.00 |
| திரு. அரியரட்னம் ஈஸ்வரமோகன் | 192,020.00 |
| திரு. ஆர். குகவரதன் | 192,020.00 |
| திரு. எஸ். புத்திரசிகாமணி | 192,020.00 |
| திரு. எஸ். சிறிகாந்தா | 192,020.00 |
| திரு. எஸ். செந்தில்செல்வம் | 115,212.00 |

| நன்கொடை வழங்கியவர்கள் | ரூபா சதம் |
|---|---|
| திரு. சி. சிதம்பரப்பிள்ளை | 100,000.00 |
| திரு. சம்பந்தமூர்த்தி முருகமூர்த்தி | 100,000.00 |
| திரு. என். பாலசுப்ரமணியம் | 96,202.02 |
| திரு. என். சச்சிதானந்தன் | 96,010.00 |
| திரு. எஸ். பிரேமநாதன் - ஸ்பைஸ் லேண்ட் | 96,010.00 |
| திரு. எம். கேதீஸ்வரன் | 96,010.00 |
| திரு. கே. சபாரட்னம் | 96,010.00 |
| திரு. எஸ். ஜெயனந்தன் | 96,010.00 |
| ரத்தி ஜூவலர்ஸ் | 96,010.00 |
| சீறிசா ரெக்குரெட்மென்ட் லிமிட்டெட் | 96,010.00 |
| வைத்திய கலாநிதி. பாலசந்திரன் | 96,010.00 |
| திரு. கே. ரங்கநாதன் | 96,010.00 |
| திரு. இராமசந்திரன் | 96,010.00 |
| திரு. ஏ. பத்மநாதன் | 96,010.00 |
| திரு. பீ. தவநாதன் | 86,409.00 |
| திரு. கனகசுந்தரம் | 76,808.00 |
| திரு. வீ. ஆர். லோகநாதன் | 57,606.00 |
| திரு. ஆர். பரமகுமார் | 57,606.00 |
| திரு. கனகசபை நடராஜா | 48,005.00 |
| திரு. எஸ். தம்பு | 48,005.00 |
| திரு. கணேசமூர்த்தி | 48,005.00 |
| ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய குருக்கள்மார் | 39,364.10 |
| என். ஜி. மகேஸ் ஜூவலர்ஸ் | 38,596.02 |
| வைத்திய கலாநிதி. வீ. பாலசேகரம் | 38,404.00 |
| திரு. கே. மனோகரன் | 38,404.00 |
| நலன் விரும்பி | 38,404.00 |
| திரு. ஜி & ஏ. நற்குணன் | 38,404.00 |
| திரு. பீ. தவநாதன் | 38,404.00 |
| திரு. கனகசபை - குலோபல் | 28,803.00 |
| திரு. தனிகைவேலன் | 19,202.00 |
| ஸ்டேசன் சுப்பர் ஸ்டோர்ஸ் | 19,202.00 |
| வைத்திய கலாநிதி. சிவகுமார் | 19,202.00 |
| டொச் புலோவும் லிமிட்டெட் | 19,202.00 |
| திரு. ஈ. சுந்தரலிங்கம் - கிராவெளி அம்மன் | 19,202.00 |
| திரு. வேலாயுதபிள்ளை | 19,202.00 |
| திரு. அருள்தாஸ் | 19,202.00 |
| காயத்திரி சில்க்ஸ் - ஈஸ்ட்ஹாம் | 9,601.00 |
| திரு. பீ. சந்திரகுமார் (6 குமார்) | 9,601.00 |
| நன்கொடை சீட்டு வசூல் | 865,403.42 |
| | |
| மொத்தம் | 21,947,738.79 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வரலாற்றுக் குறிப்பு

# இலங்கையில் முதன்முதலாக சைவ ஆதீனத்தை ஸ்தாபித்த பெருமைக்குரிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்



யாழ் வண்ணை வைஸ்தீஸ்வரன் ஆலயத்தின் வடக்கு வீதியில் வாழ்ந்து வந்த சிவப்பிராமணர் குலத்தைச் சேர்ந்த செல்லையா ஐயர் கனகாம்பாள் தம்பதியினருக்கு 1918ஆம் ஆண்டு பெப்ரவரி 8ஆம் திகதியன்று மூத்த புதல்வராகப் பிறந்தவர்தான் சிவசுப்பிரமணிய ஐயர்.

இவர் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் கல்வியை மேற்கொண்டு வரும் வேளையில் ஆங்கிலம், சமஸ்கிருதம் போன்ற பாடங்களை தனிப்பட்ட வகையில் கற்று வந்தார். அப்போது இவரது வீட்டிற்கு அடுத்த வீட்டில் இரு பெண் பிள்ளைகளுக்கு சங்கீத ஆசிரியர் ஒருவரை அழைத்து சங்கீதம் கற்பித்தார்கள். இவரும் வீட்டில் இருந்தவாறு அதனை ஆர்வத்துடன் கேட்டு வந்தார். சங்கீதத்தில் தீவிர ஈடுபாடு ஏற்படுவதற்கு இதுவே காரணமாக அமைந்துவிட்டது. கேள்வி ஞானத்தால் இவருக்கு இசைத்திறமை ஏற்பட்டது. சித்திரம் வரைவதிலும் இவர் திறமை பெற்றிருந்தார். இவர் ஒழுங்காகப் படித்து அரசாங்க உத்தியோகம் பெற வேண்டும் என இவரது தந்தையார் விரும்பியதால், இவர் சித்திரம் வரைவதையும் சங்கீதம் கற்பதையும் வெறுத்து வந்தார்.

இவரது மாணவப் பருவத்தில் சுவாமி விபுலானந்தர் முதலான பேரறிஞர்களை ஆசிரியர்களாக அடையப் பெறும் வாய்ப்புக் கிடைத்தது. அதன் காரணமாக நல்லதொரு சூழ்நிலையில் அறிவு வளர்ச்சி பெறவும் முடிந்தது.

தினந்தோறும் பாடசாலை ஆரம்பமாகும் போதும், நிறைவுபெறும் நேரத்திலும் தேவாரம் பாடும் பொறுப்பு இவருக்கு கிடைத்தது. யாழ் இந்துக் கல்லூரியில் உயர்கல்வியைத் தொடர்ந்த இவர் பதினெட்டாவது வயதில் சங்கீதத்தை முறையாகப் பயின்றார். அந்நாளில் யாழ்ப்பாணத்தில் கதாப்பிரசங்க நிகழ்ச்சிகள் அடிக்கடி இடம்பெற்று வந்தன. அதனையும் இவர் ஆர்வத்துடன் கேட்டு வந்தார். இதனால் கதையும் பாட்டும் கலந்து குட்டிக் கதாப்பிரசங்கங்களை தனது நண்பர்களுக்கு செய்து காட்டத் தொடங்கினார். பதினெட்டாவது வயதிலே வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் ஆவணி மூல நட்சத்திர நாளன்று முதலாவது கதாப்பிரசங்கத்தை நிகழ்த்தியிருக்கிறார்.

பாடசாலைக் காலத்தில் நாடகங்களிலும் நடித்து வந்துள்ளார். பின்னாளில் மாணவர்களுக்கு நாடகக் கலையில் பயிற்சியளிக்கும் சந்தர்ப்பமும் இவருக்கு கிடைத்தது. பல நாடகங்களை தயாரித்தும் வழங்கியிருக்கிறார். அதுமட்டுமன்றி 'நர்த்தன கலாமன்றம்' என்ற பெயரிலான நிறுவனத்தை சொந்தமாக நடத்திவந்ததுடன் அதன் ஊடாக இலவசமாகவே நடனப் பயிற்சியை அளித்து பல நிதிகளுக்கும் உதவி வந்துள்ளார். சில வருடங்கள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியதன் மூலம் கலை மற்றும் இசைத்துறையில் பெரும் பங்களிப்பை வழங்கியிருப்பதை சிறப்பாகக் குறிப்பிடலாம்.

இவருக்கு இலங்கை வானொலியில் பாடுவதற்கும் கதாப்பிரசங்கம் செய்வதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதன்பின் கொழும்பு மற்றும் மலையக பகுதிகளில் மட்டுமல்ல மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலுமிருந்தும் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவதற்கு அழைப்புகள் வந்தன. இவரது சிறப்பான கதாப்பிரசங்கத்தை கேட்ட பெரியவர்கள் இவரை 'மணிபாகவதர்' என செல்லமாக அழைக்கத் தொடங்கினர்.

இவர் 1940ஆம் ஆண்டில் இல்லற வாழ்வில் இணைந்து கொண்டார். தாய்மாமன் மகளாகிய யோகம்மாள் என்பவர் வாழ்க்கைத் துணைவியானார். இவர்களுக்கு முருகானந்த சர்மா என்ற பெயரில் புதல்வன் ஒருவர் இருக்கிறார். இவர் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் துறைகளிலும் சிறந்து விளங்கியதால் மதுரை ஆதீனம் 'முத்தமிழ்மணி' என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்திருக்கிறது. மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தின் ஆடி வீதியில் நடைபெற்ற பாராட்டு விழாவொன்றில் இவருக்கு 'புலவர் மணி' என்ற பட்டமும் கிடைத்தது.

நல்லை முருகப் பெருமானின் அருள்வாக்கிற்கு அமைய நல்லை நகரிலே சைவ ஆதீனமொன்றை அமைக்க வேண்டும் என்ற பெரு விருப்பும், இல்லற வாழ்விலிருந்து நீங்கி துறவறத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் அமையப் பெற்றவராக, மதுரை திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகளிடம் சென்று 1966 ஆடிக் கார்த்திகை நட்சத்திர நாளில் துறவற நிலை பெற்று சீடரானார். ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் என்ற துறவற நாமாகரணம் பெற்றவராக இலங்கை திரும்பி, அதே ஆண்டு (1966) ஆவணி 6ஆம் நாளன்று யாழ் நல்லூரில் ஆதீனத்தை ஸ்தாபித்து முதலாவது குருமகா சந்நிதானமாகவிருந்து சைவமக்களுக்கு சமய, ஆன்மீகப் பணிகளை மேற்கொண்டு வந்தார்.


சுவாமிகள் 1981 ஏப்ரல் 10ஆம் திகதி பங்குனி திருவாதிரை நட்சத்திர நாளன்று மகா சமாதியானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை ஆதீன முதல்வருடன் ஒரு நேர்காணல்

**(சந்திப்பு: அ. கனகசூரியர்)**



யாழ். நல்லூரில் அமைந்துள்ள திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் இரண்டாவது குருமகா சந்நிதானமாகவும் இப்போதைய முதல்வராகவும் விளங்கும் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் அவர்களை அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பாக நேர்கண்டு உரையாடுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

சுவாமிகளது வாழ்க்கை வரலாற்றைப் பற்றி முதலில் கேட்டறிந்து கொண்டோம். நல்லூர் கைலாசபிள்ளையார் கோயில் சுற்றாடலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவரது குடும்பத்தில் ஐந்து ஆண் பிள்ளைகளும், ஒரு பெண் பிள்ளையும் இருக்கிறார்கள். இவர்களுள் ஐந்தாவது பிள்ளையாகப் பிறந்த இவருக்கு பெற்றோரால் சூட்டப்பட்ட பெயர் சுந்தரலிங்கம். கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வியை மேற்கொண்டார். தனது பத்தாவது வயதிலிருந்தே அதாவது ஐந்தாம் வகுப்பு படிக்கும் காலத்தில் சமயப்பற்று மிக்கவராகவும், ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டவராகவும் விளங்கினார். அந்த வேளையில் இவர் சிவதீட்சையையும் பெற்றுக் கொண்டமையால் சமய ஒழுக்க விழுமியங்களை முன்னெடுத்துச் செல்லக்கூடிய பக்குவ நிலையை அடையக்கூடியதாக இருந்தது.

**நல்லை ஆதீனத்துடன் ஏற்பட்ட தொடர்புகளைப்பற்றி சொல்வீர்களா? என்று கேட்டதற்கு இவ்வாறு பதிலளித்தார்.**

"நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள 'கந்தகோட்டம்' என்ற பெயரிலான இல்லத்தில் ஆதீனத்தின் செயற்பாடுகள் இடம்பெற்று வந்த காலப்பகுதி அது. ஆதீனத்தின் முதலாவது குருமகா சந்நிதானம் அவர்கள் நடத்திவந்த பஜனை மற்றும் தேவார வகுப்புகளில் நானும் கலந்து கொள்வது வழக்கம். அவர் ஆற்றிவந்த சமய சொற்பொழிவுகளையும் நான் ஆவலுடன் கேட்டு வந்தேன். அதனால் சமய, ஆன்மீக சிந்தனைகளில் எனது நாட்டம் பெரிதும் மேலோங்கி இருந்தது. நல்லை ஆதீனத்திற்கு அடுத்த வாரிசாக என்னை நியமிக்கலாம் என்று முதலாவது குருமகா சந்நிதானம் மனதில் நினைத்தாரோ தெரியவில்லை, அவ்விதமான ஒரு நிலைக்கு பக்குவப்படவைக்கும் வகையில் நான் அறியாமலேயே என்னை வழிநடத்திச் சென்றிருக்கிறார். அந்த வகையில் 1979ஆம் ஆண்டு 'தம்பிரான்' என்ற பட்டத்துக்குரிய நிலைக்கு என்னை நியமனம் செய்து, சில மாதங்களின் பின் 'ஆதீன இளவரசு' என்ற பதவி நிலையை எனக்கு வழங்கியிருந்தார். 'இளவரசு' என்பது ஆதீனத்தின் அடுத்த குருமகா சந்நிதானம் என்ற பதவிநிலைக்குரியதாகும். 1981ஆம் ஆண்டில் முதலாவது குருமகா சந்நிதானம் திடீரென நோய்வாய்ப்பட்டு சமாதிநிலையடைந்தார். இதனால் உடனடியாகவே ஆதீனப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டது. இரண்டாவது குருமகா சந்நிதானமாக நியமனம் பெற்றேன்".

**நல்லை ஆதீனத்தின் செயற்பாடுகள் பற்றி கேட்டதற்கு பின்வருமாறு சொன்னார்.**

"ஆதீனத்தில் சிறுபிள்ளைகளுக்கான வகுப்புகளை நடத்தி வந்துள்ளோம் இதுதவிர பண்ணிசை வகுப்புகள், சங்கீதம், பரதநாட்டியம் போன்ற கலைகளில் பயிற்சி வகுப்புகளும் யோகாசன பயிற்சிகளையும் வழங்கி வந்துள்ளோம். ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகளையும் ஏற்பாடு செய்து நடத்தியிருக்கிறோம். போர்க்காலச் சூழ்நிலைகளினால் இத்தகைய பயிற்சி வகுப்புகளை நடத்துவதில் தடைகள் ஏற்பட்டன. அத்துடன் இந்து மத நிறுவனங்கள் பல அண்மைக் காலத்திலிருந்து இதுபோன்ற பயிற்சி நெறிகளை ஏற்பாடு செய்து நடத்திவருவதால், அத்தகைய பயிற்சி நெறிகளை ஆதீனம் மீண்டும் தொடங்குவதன் மூலம் அதற்கு போதியளவு பயிற்சியாளர்கள் வந்து சேருவார்கள் எனவும் எதிர்பார்க்க முடியாது. அத்துடன் ஆதீனம் நடத்திவந்த பயிற்சி நெறிகளுக்குரிய செலவினங்களை பயிற்சியில் பங்குகொள்பவர்களிடமிருந்து கட்டணமாகப் பெற்றுக் கொள்ளும் நிதியிலிருந்தே சமாளிக்க வேண்டிய நிலையும் இருக்கிறது. சிவதீட்சை வழங்கல் குருபூசைகள் மற்றும் சமய விழாக்களை அவ்வப்போது நடத்தி வருகிறோம்."

**நல்லை ஆதீனம் மதுரை ஆதீனத்தின் கிளையாகவே தொடங்கப்பெற்றது என்பது பலரும் அறிந்ததே. இது விடயத்தில் இப்போதுள்ள நிலையையும், தென்னிந்தியாவிலுள்ள ஆதீனங்களுடன் நல்லை ஆதீனத்தையும் ஒப்பிட்டு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

"எங்களது முதலாவது குருமகா சந்நிதானம், அப்போது மதுரை ஆதீனத்தின் குருமகா சந்நிதானமாகவிருந்த ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளை குருவாகக் கொண்டு, துறவற வாழ்க்கையை மேற்கொள்ளும் வகையில் அவரது சீடனாகி, சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் என்ற நாமத்தைப் பெற்றுக் கொண்டு 1966ஆம் ஆண்டில் மதுரை ஆதீனத்தின் கிளையாகவே நல்லை ஆதீனத்தை ஸ்தாபித்தார். கிளை நிறுவனம் என்ற வகையில், மதுரை ஆதீனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்க வேண்டிய நிலையும், எந்தவொரு விடயத்திலும் மதுரை ஆதீனத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியமும் இருந்தது. இலங்கையிலுள்ள ஒரேயொரு சைவ ஆதீனமாக நல்லை ஆதீனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததால், சைவ மக்களது ஆன்மீக தேவைக்கும், அவர்களது திருப்திக்கும் அமைய இயங்கவேண்டிய நிலையும், காலதாமதமின்றி சைவமக்களது கருமங்களை நிறைவேற்ற வேண்டிய அவசியமும் காணப்பட்டது. எனவேதான் 1970ஆம் ஆண்டிலிருந்து நல்லை ஆதீனம் தனித்துவமாக இயங்கத் தொடங்கியது.

இந்தியாவிலுள்ள ஆதீனங்கள் அனைத்தும் வசதி படைத்தவை. நாட்டின் சமய நெறிமுறை, சம்பிரதாயம் மற்றும் கலாசாரத்திற்கு பொருத்தமான வகையில் இயங்குகின்றன. பலவிதமான கட்டுப்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றன. அங்குள்ள ஆதீனங்களது முதல்வராக விளங்கும் குருமகா சந்நிதானம் வெளிக்கள நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வது மிகக்குறைவு. தம்பிரான், இளவரசு போன்ற பதவிநிலைகளில் உள்ளவர்கள் ஒவ்வொரு ஆதீனத்திலும் இருக்கிறார்கள். ஒவ்வொரு ஆதீனமும் ஆலயங்களையும், இந்துமத நிறுவனங்களையும் பராமரித்து நிர்வகிக்கும் செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றன. இலங்கையில் ஒரேயொரு சைவ ஆதீனம் இது என்பதால் அரச மற்றும் பொது நிகழ்வுகளில் கலந்துகொள்ள மதத்தலைவர்களை அழைக்கும்போது, இந்து மதத்துடன் தொடர்புபட்டது என்பதால் எங்கள் ஆதீனத்துக்கும் அழைப்பு வருவது இப்போது வழக்கமாகிவிட்டது. அந்தவகையில் வைபவ ஏற்பாட்டாளர்களையும், இந்து மக்களையும் திருப்திப்படுத்தும் வகையிலும், நிகழ்வின் சிறப்புக்கு ஆசி வழங்க வேண்டியிருப்பதாலும் அங்கு நேரில் சென்று கலந்துகொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.''

**நல்லை ஆதீனம் இப்போது புதுப்பொலிவு பெற்றுள்ளது. இதுபற்றி ஆதீனத்தின் கடந்தகால வளர்ச்சி நிலையுடன் இணைந்த வகையில் தாங்கள் சொல்ல விரும்புவது என்ன?**

''1966ஆம் ஆண்டில் கோயில் வீதி இல்லத்தில் ஆதீனம் ஸ்தாபிக்கப்பட்டமை, 1972ஆம் ஆண்டில் புத்தூர் மழவராயர் நம்பிக்கை நிதியத்தினால் வழங்கப்பட்ட இடத்தில் ஆதீன செயற்பாடுகள் ஆரம்பமாகின என்பதெல்லாம் வரலாற்றுப் பதிவுகள். முதலாவது குருமகா சந்நிதானம் 1981ஆம் ஆண்டு பங்குனி மாதத்து திருவாதிரை நட்சத்திர நாளில் மகா சமாதியானார். ஆதீன வளவில் இவரை அடக்கம் செய்த இடத்தில் சமாதிக் கோயிலொன்று ஸ்தாபிக்கப்பட்டு, அங்கு சிவலிங்கம் மூலமூர்த்தியாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடாற்றப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருடமும் பங்குனி திருவாதிரை நட்சத்திர நாளில் குருபூசை வைபவம் நடத்தப்பட்டு வருகிறது. ஆதீனம் ஸ்தாபிக்கப்பட்ட தினமாகிய ஆவணி மாதத்தின் கார்த்திகை நட்சத்திர நாளன்று வருடந்தோறும் பீடாரோஹன விழா நடத்தப்பட்டு வருகிறது. எண்பதுகளின் இறுதியில் ஆதீனத்திற்கான புதிய கலாமண்டபமொன்று அமைக்கப்பட்டது. 2000 ஆவது ஆண்டில் ஆசிரியர் சிவப்பிரகாசம் அவர்களது அன்பளிப்பாக முதலாவது ஆதீன சுவாமிகளது வெண்கலச் சிலையொன்று அமைக்கப்பட்டு ஆதீன முன்றலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

ஆதீனம் இயங்கிவந்த கட்டிடம் பழமை வாய்ந்ததாகவும், பழுதடைந்த நிலையிலும் சில செயற்பாடுகளுக்கு வசதி குறைந்ததாகவும் காணப்பட்டதால், புதிய கட்டிடமொன்று தேவைப்பட்டது. இதுபற்றி இந்து மக்களிடம் உதவி கேட்டு வந்தோம். வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர் மக்களிடமும் வேண்டுகோள் விடுத்து வந்தோம். பெரிய பிரித்தானியா வாழ் இந்து மக்கள் இது விடயத்தில் நிதியுதவி செய்ய முன்வந்தனர். இங்கு நிலவிய போர்க்காலச் சூழ்நிலைகளினால் அவர்களது முயற்சிகள் பலதடவைகள் பின்தள்ளப்பட்டு வந்தன. எனினும் 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து அதற்கான செயற்பாடுகள் ஆரம்பமாகின. பெரிய பிரித்தானியாவில் வாழும் சைவ அன்பர்கள் ஒன்றிணைந்து நல்லை ஆதீன கட்டிட புனருத்தாரண நிர்வாகக் குழுவொன்றை தெரிவு செய்து அதன் ஊடாக கட்டிட அமைப்பு செயற்பாடுகளை பல இலட்சம் ரூபா செலவில் முன்னெடுத்துச் சென்றுள்ளார்கள். இந்த செயற்பாடுகளுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் இணைப்பாளராக இருந்ததுடன் மாமன்ற நிர்வாகத்தினரால் கட்டிட வேலைகளும் மேற்பார்வை செய்யப்பட்டு வந்தது. புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு மற்றும் நிலை வைக்கும் வைபவம் என்பனவற்றுக்கு பெரிய பிரித்தானியாவிலிருந்து கட்டிட புனருத்தாரண குழுவின் உறுப்பினர்களும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உறுப்பினர்களும் நேரில் வருகை தந்து கலந்து சிறப்பித்துள்ளார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் அகில இலங்கை இந்து மாமன்றம் செய்துள்ள மற்றுமொரு பேருதவியையும் சொல்லிவைக்க விரும்புகிறேன். கடந்த சில வருடங்களுக்கு முன் பெறுமதி வாய்ந்த மோட்டார் வண்டியொன்றை இந்து மாமன்றம் ஆதீனத்தின் தேவைக்காக அன்பளிப்பாக வழங்கியிருந்தது. இதுதவிர மோட்டார் வண்டியின் பராமரிப்பு செலவுக்காக மாதாந்தம் நிதியுதவி வழங்கிவருவதையும் சிறப்பாகச் சொல்ல வேண்டும்''

**ஆதீனம், சஞ்சிகைகள் மற்றும் நூல் வெளியீட்டுப் பணியில் எத்தகைய செயற்பாட்டை மேற்கொண்டுள்ளது?**

''1972ஆம் ஆண்டிலிருந்து ஆதீனத்தின் மாதாந்த இதழாக 'அருளமுதம்' என்ற பெயரில் சஞ்சிகையொன்று வெளியிடப்பட்டது. 1984ஆம் ஆண்டுவரை சஞ்சிகை வெளிவந்தது. 1986ஆம் 1987ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் தேவாரங்கள் அடங்கிய முதலாம் திருமுறைத் தொகுப்பு மற்றும் திருக்கோவையார் ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன.''

**இலங்கையில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் இந்துமதம் சார்ந்த பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு வருகிறீர்கள் இதுபற்றியும் பொதுவாக வெளிநாடுகளில் சமயப்பற்று எந்தளவில் அமைந்துள்ளது என்பது பற்றியும் சொல்ல முடியுமா?**

''இலண்டன், கனடா, அவுஸ்திரேலியா, சுவிஸ், மலேசியா, சிங்கப்பூர், இந்தியா போன்ற நாடுகளில் நடந்தேறிய சைவ சித்தாந்த மற்றும் இந்து மாநாடுகள், சமய நிகழ்ச்சிகள், ஆலய வைபவங்களில் கலந்துகொண்டு வருகிறேன். வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர் இந்து மக்கள் ஏனைய ஆதீனங்களைப் போல நல்லை ஆதீனத்திற்கும் உரிய கௌரவமும் மதிப்பும் வழங்க வேண்டும் என்ற நன்னோக்கம் கொண்டு இதற்கான அழைப்பை விடுத்து வருகிறார்கள். வெளிநாடுகளில் சமயப்பற்றும் இறை நம்பிக்கையும் மேலோங்கி இருப்பதை சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். வெளிநாடுகளில் ஆலயங்கள் அமைத்து நிர்வகித்து வருவதில் நமது மக்கள் பெரிதும் பங்களிப்புச் செய்திருக்கிறார்கள். பல சிரமங்களுக்கு மத்தியிலும் அங்குள்ள பலர் விரதம் அனுஷ்டித்து இறைவழிபாடு செய்வதையும், நமது யாழ்ப்பாணத்து சமயப் பாரம்பரிய கலாசாரத்திற்கு அமைய ஆண்கள் பலர் மேலாடை இன்றி, ஆலய வழிபாடுகளில் கலந்து கொள்வதையும் அவதானித்துள்ளேன்''.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வின் பதிவுகள்

# நல்லை ஆதீனக் கட்டிடத் திறப்பு விழா

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் புதிய கட்டிடத் திறப்பு விழா கடந்த மாதம் (ஜூன்) 23ஆம் திகதி காலை இடம்பெற்றது. ஆதீனத்தின் குருமூர்த்த ஆலயத்தில் இடம்பெற்ற சிறப்பு பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து, ஆதீன முதலாவது சுவாமிகளால் வழிபாடு செய்யப்பட்டு வந்த ஆறுமுகப்பெருமான் விக்கிரகம் அலங்கார ரூபமாக வீதியுலாவாக எடுத்துச் செல்லப்பட்டு நல்லைக் கந்தன் ஆலயத்தை வலம்வந்த பின்னர் ஆதீனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

ஆதீனத்தின் முன்கதவை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களும் இலண்டன் நல்லை ஆதீன கட்டிடக் குழுவின் தலைவர் இதனைத் தொடர்ந்து நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் அவர்களும், விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா அவர்களும் நந்திக் கொடியை ஏற்றி வைத்தார்கள். திரு. சூரிபிள்ளை பாலசிங்கம் அவர்களும் இணைந்து திறந்து வைத்தார்கள். இதன் பின்னர் நுழைவாயில் திருக்கதவுத் திறப்பும், நினைவுக்கல் திரைநீக்கமும் இடம்பெற்றது.

மங்கள இசையைத் தொடர்ந்து திருமுறைப் பாராயணத்துடன் அரங்க நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் நிகழ்ச்சிகளை ஆரம்பித்துவைத்துப் பேசும்போது, "வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியொன்றில் அனைவரும் கூடியிருக்கிறோம். இலண்டன்வாழ் சைவத் தமிழ் மக்களது 230 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் உருவாக்கப்பட்ட ஆதீனக் கட்டிடத்தை எல்லோரும் தரிசிக்கக்கூடியதாக இருக்கிறது. முதலாவது சுவாமிகள் இந்த நாட்டிலே சைவ ஆதீனத்தை தொடங்க வேண்டும் என்பதற்காக மதுரையிலே தீட்சாநாமம் பெற்று, இங்கு வந்து ஆதீனத்தை தோற்றுவித்தார். ஆதீனத்திற்கான நிரந்தர இடத்தை தேடியபோது, புத்தூர் மழவராயர் குடும்பத்தினர் இந்த தர்மகைங்கரியத்துக்காக இந்தக் காணியைக் கொடுத்துதவினர். இங்கு அமைந்நருந்த பழைய காலத்து நாற்சாரமான வீடு நல்லைக் கந்தன் ஆலய எஜமானருக்குச் சொந்தமானது. புத்தூர் மழவராயருக்கு அடமானமானது. 1981ஆம் ஆண்டில் முதலாவது சுவாமிகளின் மறைவின் பின்னர் சுந்தரலிங்கம் என்ற பிள்ளைத் திருநாமம் கொண்ட, மதுரை ஆதீனத்தில் தீட்சாநாமம் பெற்ற 23வயது இளைஞனான இரண்டாவது சுவாமிகளிடம் ஆதீனம் ஒப்படைக்கப்பட்டது. இவர் மூன்று தசாப்த காலத்திற்கும் மேலாக ஆதீனத்தைப் பராமரித்து. வருவதன் ஊடாக உலகம் வாழ் சைவமக்களின் மதிப்பிற்குரியவராக திகழ்ந்து வருகிறார். துறவு வாழ்க்கைக்கு வந்து இத்தகைய பணியைச் செய்து வருகிறார்." என்று குறிப்பிட்டார்.

ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கும்போது, "நூறு ஆண்டுகளுக்கும் மேலான பழமைவாய்ந்த கட்டிடத்தில் வசதிகள் குறைவான நிலையிலும் நிறைவான பணிகள் இடம்பெற்றுவந்தன. அந்த நிலையில்தான் இலண்டனிலிருந்து வருகை தந்திருந்த நமது சைவமக்கள் இங்குள்ள குறைபாடுகளை அறிந்து கொண்டனர். நிகழ்வுகளுக்காக இலண்டனுக்கு என்னை அழைத்தபோதும் இதுபற்றி எடுத்துச் சொன்னேன். அவர்களது நிதியுதவியுடனும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் மேற்பார்வையிலும் கட்டி முடிக்கப்பட்டு, நல்லைக் கந்தன் ஆலயத்துடன் இணைந்த வகையிலான நல்லதொரு காட்சியை காணுகிறோம். சிற்பக்கலைஞர் புருஷோத்தமன் குழுவினரின் சிற்ப வேலைப்பாடுகள் அழகாக அமைந்துள்ளன. இன்றைய சிறப்பான நிகழ்வுக்கு இலண்டனிலிருந்து பலர் வருகை தந்திருப்பதும் மகிழ்ச்சியைத் தருகிறது. இவர்கள் இந்து மாமன்ற உறுப்பினர்களுடன் ஒன்றிணைந்து செயற்பட்டிருக்கிறார்கள். ஆதீனம் நல்லமுறையில் பாதுகாக்கப்படவேண்டும். பணிகள் சிறப்பாகத் தொடரவேண்டும். இதன் வளர்ச்சியை நல்ல வகையிலே பயன்படுத்த வேண்டும். அனைவருக்கும் நன்றி கலந்த வாழ்த்துக்கள்" என்று கூறினார்.

யாழ். இந்திய தூதரக துணைத் தூதுவர் திரு. வி. மகாலிங்கம் வாழ்த்துரை வழங்கும்போது, "இரண்டு வருடங்களுக்கு முன் கடமைக்காக யாழ்ப்பாணம் வந்தபோது நல்லை ஆதீனத்தைப்பற்றி அறிந்து கொண்டேன். இலண்டன் வாழ் இந்து மக்களின் ஆதரவுடன் திருத்தியமைக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. இந்திய ஆதீனங்களைப்போல இதனை மேலும் சிறப்பாக இயங்கவைப்பதற்கு இவர்கள் தொடர்ந்து உதவுவார்கள் என்பதில் நம்பிக்கை இருக்கிறது. இதன்மூலம் நமது சமய கலாசாரத்தை பாதுகாத்து, மேலும் வளர்த்தெடுப்பதற்கு இவர்கள் உறுதுணையாக இருப்பார்கள் என எதிர்பார்க்கலாம்" என்றார்.

நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் அவர்கள் பேசும்போது, "இலண்டன் வாழ் நமது இந்து மக்கள் பெரிதும் மகிழ்ச்சிக்குரியவர்களாக இருக்கிறார்கள். இவர்களது இப்புனித காரியம், இந்து மாமன்றம் வழங்கிய ஒத்துழைப்பினால் விரைவாக நிறைவு பெற்றுள்ளது. இதற்காக தயக்கம் காட்டாது வாரி வழங்கியிருக்கிறார்கள். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வுஎன்ற முதுமொழிக்கு எடுத்துக்காட்டாக இந்த் செயற்பாடு நிறைவேறியுள்ளது. ஆதீன கர்த்தாவின் ஆளுமையும் இனித்தான் செயற்படப்போகின்றது. ஆதீனம் ஆன்மீக நிலையமாக மாறவேண்டும். ஆதீனம் என்ற சொல் சைவ மடாலயம் என பொருள்படும். ஆன்ம ஈடேற்றத்தை ஏற்படுத்தும் ஆலயம் ஆதீனம். அஞ்ஞானத்தை அகற்றி ஞானத்தை தரவேண்டும். ஆதீன முதல்வர் இந்தக் கட்டிடத்துக்கு உயிரூட்டி, மக்களுக்கு அறிவூட்டி செயற்படுவார் என நம்புகிறேன்" என்று குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டன் நல்லை ஆதீன கட்டிட திருப்பணிக் குழுவின் தலைவர் திரு சூ. பாலசிங்கம் பேசும்போது, "ஆதீனத்தை புனரமைப்பதற்கு ஏற்கனவே பல பெரியோர்களால் முயற்சி எடுக்கப்பட்டது. பதினைந்து வருடங்களாக நிறைவேறாமலிருந்த இந்த முயற்சி இலண்டன் வாழ் நம்நாட்டு இந்து மக்களால் 2011ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் மீளவும் தொடங்கப்பட்டது. இதற்காக அமைக்கப்பட்ட குழுவின் தலைமைப்பதவியை ஏற்றுக்கொண்டேன். குழுவின் பொருளாளர் பதவியிலிருந்த சிவசுந்தரம் அவர்களுடன் இணைந்து செயற்படத் தொடங்கினேன். திரு. நீலகண்டன் அவர்களும், திரு. ஆறு. திருமுருகன் அவர்களும் இங்கிருந்து முழுமூச்சுடன் உதவியிருக்கிறார்கள். கட்டிடக் கலைஞர் திரு. சண்முகநாதன் அவர்கள் ஆதீன கட்டிடத்துக்கு ஆறு இலட்சம் நிதியுதவியில் தனது பங்களிப்பை வழங்கியிருக்கிறார். எங்கள் கட்டிடக் குழுவில் இணைந்திருந்த பலரும் பெரிதும் உதவியிருக்கிறார்கள். இப்போது நிறைவுபெற்றுள்ள ஆதீனத்தை தொடர்ந்து சிறப்பாகப் பராமரிக்கப்படவேண்டும். இதற்காக இந்து மாமன்றத்தின் உதவியுடன் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் சைவப்பெரியார்கள் பலர் வாழ்ந்த பூமியாகும். இங்குள்ள சிறார்கள் நல்லமுறையில் வழிநடத்தப்படவேண்டும். இந்த திருப்பணியானது இறைபணியாகும். ஆதீனம் புனரமைக்கப்பட்டிருப்பது நல்லூருக்கு மட்டுமல்ல, யாழ்ப்பாணத்திற்கே பெருமை தருவதாகும்" என்றார்.

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் தனது உரையின்போது, "யாழ் மண்ணின் பெருமையை கட்டிக் காப்பாற்ற இளைய சமுதாயம் கடமைப்பட்டுள்ளது. நாவலர், யோகர் சுவாமிகள் போன்றோர் உலாவித் திரிந்த புண்ணிய பூமி இது. தெய்வத்திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி போன்றவர்கள் மண்ணை மிதித்த பெருமைக்குரியது. இந்தப் பூமியிலுள்ள சைவ ஆதீனத்தை சிறப்புற பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளோம். இலண்டன் சைவ மாநாடுகளின் போது சுவாமிகள் சைவ ஆதீனம் பற்றி எடுத்துச் சொல்லி வந்தார்கள். இதனால் இலண்டன் வாழ் நமது இந்து மக்களிடமிருந்து பெருமளவில் நிதியுதவி கிடைத்து ஆதீனக் கட்டிடம் முழுநிறைவு பெற்றிருப்பதையிட்டு மனத் திருப்தியடைகிறோம். இது விடயத்தில் மாமன்றத்திற்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருப்பது மகிழ்ச்சி தருகிறது. எதிர்காலத்தில் ஆதீனம் நல்லவகையில் இயங்குவதற்கு அறக்கட்டளையொன்று ஏற்படுத்தப்பட்டிருப்பதுடன், அதன் ஊடாக ஆதீனத்தை சிறந்த முறையில் வழிநடத்தி ஆதீன முதல்வருக்கு ஒத்துழைப்பு, ஆதரவும் வழங்குவதற்கு அகில இலங்கை இந்து மாமன்றம் பெரிதும் துணையாக இருக்கும்" என்று குறிப்பிட்டார்.

நல்லை ஆதீன கட்டிடத் திறப்பு விழாவையொட்டி இலண்டன் நல்லை ஆதீன கட்டிடக் குழுவின் சார்பில் திரு. ந. சச்சிதானந்தன் அவர்களால் தொகுக்கப்பட்ட சிறப்பு மலர் வெளியீடும் இந்த நிகழ்வின்போது இடம்பெற்றது. மலரின் முதற் பிரதியை ஆதீன முதல்வர் பெற்றுக்கொண்டார். நிகழ்வின் சிறப்பு அம்சமாக, ஆதீன சுவாமிகள், கட்டிடக் கலைஞர் திரு. சண்முகநாதன், மழவராயர் அறக்கட்டளை திரு. புருஷோத்தமன், நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் அவர்கள், இந்திய துணைத் தூதுவர் திரு. வி. மகாலிங்கம், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், இலண்டன் நல்லை ஆதீனக் கட்டிடக் குழுவைச் சேர்ந்த திரு. எஸ். பாலசிங்கம், திரு. வே. சிவசுந்தரம், திரு. அ. தேவசகாயம், திரு. க. ரங்கநாதன், திரு. ந. சச்சிதானந்தன், வைத்தியகலாநிதி சி. சோமசேகரம் ஆகியோர் இந்து மாமன்றத்தினால் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

## தீபாராதனை

நைவேத்தியம் நிறைவுற்ற பின் தூபதீபம் காட்டி வழிபாடு செய்தல் மரபாகும். இதற்காகப் பல்வேறு வகையான தீபங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் அடுக்குத் தீபம், பஞ்சமுகதீபம், ஒற்றைத்தீபம், நட்சத்திரதீபம், வில்வ தீபம், விருஷப தீபம், நாகதீபம், புருஷாமிர்த தீபம், கும்பதீபம், கற்பூரதீபம், ஈசானாதி தீபங்கள், பஞ்சராத்திரிகைக்குரிய தீபம் என்பன போன்றவை வழக்கிலுள்ளன. இவ்வகைத் தீபங்கள் உயிர்களின் நன்மைக்காகவும், கிராமம் எழுச்சி பெறவும் உலக சேமத்திற்காகவும் காட்டப்படுவதாகச் சிவாகமங்கள் கூறி நிற்கின்றன.

*(7ஆம் பக்கத் தொடர்ச்சி)*

**அவர் இந்து மாமன்றத்தின் ஊடாக ரூ.17 லட்சம் தந்து கட்டிடத்தை கட்டி முடிக்க உதவி செய்தார். இந்த பங்களிப்புக்கு நானும் லண்டன் சைவ பெருமக்களும் இந்து மாமன்றத்துக்கு நன்றி உடையவர்களாக இருப்போம். பெரும் வேலை மத்தியிலும் திரு.நீலகண்டன் அவர்கள் எந்த நேரத்திலும் ஆதீன கட்டிட வேலைக்கு மேற்பார்வை உதவி செய்தார், எப்பிரச்சனைகளை எதிர்கொண்ட போதிலும் கட்டிடம் பூர்த்தியாக வேண்டும் என்ற ஒரே கொள்கையுடன் அயராது பாடுபட்டனர். திரு. ஆறு திருமுருகன், திரு.நீலகண்டன் அவர்களின் பணி தொடர்ந்தும் ஆதீனத்துக்கு கிடைக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**ஈழத்தில் உள்ள சைவ ஆதீனத்துக்கு லண்டன் சைவ பெருமக்கள் ஒரு சபை அமைத்து தொடர்ந்தும் பல உதவிகளை செய்தார்கள். ஆதீன முதல்வரும் யாழ் சைவ பெருமக்களும் இந்த ஆதீனத்தினூடாக தமிழையும் சைவத்தையும் அகில இலங்கையிலும் வளர்க்க வேண்டுமென வாழ்த்தி விடை பெறுகின்றேன்.**

**சூரிப்பிள்ளை பாலசிங்கம்**
இலண்டன் நல்லை ஆதீனக்கட்டடக் குழுத் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையார்வமுள்ளவராக விளங்கிய மணிபாகவதர்

நல்லை ஆதீனத்தின் முதலாவது குருமகா சந்நிதானம், ஒரு கதாப்பிரசங்கியாக பலராலும் அறியப்பட்டவர். இதற்கும் மேலாக நாடகம், நடனம், சங்கீதம் போன்ற கலைகளிலும் சிறந்து விளங்கியவர் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற்கிணங்க, தான் பயின்ற கலைகளை ஏனையோருக்கும் பயிற்றுவித்தவர். ஈழத்து நாடகத்துறையில் பிரபலம் பெற்று விளங்கிய அமரர் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள். இவரது நடிப்புத் திறமையை அறிந்து தனது நாடகக் குழுவில் இவரை இணைத்துக் கொண்டவர். இவரைப்பற்றி கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் பல வருடங்களுக்கு முன்னர் எழுதிய கட்டுரை இது.

"சிலர் பெருமையுடன் பிறக்கின்றார்கள், சிலருக்குப் பெருமை சுமத்தப்படுகின்றது. சிலரோ பெருமையைத் தம் உழைப்பினால் சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள்". - இவ்வாறு ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர் ஒரு சந்தர்ப்பத்தில் கூறியிருக்கின்றார். இவர்களுள் பெருமையைத் தம் உழைப்பினால் சம்பாதிப்பவர்களே போற்றப்படத்தக்கவர்கள். அப்படிப்பட்ட ஒருவர்தான் நம்முடைய மணிபாகவதர். அவரது இளமையிலிருந்தே அவரைக் கண்காணித்து வந்தவனாகையால் அவர் இப்போதிருக்கும் நிலையை அடைவதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்து வந்தாரென்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

மணி ஐயர் எனவும் செல்லமாக அழைக்கப்பட்ட மணிபாகவதர் சிறுவனாக இருந்த காலத்தில் நான் பங்கு பற்றிய கதம்பக் கச்சேரியொன்றில் ஒரு ஹாஸ்யக் காட்சியில் தோன்றி நடித்தார். அவரது நடிப்பு என் மனதில்பட்டது. அதற்குப்பின் அவரை நமது கோஷ்டியில் சேர்த்துக்கொண்டேன். பல ஆண்டுகளாக பல நாடகங்களிலும் என்னுடன் திறம்பட நடித்து வந்தார்.

கலைகளில் முன்னேற வேண்டுமென்ற ஆர்வம் அவருக்கு அப்பொழுதே இருந்தது. பாடினாலென்ன, நடித்தாலென்ன உடனே வந்து அபிப்பிராயம் கேட்பார். எங்கள் அபிப்பிராயங்களை நன்றாக யோசித்துக் கிரகித்துக்கொள்ளுவார். இதுவே அவரது முன்னேற்றத்திற்கு முக்கிய காரணமென்று சொல்வேன்.

நாடகமாடுவதுடன், நடனம், சங்கீதம் இவைகளையும் முறைப்படி கற்க ஆரம்பித்தார். இவரது கலை ஆர்வம் இம்மட்டென்று சொல்ல முடியாது. எங்கெங்கே நாடகம், நடனம், சங்கீதம் பயிலக்கூடிய பிள்ளைகளிருந்தார்களோ அவர்களை எல்லாம் தேடிப்பிடித்து அவர்களது இல்லங்களுக்கே சென்று தான் அறிந்ததைக் கற்றுக் கொடுப்பார். ஏதும் ஊதியம் பெறவோ அல்லது சன்மானம் பெறவோ அவ்வாறு செய்தவர் அல்லர். எல்லாம் இலவசமாகவே. எவன் ஒருவன் தான் கற்ற கலையை மற்றவர்களுக்கு ஊக்கமாக ஊட்டி வைக்கின்றானோ அவனிடத்தில் கலை ஞானம் தானாகவே பெருகிவருமென்பதே என் அபிப்பிராயம். அதை மணிபாகவதரிடத்திலேயே கண்டேன்.

இப்போது நடனமாடுவது நமது யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல, இலங்கை முழுவதுமே மலிந்திருக்கின்றது. ஆனால் மணிபாகவதர் ஆரம்பித்த காலத்தில் அப்படி இருக்கவில்லை. யுத்த காலத்தில் நம் ஊரில் நடந்த கொண்டாட்டமொன்றில் நம்மூர்ப் பையன் ஒருவனை யாருமறியாமலே பழக்கி தாண்டவ நர்த்தனம் ஆடச் செய்தார்! பார்த்தவர்கள் யாவரும் பிரமித்துப் போனார்கள். இதைக் கண்ட அநேகர் தத்தம் இடங்களுக்கு அழைத்து ஆடச் செய்தார்கள். பையனின் புகழும் ஐயரின் புகழும் எங்கும் பரவலாயிற்று. பல பாடசாலைகளிலும் நாடகம், நடனம், சங்கீதம் சொல்லிக்கொடுத்து இந்தக் கலைகளைப் பரவச் செய்தார். என்னுடைய பிள்ளைகளுக்கும் நடனம் கற்பித்து அதில் ஈடுபடச் செய்தவரும் அவரே.

சில காலத்திற்குப்பின் கதாப்பிரசங்கமும் செய்ய ஆரம்பித்து விட்டார். மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலையில் ஒரு பிரசங்கம் செய்தார். பேச்சு வரமாட்டேன் என்றது. சாரீரம் கரடு முரடாயிருந்தது. பாடினாலென்ன, ஆடினாலென்ன, நடித்தாலென்ன என்னிடம் உடனே அபிப்பிராயம் கேட்பது வழக்கம். உள்ளதை உள்ளபடி சொல்லும் சுபாவமுடையவன் நான். அன்றும் பிரசங்கம் முடிந்தவுடன் என்னிடம் வந்து எப்படியென்று கேட்டார். உண்மையை வெளிப்படையாகச் சொல்லத் தயங்கினேன். ஆனாலும் நன்றாயிருந்தது என்று முகஸ்துதி கூறி அவரைக் கெடுத்துவிடவும் மனம் வரவில்லை. ஆகையால் "குற்றமில்லை, பேச்சுக் கொஞ்சம் நல்லா ஓடவில்லை. தொண்டையையும் திருத்திக்கொள்ள வேண்டும், அடிக்கடி பிரசங்கம் செய்தால் முன்னேறலாம்" என்று ஜாடையாகச் சொல்லி விட்டேன்.

வீடு திரும்பும் போது நானும் என் மனைவியும் "ஐயோ, பாவம்" என்று எங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டோம். ஆனால் நான் அவரைக் காணும் போதெல்லாம் "ஐயா, நான் சொன்னதைக் கவனிக்கிறீர்களா?" என்று கேட்பதுண்டு.

ஏறுக்குறைய ஆறு மாதங்களுக்குப் பின் அவருடைய பிரசங்கம் கேட்கப் போயிருந்தேன். ஆச்சரியப்படக்கூடிய அளவிற்குத் தேர்ச்சியடைந்திருந்தார். இரகசியம் என்னவென்றால் வண்ணார்பண்ணை சிவன் கோயிலில் தொடர்ந்து நாற்பது நாள் பிரசங்கம் செய்தாராம். இதனால் அவர் உள்ளத்தில் தன்னம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. நடிகன், சங்கீத வித்துவான், பேச்சாளன் எவராயிருந்தாலும் தன்னம்பிக்கை ஏற்பட்டால்தான் தன் கலையில் முன்னேறலாம். மற்றவர்களையும் ரசிக்கச் செய்யலாம். அதுமுதல் நாளுக்குநாள் முன்னேறி வந்தார். பேச்சு கடல் போல் பெருக்கெடுக்கத் தொடங்கிவிட்டது. சாரீரமும் கணகண வென்று ஒலிக்கத் தொடங்கிவிட்டது. தனக்கு மாத்திரமல்ல, நமது யாழ்ப்பாணத்துக்குமே ஈடில்லா மதிப்பை உண்டு பண்ணிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது மணிஐயரின் பிரசங்க்மென்றால் இருளோ, பனியோ, மழையோ இவைகளைக் கவனியாமல் ஜனங்கள் பெருந்திரளாகக் கூடிவிடுவார்கள். உள்ளூரில், அதுவும் யாழ்ப்பாணத்தில் ஒரு வித்துவானுக்கு அத்தனை மதிப்பிருப்பது அரிது. இத்தனைக்கும் தற்பெருமையோ, பொறாமையோ, சுயநலமோ அவரிடத்தில் கிடையாது. இன்னொரு வித்துவானைப் பற்றி இழிவாகப் பேசாத வித்துவானைக் காண்பது அரிதாயிருக்கும் காலத்தில் மணிஐயர் எவரையும் குற்றம் கூறியதை நான் அறியேன். ஒரு கலைஞனின் உள்ளம் சிறுபிள்ளையைப் போல் கபடமற்றதாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட உள்ளமுடையவர்தான் மணிபாகவதர். சிறு பிராயத்தில் என்னுடன் எவ்வாறு பேசுவாரோ அதுபோலத்தான் இன்றும் பேசுவார்.



கலை ஆர்வமேயன்றி பொருள் வருவாயைக் கருதுகின்றவர் அல்ல பாகவதர். கலைத்தொண்டு செய்வதே முதற்கடமை என்று சாதித்துவருவதைப் பின்வரும் ஓர் உதாரணத்தால் அறிந்து கொள்ளலாம்.

நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் கோயிலில் எங்கள் உபயத்தன்று அவரது பிரசங்கம் நடைபெறும். ஒருமுறை பிரசங்கத்திற்கென்று வந்தவர், தான் வெளியில் போய்விட்டு சீக்கிரம் வந்துவிடுவதாக எனக்குச் சொல்லி அனுப்பிவிட்டுக் காரில் போய் விட்டார். இவர் எங்கு சென்றாரோ தெரியாது. மேளக்கச்சேரிகள் முடிவதற்கு முன்பதாகவே திரும்பி வந்து பிரசங்கத்தை ஆரம்பித்தார். ஏறக்குறைய ஒரு மணிநேரம் வரையில் ஜனங்கள் மிகவும் ஆவலாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். யாரோ ஒருவர் ஒரு கடதாசியை அவரிடத்தில் கொண்டு வந்து கொடுத்தார். அதன்பின் ஒருவகையாகப் பிரசங்கத்தைச் சுருக்கமாக முடித்துவிட்டு என்னிடம் வந்து தன் தாயார் மிக்க அபாய நிலையிருப்பதால் நான் உடனே போக வேண்டும் என்று சொல்லி உடனே காரில் ஏறி ஓடினார். மறுநாள் நானும் அவரது தாயாரின் அந்திம யாத்திரையில் கலந்துகொண்டேன்.

சில தினங்களுக்குப் பின் என்னைச் சந்தித்தபோது முதலில் தான் வெளியே போனது தனது தாயாரைப் பார்ப்பதற்காகத்தான் என்றார் மணிபாகவதர். அதை ஏன் என்னிடம் முன்பே சொல்லவில்லை. என்று கேட்டேன். “எல்லாம் தெரிந்துதான் சொல்லவில்லை தாயார் அபாய நிலையிருப்பதை நீங்கள் அறிந்துவிட்டால் பிரசங்கத்தை நிறுத்திவிட்டு உடனே போகும்படி வற்புறுத்தியிருப்பீர்கள். வந்திருக்கும் ஜனங்கள் ஏமாந்து போவார்களே” என்று பதிலுரைத்தார். அதுவும் அவர் இலவசமாகச் செய்த பிரசங்கம் அது. கலைமீது அவர் எத்தகைய ஆர்வம் கொண்டவர் என்பதை இதிலிருந்தே அறியலாம்.


(இந்த விடயம், சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன் அவர்களால் தொகுக்கப்பட்டு நல்லை ஆதீனத்தால் 2004ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வெளியிடப்பட்ட ‘நல்லை ஆதீன முதல்வர் நற்சரிதம்’ என்ற நூலிலிருந்து நன்றியுடன் எடுக்கப்பட்டது)

## அர்ச்சனை

ஆலயங்களில் ஆண்டவனின் பல்வேறு நாமங்களையும் ஒவ்வொன்றாகச் சொல்லி மலரிட்டு வழிபடுவது அர்ச்சனை எனப்படும். அர்ச்சனையின் ஆரம்பம் வேதங்களிலேயே ஆரம்பமாகிறது எனலாம். யசுர்வேதத்தில் சதருத்திரியம் எனும் பகுதியில் உருத்திரன் நூறு பெயர்களால் புகழப்பட்டு வணங்கப்படுகின்றான். அர்ச்சனைகள் பல்வேறு வகைப்படும் இறைவனின் பதினாறு பெயர்களைச் சொல்லி வழிபடும் அர்ச்சனை சோடசநாம அர்ச்சனை எனவும், நூற்றெட்டுப் பெயர்களைச் சொல்லி வழிபடும் அர்ச்சனை அஷ்டோத்திர சதநாம அர்ச்சனை எனவும், முந்நூறு பெயர்களைச் சொல்லி வழிபடும் அர்ச்சனை திரிசதி நாமஅர்ச்சனை எனவும், ஆயிரம் பெயர்களைச் சொல்லி வழிபடும் அர்ச்சனை சகஸ்ர நாம அர்ச்சனை எனவும் அழைக்கப்படும். இது தவிர இலட்சார்ச்சனை, கோடியார்ச்சனை என்பனவும் இடம் பெறும். சிவனை நோக்கிப் பஞ்சமுக அர்ச்சனையும், முருகக் கடவுளுக்காகச் சண்முகார்ச்சனையும் இடம் பெறும். அர்ச்சனை முடிவடைந்தபின் வேத மந்திரம் ஓதப்பட்டு புஷ்பாஞ்சலி, மந்திர புஷ்பாஞ்சலி, லாஜ புஷ்பாஞ்சலி என்பன நிகழ்த்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன புதிய மடாலயத் திறப்பு விழாவின்போது நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் அவர்கள் நிகழ்த்திய சிறப்புரை

"அகண்ட மண்டாலாகாரம் வியாப்தம் யேன சராச்சரம்
தத்பதம் தர்சிதம் யேன தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ"

ஆதீன சுவாமிஜி அவர்களே, ஆன்றோர்களே, சான்றோர்களே, எனதருமைச் சகோதர சகோதரிகளே!

இலண்டன் மாநகர் நல்லூர் ஆதீனத் திருப்பணிக்குழு இங்கிலாந்தில் வாழ் மக்களிடமிருந்து பெற்ற நிதி உதவியில் நல்லை ஆதீனத்திற்கு அழகான இரு மாடிக் கட்டடம் ஒன்று கிடைத்திருப்பதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இப்புனித தைங்கரியம் சைவப் பெரியார் புத்தூர் மழவராயர் அறக்கட்டளை ஆதீனத்திற்கு வழங்கிய காணியில் நிறைவேற்றப்பட்டுள்ளது. அகில இலங்கை இந்து மாமன்றம் அயராது தனது பங்களிப்பை இதற்காக ஆற்றியதில் இந்தக் கைங்கரியம் இத்துணை விரைவில் பூர்த்தி அடைந்தது என்று சொன்னால் அது மிகையாகாது.

நான் நேற்று சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் நினைவாக ஆற்றிய "ஒட்டுறவும் ஒருமைப்பாடும்" என்ற பொருள் கொண்ட பேருரையில் தமிழ் இந்து மக்களிடையே வளர்க்கப்பட வேண்டிய ஒற்றுமையையும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளையும் பிரதிபலிக்கும் ஒரு கைங்கரியமாக இந்த நடவடிக்கை நிறைவு பெற்றுள்ளது. இன்றைய தமிழ் இந்து மக்களிடையே காணப்பட வேண்டிய மிக முக்கிய குணாம்சம் இங்கு பிரதிபலிக்கும் போது மனதிற்கு மகிழ்வு ஏற்படுகின்றது.

பாருங்கள்! எங்கோ இங்கிலாந்து நாட்டில் ஒருவர். அவரை நாடி இன்னொருவர் வந்து இந்தக் கைங்கரியத்திற்கு ஒத்துழைப்பு நல்க முடியுமா என்று கேட்கின்றார். அவர் தம்மால் இயன்றதைக் கொடுக்கின்றார். பொருள் வளர்கின்றது. அதனை இங்கு எம்மவர் பொறுப்பேற்று நினைத்த காரியத்தைச் செவ்வனே முடித்துக் கொடுக்கின்றார்கள். தூரத்துத் தமிழ்ப்பேசும் மக்கள், இந்துப் பெருமக்கள் தூரம் பார்க்காமல், தயக்கம் காட்டாமல், முகம் சுளியாமல் இந்தக் கைங்கரியத்திற்கு வாரி வழங்கியதால்தான் இன்ற இந்தக் கைங்கரியம் நிறைவு பெற்றுள்ளது. நடுவில் உள்ளவர்கள் சிரமம் பாராது தமது கடமைகளைச் சரிவரச் செய்ததால்த்தான் இந்தக் கைங்கரியம் முழுமை பெற்றுள்ளது. கட்டிட நிர்மாணிப்பில் ஈடுபட்டவர்களும் மேற்பார்வை செய்தவர்களும் தமது பொறுப்புணர்ந்து கடமையாற்றியதாற் தான் இந்தக் கைங்கரியம் நிலைபெறத் தொடங்கியுள்ளது.

எனவே "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே! ஒற்றுமையின்றேல் அனைவருக்குந் தாழ்வே" என்ற முதுமொழிக்கு முன்னுதாரணமாக இந்த முக்கிய கைங்கரியம் முதிர்ந்து முடிவிற்கு வந்துள்ளது. இதுவரையும் நடைபெற்ற செயல்கள் புறம் சார்ந்தவை. கட்டிடங்கள் சார்ந்தவை, மக்கள் பணம் சார்ந்தவை. ஆனால் இனிவரும் காலம் இந்த உடல் போன்ற கட்டிடங்களுக்கு உயிர் கொடுக்குங் கால கட்டம். வெறும் கட்டிடங்கள் உயிரற்ற சடலங்கள். அவை உயிர் பெற வேண்டுமானால் நாங்கள் அவற்றிற்கு உயிர் கொடுக்க வேண்டும். இங்கு தான் ஆதீனத்தின் ஆதீனகர்த்தாவின் ஆளுமையும் ஆன்மீகமும் புலப்படப்போகின்றது. நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் வெறும் ஆதீனக் கட்டிடங்களாக காட்சி அளிக்காமல் அனைவரையும் அணைத்து ஆன்மீகம் அருளும் ஒரு ஆன்மீக நிலையமாக மாற வேண்டு. என்று கேட்டுக் கொள்கின்றேன். இன்றைய உலகத்தில் பணம் தான் எல்லாம் என்கின்றார்கள். ஆனால் நான் கூறுவேன் மனந்தான் எல்லாம் என்று. மனம் இருந்தால் மலைகளையும் அசைக்கலாம். மனம் இருக்க வேண்டும். இதை நாங்கள் இறைவன் அருளால் செய்து முடிப்போம் என்ற நம்பிக்கை எங்கள் மனங்களில் இருக்க வேண்டும்.

ஆதீனம் என்ற சொல் சைவ மடாலயம் என்று பொருள்படும். ஆனால் அதற்கு வேறொரு விதத்திலும் அர்த்தம் கற்பிக்கலாம். 'ஆ' என்றால் ஆன்மா 'தீனம்' என்றால் இஷ்டம். தீனதயாபரன் என்றால் இஷ்டங்களை ஈடேற்றுபவன் என்று பொருள்படும். ஆகவே ஆன்ம ஈடேற்றத்தை ஏற்படுத்தும் ஆலயமே ஆதீனம். மக்களுக்கு ஆன்மா பற்றிச் சொல்லவும் அவர்கள் ஆன்ம நல்வழிப்படவும், ஆவன செய்யவும் அவர்கள் நல்ல வினைகளை இயற்ற உதவவும் உறுதுணையாக ஆதீனங்கள் இருக்க வேண்டும். உடலாலும் உள்ளத்தாலும் எம்மை ஆன்மீக வழியில் ஈடுபடுத்த ஆதீனங்கள் உழைக்க வேண்டும். மக்களுக்கு இளைஞர் யுவதிகளுக்கு நேரிடையாக ஆன்மா பற்றிப் பேசினால் அவர்களுக்குச் சலிப்பு தோன்றிவிடும். எரிச்சல் கூட ஏற்படும். மக்களின் வாழ்க்கையில் உடல், உள்ளம் அறிவு ஆகியவை போன்று ஆன்மா என்றும் ஒன்றும் இருப்பது தெரியாத காரணத்தால் தான் இந்தச் சலிப்பு தோன்றுகின்றது. அது அஞ்ஞானத்தால் ஏற்படுவது. அஞ்ஞானத்தை அகற்றி முதலில் ஞானத்தை தரப்பாடுபட வேண்டும். அதனால்தான் தென்னிந்திய ஆதீனங்கள் பல முதலில் மாணவ மாணவியர்க்குக் கல்வி வசதிகள் செய்து கொடுக்கக் கல்லூரிகளைக் கட்டிக் கொடுக்கின்றனர். அவர்களின் கல்லூரி வாழ்க்கையின் போது ஆன்மீக எண்ணங்களை ஆன்மீகம் பற்றிய அறிவினை அவர்களுள் உட்புகுத்துகின்றார்கள் ஆதீன ஆன்றோர்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு ஏற்பட்டதும் மாணவ மாணவியர் வாழ்வு தானாகவே மாற்றம் அடையும்.

என்னைப் போன்றவர்கள் ஆன்மீகத்தில் எவ்வாறு ஈடுபாடு காட்டத் தொடங்கினோம் என்று ஆராய்ந்தீர்களானால் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன், சென்னை பச்சையப்பன் கல்லூரியின் அதிபர் துரைசாமி சாஸ்திரி அவர்களை கொழும்புக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவழைத்து பகவத் கீதை பற்றிய பேருரையினை ஒவ்வொரு கிழமையும் குறிப்பிட்ட நாட்களுக்கு ஆறுமாதங்களுக்கு ஆற்ற வழி செய்தார்கள். சட்டக் கல்லூரி மாணவனாக இருந்த நான், இடதுசாரிக் கொள்கைகளில் ஈடுபாடு காட்டி வந்த நான், சும்மா பார்க்க கேட்கப் போவோம். என்று தொடங்கி பகவத் கீதையின் பெருமையில், ஆழத்தில் அமிழ்ந்து போனேன். ஆன்ம சிந்தனைகள், ஆத்மீக ஆராய்ச்சிகள் தானாக நடைபெறத் தொடங்கின. இராமகிருஷ்ண மடமும் ஒரு மடந்தான். ஆனால் அவை வேதாந்த மடங்கள். ஆதீனங்கள் சித்தாந்த மடங்கள். சித்தாந்த வேதாந்த தர்க்கங்களில் நாங்கள் ஈடுபடத் தேவையில்லை. மேலும் இந்த ஆதீனத்தின் முதலாவது மகாசந்நிதானத்தை நாங்கள் அக்காலத்தில் மணிபகவதர் என்று அழைப்போம். அவரின் கதாகாலட் சேபம் கொழும்பில் எங்கு நடந்தாலும் அதைக் கேட்கப் போய்விடுவேன். அப்பொழுது நான் றோயல் கல்லூரி மாணவன். இப்பேர்ப்பட்ட சான்றோர்களின் சகவாசமே எம்மை ஆத்மீகத்தில் ஈடுபாடுபெறச் செய்தன. அதே போன்று எங்கள் மக்களின், எங்கள் இளைஞர்களின், எங்கள் யுவதிகளின் நாளாந்த வாழ்க்கை முறையில் மறுமலர்ச்சி பெற நாங்கள் ஆவன செய்ய வேண்டும். அதற்கு ஆதீனங்கள் ஆன உதவிகள் செய்ய வேண்டும்.

புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் இந்த கட்டிடத்தில் இருந்து எமது மதிப்பிற்குரிய ஆதீன முதல்வர் இக்கட்டிடங்களுக்கு உயிர் ஊட்டி மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஊட்டி ஆன்மீக அருளை அன்புடன் எமக்கருளுவார் என்பதில் எனக்கு சந்தேகம் ஏதுமில்லை. அவருக்கு வேண்டிய சகல உதவிகளையும் இறைவன் என்றும் வழங்க அந்த எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சிக் கேட்டு அமர்கின்றேன்.


# விவேகானந்தரின் பொன்மொழிகள்



- நீங்கள் கடவுளின் குழந்தைகள், அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள் புனிதமும் பூரணத்துவமும் பெற்றவர்கள். மண்ணுலகின் தெய்வங்களே.
- தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரமாகும். அத்தகைய நம்பிக்கை, உள்ளே இருக்கும் தெய்வீகத்தை வெளியே வரவழைக்கிறது. நீ எதையும் சாதிக்க முடியும். அளவு கடந்த ஆற்றலை வெளிப்படுத்தப் போதுமான அளவிற்கு உண்மையாக நீ முயற்சி செய்யாதபோது தான் தோல்வி அடைகிறாய். ஒரு மனிதனோ, ஒரு நாடோ தன்னம்பிக்கை இழந்தவுடனேயே அழிவு வருகிறது.
- நம்பிக்கை, நம்பிக்கை, நம்மிடத்தில் நம்பிக்கை; நம்பிக்கை, கடவுளிடத்தில் நம்பிக்கை இதுவே மகிமை பெறுவதன் இரகசியமாகும்.
- நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னைப் பலவீனன் என்று நினைத்தால் பலவீனமாகவே நீ ஆகிவிடுவாய். நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவனாகவே ஆகிவிடுவாய்.
- உண்மையில் பிடிப்புக் கொண்ட இளைஞர்களே தேவை. அத்தகைய ஒரு நூறு இளைஞர்களால் இந்த உலகமே புரட்சிகரமான மாறுதலைப் பெற்றுவிடும்.
- நம்பிக்கையை இழந்துவிடாதே. பாதை, கத்தி முனையில் நடப்பதைப் போல மிகவும் கடினமானது தான். எனினும் எழுந்திரு, விழித்துக்கொள். மனம் தளராதே. நீ அடைய வேண்டிய உனது இலட்சியமாகிய குறிக்கோளைக் கண்டுபிடி.
- தனி மனிதர்களின் நிலை உயர்த்தப்பட்டால், தேசமும் அதன் நிறுவனங்களும் உயர்வடைந்தே தீரும்.
- பிரதிபலன் எதையும் சிந்திக்காமல், நாம் உலகிற்குச் செலுத்தும் ஒவ்வோர் நல்லெண்ணமும் நமக்குள் சேகரித்து வைக்கப்படுகின்றது. அத்தகைய நல்ல எண்ணம் நமது கர்மச் சங்கிலியை இணைக்கும் கண்ணி ஒன்றை உடைத்தெறிகிறது. மக்களுள் மிகவும் தூயவர்களாகும் வரை மேலும் மேலும் அது நம்மைத் தூய்மைப்படுத்திக் கொண்டே இருக்கின்றது.
- கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் குடிகொண்டிருந்தார். இதைத் தவிர தனியாக வேறு ஒரு கடவுள் இல்லை. – இந்த உண்மையை எவ்வளவோ தவங்களுக்குப் பிறகு நான் புரிந்து கொண்டிருக்கிறேன். மக்களுக்குச் சேவை செய்பவன் உண்மையில் கடவுளுக்குச் சேவை செய்பவனாகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முத்தமிழ் வித்தகரின் முத்தான பணிகள்

**சைவவித்தகர் வெற்றிவேல் சசிகரன்**
வந்தாறுமூலை, மட்டக்களப்பு

(முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அவர்களின் நினைவுதினம் ஜூலை 19ஆம் திகதியாகும். அதனையொட்டி இந்த இதழ் சுவாமி விபுலானந்தர் அடிகளாரின் நினைவு சிறப்பிதழாகவும் மலர்கிறது. )

அகிலம் போற்றும் முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளார் பிறந்தது மட்டக்களப்பின் தெற்காக காரைதீவு எனும் நெய்தலும் மருதமும் ஒருங்கே அமையப்பெற்ற பழந்தமிழ்க் கிராமத்திலாகும். சாமித்தம்பி கண்ணம்மை தம்பதியினர் தவமிருந்து 1892-03-27 இல் அடிகளாரைப் பெற்றெடுத்தனர். அப்பகுதியில்தான் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலயமும் உள்ளது. காரைதீவின் காத்தல் தெய்வமாம் பத்தினித்தெய்வம் கண்ணகியைக் குலதெய்வமாகவும், அவ்வம்மையின் நாமத்தைத் தாங்கிய வருமாகிய கண்ணம்மையின் வயிற்றில் முதலாவதாக உதித்தவர் விபுலானந்த அடிகளார்.

அடிகளார் இயற்பெயரான தம்பிப்பிள்ளை என்ற நாமத்தோடு பிறந்தார். அவர் நோய்வாய்ப்படவே கதிர்காமத்திற்குக் கொண்டு சென்று விரதம் அனுஷ்ட்டித்து நோய் குணமாகவே முருகப் பெருமானின் பெயரான "மயில்வாகனன்" எனும் பெயரை அவருக்குப் பெற்றோர் சூட்டினர். மட்டக்களப்பு மாநிலத்தில் வாராது வந்துதித்து உலகின் எட்டுத்திசைகளிலும் தமிழ் மொழியின் எழிலைப்பரப்பியவர் சுவாமி விபுலானந்தர் அவர்கள். முத்தமிழ் வித்தகரான அந்த முனிவரின் தமிழ்ப்பணிகள் பற்றி எத்தனை மணிநேரம் பேசினாலும் எடுத்தியம்ப இயலாது. 1916-இல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் தேர்விலும் வெற்றி பெற்று, இலங்கையின் முதலாவது மதுரைத் தமிழ் சங்கப் பண்டிதர் என்னும் பெருமையையும் பெற்றார், 1919இல் தனது சொந்த முயற்சியில் கற்று, இலண்டன் பல்கலைக்கழகம் நடத்திய பி.எஸ்.சி. தேர்விலும் சித்தியடைந்தார். 1924இல் சென்னை சென்ற மயில்வாகனனார், இராமகிருஷ்ண சங்கத்தில் சேர்ந்து "பிரபோதசைதன்யர்" என்னும் பிரமச்சரிய நாமம் பெற்றார். அதே ஆண்டு சித்திரைப் பௌர்ணமியில் துறவறம் மேற்கொண்டு "சுவாமி விபுலானந்தர்" என்னும் பெயர் பெற்றார்.

1925இல் இலங்கை திரும்பிய அடிகளார் கல்லடி உப்போடையில் சிவானந்த வித்தியாலயமும், காரைதீவில் சாரதா மகளிர் கல்லூரியும் மற்றும் ஆதரவற்றோர் மாணவர், மாணவியர் இல்லங்களும் நிறுவி அளப்பரிய கல்வித் தொண்டு செய்தார். பின்பு யாழ்ப்பாணம் வைதீஸ்வர வித்தியாலயத்தையும் திருகோணமலை இந்துக் கல்லூரியையும் இராமகிருஷ்ண 'சங்கத்தோடு இணைத்ததோடு நில்லாது மலையகத்திலும் பாடசாலைகள் அமைத்து சகலருக்கும் சிறந்த கல்வித் தொண்டாற்றினார்.

1931இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் 1943இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் பணிபுரிந்தார். அத்தனை சிறப்போடு மொழியியல் விஞ்ஞானியாக, அறிவியல் கலைஞராக, ஆத்மீக ஞானியாக, ஆற்றல்மிகு பேராசிரியராக, இயற்றமிழ் வல்லுனராக, இசைத்தமிழ் ஆராய்சியாளராக, நாடகத்தமிழ் நல்லாசிரியராக நமது தாயக மண்ணிலே நற்பணியாற்றினார்.

தமிழுக்காக, தமிழ் வளர்ச்சிக்காக, தமிழ் இனத்திற்காக, இனத்தின் கல்வி மலர்ச்சிக்காக தன் வாழ்வையே அர்ப்பணித்தவர் சுவாமி விபுலானந்தர் அடிகளார். மனிதாபிமானம் மிக்கவர், ஆதித் தமிழ்க் குடியின் அறவழியில் வந்தவர். பாதியில் முளைத்தெழுந்த சாதிக் கொடுமைதனைச் சாடித் தகர்த்தெறிந்த சாதனைத் தமிழன் அவர், அன்னார் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த காலத்தில், ஒடுக்கப்பட்ட ஆதி திராவிடர் வாழ்ந்த திருவேட்களம் என்னும் சேரிக்குச் சென்று பாலர் படிக்கக் கல்விக் கூடம் அமைத்தார்.

முதியோர் கல்விக் கூடங்களும் ஏற்படுத்தினார். இதை அறிந்த உயர் சாதிப் பார்ப்பனர்கள் சுவாமி மீது ஆத்திரம் கொண்டனர். குடிப்பதற்குக் கூட நன்னீர் தர மறுத்தனர். இதனால் அடிகள் பலகாலம் உவர் நீரையே குடித்து வாழ்ந்தார். சைவத்தின் காவலர்கள் என்று எழுந்தவர்கள், சாதித்துவத்தின் காவலர்களாகத் திகழ்ந்தார்கள். மக்களிடையே ஏற்றத் தாழ்வுகளை விதைத்தார்கள். மனித குலத்தின் மடமைத்தனத்தின் உச்சநிலையான வருணப் பாகுபாடுகளை வளர்த்தார்கள். ஆனால் சுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சரத் திருத்தலத்தில் வைகாசியில் நடந்த தேர் தீர்த்த உற்சவக் காட்சிகள்

**23 & 24. 05. 2013**



பஞ்சரத பவனி



அம்பாள் தேரை மகளிர் இழுக்கும் காட்சி





தேர்கள் இழுக்கப்படும் காட்சிகள்.



கௌரி அம்பாள் சமேத நடராஜப் பெருமான் தீர்த்தக்கரைக்குப் புறப்படுகிறார்.






தீர்த்தத்திற்கு சுவாமி ஊர்வலம்.



அறுபத்து மூன்று நாயன்மார்கள்



சிவதொண்டர் அணியின் சேவை



திருத்தலத்தில் மனித நேய நிதியம் ஆதரவில் மருத்துவ சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிகண்டி கந்தவன நாதர் திருத்தலத்தில் தேர்த்திருவிழா காட்சிகள் (22.06.2013)



வசந்த மண்டபத்தில் இருந்து சுவாமி எழுந்தருளுதல்



தேர் பவனி

## சக்தி இல்லத்தில்.........



சக்தி இல்லத்தில் இந்துக்கல்லூரி விடுதி உதவி மேற்பார்வையாளர்கள் திருமதி சூரியகலா, செல்வி சங்கரி ஆகியோருக்கு பிரியாவிடை (30.06.2013)






மாணவர் மாணவிகள்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி விடுதி ஆண்டுவிழாவும் கலாநிதி வேலாயுதப்பிள்ளை நினைவுப்பேருரையும் (09.06.2013)


அதிபர் உரை



விடுதி மாணவிகளின் இறைவழிபாடு


மாமன்றத் தலைவரின் உரை


மாமன்ற அறங்காவலர் சபைத் தலைவர் திரு. கயிலாசபிள்ளை மங்கள விளக்கேற்றுகிறார். அருகில் திருமதி. கயிலாசபிள்ளை.


மாமன்றப் பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா மங்கள விளக்கேற்றுகிறார்


திருமதி ஹேமா சர்மா நினைவுப் பேருரை நிகழ்த்துகிறார்.



இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க (அவுஸ்திரேலியா, சிட்னி.) முன்னைநாள் தலைவர் திரு பாஸ்கரநாதன் அவர்களை மாமன்ற பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா அவர்கள் கௌரவிக்கின்றார்.


திரு. தனபாலா கலாநிதி வேலாயுதபிள்ளையின் நிழற்படத்திற்கு மாலையணிவிக்கின்றார்.


பிள்ளைகளுடன் சேர்ந்து பிறந்தநாள் கொண்டாடிய திருமதி கயிலாசபிள்ளை



ஒரு பிள்ளைக்கு பாசத்துடன் பிறந்ததின கேக் ஊட்டும் ஓர் அன்னை


விடுதிக் குழுத் தலைவியின் நன்றியுரை


மாணவர்களின் கலைநிகழ்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகச் சுடரின் அருள்மடலில் குறிப்பிடப்படும் காட்சிகள்



திருக்கோணேஸ்வரர் ஆலயம்



மாமன்ற அப்பியாசப் புத்தகங்களை சுவாமி ஒரு மாணவிக்கு வழங்குகிறார்.



பாடசாலை ஒன்றில் சுவாமியை வரவேற்கும் மாணவர்கள்



ஆலயம் ஒன்றில் சுவாமியின் உரை



கிருஷ்ணர் ஆலயத்தில் தியானத்தில் சுவாமியின் முன் இருக்கும் மாணவர்கள்



பிள்ளைகளுடன் அமர்ந்து உணவருந்தும் சுவாமி



அஞ்சலியின் சைக்கிள் திட்டத்தின்கீழ் சைக்கிள் ஒன்றை சுவாமியின் அன்னை வழங்குகிறார்.



சுவாமி உரையாற்றுகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபுலானந்த அடிகளோ, மக்கள் எல்லோரையும் சமமாக மதித்தார். சாதிப் பிரிவுகளை நீக்க உழைத்தார். எல்லோரும் சமமானவர்களே என்ற எண்ணத்தை மக்களிடையே விதைத்தார். கல்வி எல்லோருக்கும் பொதுவானது என்று நினைத்தார். தீண்டத்தகாதவர் என்று தீயவர்களால் ஒதுக்கி வைக்கப்பட்ட மக்களுக்கும் கல்வி கிடைப்பதற்கு வழிசமைத்தார்.

அடிகளாரின் நீண்ட நாளைய இசை ஆராய்ச்சிப் பணி 1947இல் "யாழ் நூல்" என உருப்பெற்றது. கரந்தைத் தமிழச் சங்கத்தின் ஆதரவில் திருக்கொள்ளும் புதூர் ஆலயத்தில் 20-06-1947, 21-06-1947 ஆகிய இரு தினங்களிலும் யாழ் நூல் அரங்கேற்ற விழா நடந்தேறியது.

தமிழ்நாட்டு மக்களிடையே கல்வி மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காக தன்னிகரற்ற பணிகளை ஆற்றிய சுவாமி அவர்கள், ஈழத்திலும் ஏழைத் தமிழ் மாணவர்களுக்கு எழுத்தறிவித்த இறைவனானார். எவ்வித வேறுபாடுமின்றி எல்லா மக்களுக்கும் கல்வி கிடைப்பதற்காக யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் சுவாமி அவர்கள் ஆற்றிய பணிக்கு நிகராகப் பணிபுரிந்தோர் அவரது காலத்திற்கு முன்னர் என்றாலும் சரி, அவருக்குப் பின்னர் இன்றுவரை என்றாலும் சரி யாருமே பிறந்ததுமில்லை, உயர்ந்தவராய்த் திகழ்ந்ததுமில்லை, பணியிலே சிறந்ததுமில்லை. கல்வியூட்டுவதிலே அவர் காட்டிய தளராத முயற்சியினால் ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் எண்ணற்ற தமிழ் அறிஞர்கள் தோன்றினார்கள். பேராசிரியர்களாக, பண்டிதமணிகளாக, புலவர்மணிகளாக உருவாகினார்கள். வாழையடி வாழையாகத் தமிழ் வளர்ச்சியின் எருவாகினார்கள். அதனால் சுவாமியவர்கள் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் மொழி வளர்ச்சியின் கருவாகினார்கள்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் ஆராய்ச்சித் துறைக்கான பாடத்திட்டத்தினைத் தயாரித்தவர் சுவாமி விபுலானந்தர் அவர்களே. அதன்மூலம் சீரியவழியில் தமிழ் ஆராய்ச்சிக் கல்வி வளர்வதற்கும், தமிழ் ஆராய்ச்சிக் கலை தொடர்வதற்கும், தமிழ்மொழியின் நிலை உயர்வதற்கும் காலாக அமைந்தவர் சுவாமிகளே.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தால் அமைக்கப்பட்ட கலைச்சொல்லாக்கப் பேரவையின் தலைமைப் பொறுப்பை ஏற்று அறிவியல் தமிழை உலகுக்கு அறிமுகம் செய்துவைத்தவர் அடிகளார் அவர்களே. கணிதம், வரலாறு, பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல், இராசாயனவியல், உடல்நலவியல், புவியியல், விவசாயவியல் ஆகிய ஒன்பது துறைகளில் கலைச்சொற்களை ஆக்குதற்காக ஒன்பது அறிஞர் குழுக்கள் அமைக்கப்பட்டு அந்த ஒன்பது குழுக்களுக்கும் பொதுத் தலைவராகவும், இரசாயனவியல் குழுவின் தலைவராகவும் விபுலானந்த அடிகள் நியமிக்கப்பட்டார். அடிகளாரின் தலைமையிலான அந்த அறிஞர் குழுக்களின் அரும்பணியினால் பத்தாயிரம் தமிழ்க்கலைச் சொற்களைக் கொண்ட கலைச்சொல் அகராதி 1938 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. உலகின் அறிவியல் மலர்ச்சிக்குத் தகுந்தவகையில் தமிழ் மொழியின் வளர்ச்சி அமைந்திட இந்த அகராதி பெரும் பங்காற்றிக் கொண்டிருக்கின்றது.

சுவாமி அவர்கள், இந்தியாவில் இராமகிருஷ்ண மடத்தால் வெளியிடப்பட்ட "வேதாந்த கேசரி" என்றும் ஆங்கிலப் பத்திரிகைக்கும், "இராமகிருஷ்ண விஜயம்" என்னும் தமிழ்ப் பத்திரிகைக்கும் ஆசிரியராகப் பணியாற்றினார். அவரால் அவ்விதழ்களில் எழுதப்பட்ட கட்டுரைகளும், ஆசிரியர் தலையங்கங்களும் சமய உண்மைகளை விளக்குவனவாக மட்டுமன்றித் தமிழ் மொழி, தமிழ்ப்பண்பாடு என்பவற்றைப் பரப்புவனவாகவும் அமைந்திருந்தன.

சங்க இலக்கியங்களுக்கு நிகராக எண்ணப்படுகின்ற, கங்கையில் விடுத்த ஓலை என்னும் அடிகளாரின் கவிதை மலரும், மற்றைய இனிமையான கவிதைகளும், எண்ணற்ற கட்டுரைகளும், இயற்றமிழுக்கு அவர் ஆற்றிய பணியினை இயம்பிக்கொண்டிருக்கின்றன.

விபுலானந்த அடிகளுடைய கல்லறையில் அவரே இயற்றிய இனிய கவிதை பொறிக்கப்பட்டுள்ளது மிகப் பொருத்தமாகும். இறைவனின் திருப்பாதங்களில் சூட்டப்படவேண்டிய மலர்கள் பற்றிப் பாடுகிறார் அடிகள்:

வெள்ளைநிற மல்லிகையோ, வேறெந்த மாமலரோ,
வள்ளலடி யிணைக்கு வாய்த்த மலரெதுவோ?
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

காப்பவிழ்ந்த தாமரையோ, கழுநீர் மலர்த்தொடையோ
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது


பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரிலில்லாக் கற்பகமோ,

வாட்டமு றாதவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
பாட்டளிசேர் கொன்றையல்ல பாரில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது.

என்று "ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று" என்ற தலைப்பில் அடிகளார் பாடிய பாடல்கள் அறிஞர் பெருமக்களால் வியந்து போற்றப்படுகின்றன. அடிகள் மறைந்தாலும் அவர் முத்தமிழுக்கு ஆற்றிய பணிகள் என்றும் மறையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ் நகரில் நினைவுப் பேருரையும் நூல் வெளியீடும்

தெய்வத்திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவுப் பேருரையும், அகில இலங்கை இந்து மாமன்றம், குமரன் புத்தக இல்லத்துடன் இணைந்து வெளியிட்டிருந்த ஓய்வுநிலை உச்சநீதிமன்ற நீதியரசர் சத்தியவித்தகர் க.வி.விக்னேஸ்வரன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்பான "இந்து சமய சிந்தனைகள்" (தமிழ்), "Some Thoughts on Hinduism" (ஆங்கிலம்) ஆகிய இரு நூல்களினது வெளியீட்டு நிகழ்வும் கடந்த மாதம் (ஜூன்) 22ஆம் திகதியன்று மாலை இந்து மாமன்ற யாழ் பணிமனையில் நடைபெற்றது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் தலைமை தாங்கினார். மங்கள விளக்கேற்றல், தேவார பாராயணம் என்பனவற்றைத் தொடர்ந்து, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நந்திக் கொடியை ஏற்றி வைத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்ததுடன், ஆசியுரையையும் வழங்கினார். "நீதியை வழிநடத்தும் வகையில் செயற்பட்ட நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் ஒவ்வொரு இடங்களிலும் ஆற்றிய உரைகள் ஆவணப்படுத்தப்படும் வகையில் நூலாக வெளிவருவது சிறப்பான விஷயமாகும். மனிதன் எப்படி வாழவேண்டும், வாழ்க்கையில் எத்தகைய வழியை பின்பற்ற வேண்டும் என்பதையெல்லாம் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். அகில இலங்கை இந்து மாமன்றம் இதனை இனம்கண்டு நூலாக வெளியிட்டிருப்பதன் மூலம் மற்றுமொரு நற்பணியைச் செய்திருக்கிறது" என தனது ஆசியுரையின்போது குறிப்பிட்டார்.

இந்து மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் வரவேற்புரையுடன் இணைத்து தலைமையுரையையும் வழங்கினார். "தெய்வத்திருமகள் அம்மையார் ஒரு சிறு குடிசையாக இருந்த இடத்தை பெரும் ஆலயமாக மாற்றி யாழ் மண்ணில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர். 2005ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இந்து மாமன்றப் பொன்விழா மாநாட்டை நடத்தியபோது அம்மையாரின் ஆசியைப் பெற்றிருந்தோம். இந்த நிகழ்வின்போது அம்மையாருக்கு "தெய்வத்திருமகள்" என்ற பட்டத்தையும் இந்து மாமன்றத்தின் சார்பாக வழங்கியிருந்தோம். அம்மையாரின் நினைவு தினத்தையொட்டியதாக மாமன்றத்தினால் ஏற்பாடு செய்திருக்கும் இந்த நிகழ்விலே, நினைவுப் பேருரையாற்றுவதற்கு சத்தியவித்தகர் க.வி.விக்னேஸ்வரன் அவர்கள் இங்கு வருகை தந்திருக்கிறார். இவரது சொற்பொழிவுகள் அடங்கிய தமிழ், ஆங்கில நூல்களை மாமன்றம் ஏற்கனவே கொழும்பில் வெளியிட்டு வைத்துள்ளது. யாழ் மண்ணில் வாழும் இந்து மக்களுக்காக இன்றைய தினம் இங்கு அந்த இரு நூல்களும் வெளியிட்டு வைக்கப்படுவது ஒரு சிறப்பான நிகழ்வாகும்" என்றார் திரு. கந்தையா நீலகண்டன்.

இவரது உரையைத் தொடர்ந்து "இந்து சமய சிந்தனைகள்" (தமிழ்), "Some Thoughts on Hinduism" (ஆங்கிலம்) ஆகிய இரு நூல்களினது வெளியீடும் இடம்பெற்றது. மாமன்ற உபதலைவரும், யாழ் இந்து ஆராய்ச்சி நிலைய இயக்குனருமான சைவஞானபானு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் வெளியீட்டுரை நிகழ்த்தினார். இவர் தனது உரையின்போது, "அகில இலங்கை இந்து மாமன்றத்தினர், சிவத்தமிழ்ச் செல்வி மறைந்தபோது அஞ்சலி செலுத்தும் வகையில் ஆன்மீக இதழான "இந்து ஒளி"யை சிறப்பிதழாக வெளியிட்டிருந்ததுடன், அவரை நினைவுகூர்ந்து "தெய்வத்திருமகளின் வாழ்வும் பணிகளும்" என்ற நூலையும் வெளியிட்டார்கள். ஆண்டு தோறும் கொழும்பில் சிவத்தமிழ்செல்வி நினைவாக சிறப்பு சிகழ்ச்சிகளை நடத்திவந்த இந்து மாமன்றத்தினர், இந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் நினைவுதின நிகழ்ச்சியை நடத்த வேண்டும், நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் நினைவுப் பேருரை நிகழ்த்த வேண்டும், அவரது சொற்பொழிவுகள் அடங்கிய இருநூல்களையும் இங்கு வெளியிடவேண்டும் என்று தீர்மானித்துவிட்டார்கள். முன்னைய காலத்தில் தமிழ் நாட்டில் சைவச் சான்றோர்கள் உயர் பதவியை வகித்துக்கொண்டே சைவத்தைக் காத்தார்கள். நம் நாட்டிலும் சேர் பொன். இராமநாதன், சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் போன்ற பலரும் சைவப் பாரம்பரியம் அழிந்துவிடாமல் செயற்பட்டார்கள். இந்த வரிசையில் சைவத்தையும் தமிழையும் நேசிக்கின்ற ஒருவராக நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் பெருமை பெறுகிறார். இவர் நீதியரசர் என்ற உயர்ந்த பதவியிலிருந்து இளைப்பாறிய பின்னரும் பல கருத்துக்களை துணிச்சலோடு அவையில் எடுத்துரைத்து வருகிறார். அவரது பேச்சில் அடங்கியுள்ள இந்து சமய சிந்தனைகள் தொடர்பான விடயங்கள் அற்புதமானவை. மக்கள் இதயத்தை தொடும் வகையிலேயே பேச்சுக்கள் அமைந்திருக்கின்றன. அஞ்ஞான இருளிலிருந்து எப்படி மெஞ்ஞான உலகுக்கு செல்வது என்பதை அழகாக சொல்லியிருக்கிறார். பாரம்பரியமான கலாசார அணுகுமுறைபற்றி குறிப்பிடுகிறார். பண்பாட்டு பாரம்பரிய விழுமியங்களை தமிழர்கள் மறந்துவிடக்கூடாது என்றெல்லாம் சொல்கிறார். நாவலர் வழியில் வாழவேண்டும், சைவத்தை காப்பாற்ற வேண்டும் என சிவத்தமிழ்ச்செல்வி ஆலயத்தை சமுதாயத்தோடு இணைத்து ஆற்றி வந்த சேவையை உலகமே போற்றுகின்ற

**(தொடர்ச்சி 28 ஆம் பக்கம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வத் திருமகள் சிவத்தமிழ்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

## நினைவுப் பேருரை

**[அகில இலங்கை இந்து மாமன்ற யாழ் பணிமனையில் 2013. 06. 22 ஆம் திகதியன்று நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் அவர்கள் ஆற்றிய பேருரை]**



# ஒட்டுறவும் ஒருமைப்பாடும்

**"குருர் ப்ரம்மா குருர் விஷ்ணு குருர் தேவோ மகேஷ்வரஹ**
**குருசாக்ஷாத் பரப்பிரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ"**

தலைவரவர்களே, ஆன்றோர் பெருமக்களே, அன்புச் சகோதர சகோதரிகளே! சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் முதலாவது குருபூஜை நிகழ்ச்சி நடந்த தினமன்று அதாவது 2009ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9ஆம் திகதியன்று அகில இலங்கை இந்து மாமன்றமும் கொழும்பு மகளிர் இந்து மன்றமும் சேர்ந்து ஒழுங்கு செய்த கூட்டத்தில் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அன்றைய பேச்சின் தலையங்கம் "தெய்வத் திருமகளின் வாழ்வும் பணிகளும்" என்று அமைந்தது. அது இன்று வெளியிடப்படும் "இந்து சமய சிந்தனைகள்" என்னுந் தமிழ் நூலின் பக்கம் 222இல் இடம்பெறுகின்றது.

சிவத்தமிழ்ச் செல்வியாரின் ஐந்தாவது குருபூஜை தினத்தையொட்டி என்னை இன்று சிறப்புரை ஆற்றுமாறு திரு. கந்தையா நீலகண்டன் அவர்கள் அழைத்த போது "எதைப் பற்றிப் பேசவேண்டும்" என்று கேட்டேன். காரணம் முதல் குருபூஜையன்று செல்வியாரின் வாழ்வு பற்றியும் பணிகள் பற்றியும் பேசியாகி விட்டதால் எதைப் பற்றிப் பேச வேண்டும் என்று கேட்டேன். "அது உங்கள் விருப்பம்" என்றார் திரு. நீலகண்டன் அவர்கள்.

சிவத்தமிழ்ச் செல்வியாருக்குப் பிடித்தமான ஏதேனும் ஒரு பொருள் பற்றிப் பேச வேண்டும் என்றது மனம். அவருக்குப் பிடித்தது எது? சிரமம் இன்றி பதில் வந்தது. சைவமுந் தமிழுந் தன்னலமற்ற சேவையுமே செல்வியாரைக் குளிர வைக்கக் கூடிய கருப்பொருட்கள் என்றுணர்ந்திருந்தேன். எனவே சேவை மனப்பான்மைக்கு அத்திவாரமாக அமையும் ஒட்டுறவு பற்றியும் ஒருமைப்பாடு பற்றியும் பேசலாம் என்று அதையொட்டித் தலையங்கத்தைக் கொடுத்தேன். ஒட்டுறவு என்றால் என்ன? நெருங்கிய உறவே ஒட்டுறவு. ஒருமைப்பாடு என்றால் என்ன? ஒற்றுமைப்படுதலே ஒருமைப்பாடு. ஆகவே நெருங்கிய உறவு முறையினால் மனதாலும் அண்மித்த ஒற்றுமை காரணமாக உடலாலுஞ் சேர்ந்திருந்து வாழ முற்படுதலே ஒட்டுறவும் ஒருமைப்பாடும்.

இந்தக் காலகட்டத்தில் இவற்றின் அவசியம் என்ன என்று ஆராய்ந்தோமானால் எமது தமிழ்ப்பேசும் மக்கள் இன்று ஒரு ஏகோபித்த தலைமைத்துவம் இல்லாததாலோ என்னவோ மனதால் பிரிந்து உடலால் ஒதுங்கி வாழத் தலைப்பட்டுள்ளார்கள். **2009ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னர் ஒருவித விரக்தி மனப்பான்மை எங்களைப் பீடித்துள்ளது. எல்லாவற்றையும் இழந்து விட்டோம் என்ற ஒரு மனோபாவம்; எம்மால் இனி எதைச் சாதிக்கலாம் என்ற ஒரு ஏக்க நிலை; நாம் தோற்றுவிட்டோம் என்ற ஒரு பரிதாப மனோநிலை.**

இதில் விசித்திரம் என்னவென்றால் இப்பேர்ப்பட்ட மனோநிலை சென்ற நூற்றாண்டின் முதல் பகுதியிலும் இலங்கையரைப் பீடித்திருந்தது. சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர், மலேயர்கள் என்று எல்லா இன இலங்கை மக்களின் மனதிலும் அந்தக் காலகட்டத்தில் இதே மாதிரியான ஒரு விரக்தி மனோநிலை ஏற்பட்டிருந்தது. 1915ஆம் ஆண்டில் இலங்கையில் இனக் கலவரம் நடந்த போது பிரித்தானிய போர்வீரர்கள் காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்ட விதம்; அதைக் கண்டித்து சிங்கள மக்கள் சார்பில் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் சிங்கள மக்களுக்காகத் தனியொரு மனிதராக பிரித்தானிய அரசாங்கத்துடன் மோதியமை; தம்மை இலங்கையில் இருந்து வெளியேற்றச் சிங்கள மக்கள் சதி செய்கின்றார்கள் என்ற கோபத்தில் பிரித்தானியர் அப்பாவி மக்களைப் பலவிதங்களில் கொடுமைப்படுத்தியமை ஆகியன அக்காலகட்டத்தில் மக்கள் மனதில் ஏக்கத்தையும், பயத்தையும், பீதியையும், நம்பிக்கை அற்ற தன்மையையும் ஏற்படுத்தியிருந்தன. இதைக் கண்ணுற்ற சேர் பொன். இராமநாதனின் சகோதரர் சேர் பொன்னம்பலம் அருணாச்சலம் அவர்கள், இந்த விரக்தி நிலையைப் போக்குவதற்காக உருவாக்கப்பட்ட இலங்கை தேசிய சங்கத்தின் முதற் கூட்டத்தில் 1917ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2ஆம் திகதியன்று மற்றவைக்கிடையில் பின்வருமாறு கூறினார்.



"குடியேறிய முடிக்குரிய நாடொன்றின் நிருவாகத்தின் நிமித்தம் ஏற்படக்கூடிய உள்ளார்ந்த தீமைகள் இன்றும் நடைமுறையில் உள்ளன. உள்ளூரில் எமக்குரிய அதிகாரங்களும் பொறுப்புகளும் பறிபோய்விட்டன. எமது உரிமைகளுந் தகைமைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுக்கப்பட்டுள்ளன. கீழான ஒரு நிலையில் இருப்பதாக நாங்கள் எங்களைப் பற்றி எண்ணத் தொடங்கியுள்ளோம். எமது முழுச் சொரூபத்தின் பெருமையை வெளிக்கொண்டு வரக்கூடிய ஒரு நிலைக்கு நாங்கள் வளரக்கூடும் என்ற எண்ணம் எங்களை விட்டு விலகிச் சென்று விட்டது. நாங்களே எங்களைப் பலம் குறைந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்று கூறுமளவிற்கு நாங்களே எங்களைத் தூங்க வைத்துக் கொண்டுள்ளோம்......." என்றார்.

மேலும் அவர் "எனவே நாங்கள் இங்கிலாந்து அரசுக்கு அடிபணிந்த ஆளுநரின் பரந்த மனப்பான்மை கொண்ட வல்லாட்சிக்குட்பட்டே வாழ்ந்து வருகின்றோம். அவர் தமது அதிகாரங்களை பெரும்பாலும் ஐரோப்பியர்களைக் கொண்ட திணைக்கள நிர்வாகஸ்தர்களைக் கொண்டே ஆற்றி வருகின்றார்...." என்றார். தொடர்ந்து "மக்கள் தம்மைத் தாமே ஆள வழிவகுக்குந் திட்டங்கள் எதுவும் இயற்றப்படவில்லை...." என்றார். அது மட்டுமல்ல, மேலும் அவர் "நாங்கள் கேட்பது என்ன? மற்றைய சுயகௌரவங் கொண்ட மக்களைப் போல் எங்களை எங்கள் நாட்டில் இருக்க விடுங்கள். எங்களை நாங்களே ஆள இடமளியுங்கள். எமக்கு எம் நாட்டிலும் பிற நாடுகளிலும் சுய கௌரவத்தை ஏற்படுத்த வழி அமையுங்கள் என்றே கூறி வந்துள்ளோம். ஆகவே அப்பேர்ப்பட்ட ஒரு விடிவை நோக்கி முன்னேறிச் செல்ல எமக்கு வழி அமைத்துத் தாருங்கள் என்று கேட்கின்றேன். இலங்கை ஒரு பிச்சைக்கார நாடல்ல. அது தனது பாரம்பரியத்தைத் திருப்பித் தாருங்கள் என்றே கேட்கின்றது" என்றார். சேர் பொன் அருணாச்சலத்தின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க அந்தப் பேச்சின் சில பகுதிகளே இவை. அன்று அவர் பேசிய போது இலங்கை இருந்த நிலையில்தான் இன்று எமது தமிழ்ப் பேசும் மக்களும் பிரதேசங்களும் இருக்கின்றன. அன்று அவர் முடிக்குரிய குடியேற்ற நாடென்றார். இன்று இராணுவம் வலிந்து குடியேறிய நாடாக தமிழ்ப் பேசும் மாநிலங்கள் காட்சி அளிக்கின்றன. **எமது உரிமைகளை இழந்து சுயகௌரவத்தை இழந்து நாங்களே எங்களைத் தாழ்ந்தவர்கள் என்று எண்ணும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்றார் அவர். அன்று போல் இன்றும் இங்கு வல்லாட்சிக்கு வித்திடப்பட்டுள்ளது. அதன் காரணத்தினால் எங்களைப் பற்றிய எங்கள் மதிப்பீடு மிகவும் குன்றிப்போயுள்ளது.** சுயகௌரவத்தை இழந்து வாழத் தலைப்பட்டுள்ளோம். ஆனால் அதற்காக நாங்கள் மனதில் விரக்தியையும் அச்சத்தையுஞ் சுமந்து கொண்டு நடைப்பிணங்கள் போல் பவனி வரவேண்டும் என்று எண்ணுவது மடமை. இந்த நிலைமையை மாற்ற நாங்கள் முன்வர வேண்டும்.

அவ்வாறு நிலைமையைச் சீர்ப்படுத்துவதானால் **எங்களுள் ஒட்டுறவும் ஒருமைப்பாடும் வளர வேண்டும். புரிந்துணர்வு வளர வேண்டும்; ஆன்மீக எண்ணங்களும் அறஞ்சார் எண்ணங்களும் மேலோங்க வேண்டும்** என்பதை வலியுறுத்துவதே இந்தப் பேருரையின் முக்கிய குறிக்கோள்.

அரசியலுக்கும் ஆன்மீகத்திற்கும் என்ன தொடர்பு என்று நீங்கள் கேள்வி எழுப்பக் கூடும். நிறைய சம்பந்தம் உண்டு. அந்த சம்பந்தத்தையும் சேர் பொன் அருணாச்சலம் வாயினாலேயே உங்களுக்கு எடுத்துத் தருகின்றேன். 1918ஆம் ஆண்டு ஜனவரி மூன்றாந் திகதிய சிலோன் டெய்லி நியூஸ் பத்திரிகையில் வெளிவந்த "நாட்டுக்கான தகவல்" (A Message to the Country) என்ற கட்டுரையில் அவர் பின்வருமாறு கூறினார் - "அரசியல்த் திருத்தங்கள் வேண்டும் என்ற எங்கள் அவாவின் நிமித்தம் அத் திருத்தங்களே எமது ஒரே இலட்சியம் என்று நாங்கள் எண்ணிவிடக் கூடாது. நாங்கள் அரசியல் திருத்தங்களை நாடுவது எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு அல்ல. மாறாக எமது கடமைகளைச் செவ்வனே செய்து முடிப்பதற்காக - அதாவது எமக்கும் எமது நாட்டுக்கும் நாங்கள் செய்ய வேண்டிய கடமைகளின் நிமித்தம். ஒன்று சேர்ந்த குடிமக்களுக்கும் எம் ஒவ்வொருவரைப் போல இறைவனால் விதிக்கப்பட்ட கடமைகள் இருக்கின்றன. அவற்றைச் செயல்படுத்துவது அவசியம்." என்றார். மேலும் அவர் "எமது இளைஞர்கள் பொது வாழ்க்கையை ஆத்மீக அடிப்படையில் அமைக்க முன் வர வேண்டும். அதாவது எல்லோரினதும் நல்வாழ்க்கையின் அடிப்படையிலேயே எமது இளைஞர்கள் ஒவ்வொருவருந் தமது சொந்த வாழ்க்கை நலன்களைக் கட்டி எழுப்ப வேண்டும். எல்லோர் வாழ்க்கையுடனேயே தம் சொந்த வாழ்க்கையையும் அவர்கள் அடையாளங் காண வேண்டும். தமது நல உரித்துக்களை சகலரின் நல உரித்துக்களுடன் பிணைத்துக் கொண்டு எமது இளைஞர்கள் வாழ முன் வர வேண்டும். எமது முழுமூச்சுடனான சேவை என்ற எங்களின் அன்புக் காணிக்கையை எமது தாய் நாட்டின் காலடியில் செலுத்த நாங்கள் முன் வர வேண்டும்" என்றார். தொடர்ந்து "எமது இளைஞர்கள் ஒற்றுமையுடன் கடமையாற்ற முன்வர வேண்டும்" என்றுங் கூறினார்.

**மற்றவர்கள் நலனை முன் வைத்து அதன் அடிப்படையில் தமது நலனை ஏற்படுத்திக் கொள்வது என்பது ஆத்மீக வாழ்க்கையின் ஒரு முக்கிய அம்சமாகும்.** எமது நல உரித்துக்கள், எமது உறவினர் நல உரித்துக்கள், எமது கட்சியின் நல உரித்துக்கள் என்று வாழ்வது ஒரு குறுகிய கூட்டுக்குள் நின்று வாழும் வாழ்க்கை. எமது நாட்டுக்கு, எமது மக்களுக்கு எது முறையோ, எது சரியோ, எவை நன்மை பயக்குமோ அவற்றை நாடி அவற்றைத் தேடி வாழ்வது மேற்படி குறுகிய நோக்கில் இருந்து விடுபட்டு வாழ்தலாகும். ஆகவே குறுகிய சுய நலமிக்க வாழ்க்கையைக் கைவிட்டு வருங்காலத்தை எண்ணி எமது பாதையைச் சீரமைத்தல் ஆன்மீகத்துடன் தொடர்புபட்டதே. ஆன்மீகம் என்றால் என்ன? உள்நின்று இயங்கி ஒரு மனிதனைச் செயல்பட வைக்கும் அந்தச் சக்தியான ஆன்மாவை உணர்ந்து அதனைக் கொண்டு உலகத்தில் தமக்கென எதிர்பார்ப்பு ஏதுமில்லாமல் தகுதி உடையவர்க்குத் தம்மால் வழங்கக் கூடிய சேவைகளைச் செய்வதே ஆன்மீகம். ஆன்ம ஈகம் ஆன்மீகம். எங்கள் ஆன்மாவை உணர்ந்து அதன் சக்தியால் உலகோர்க்குப் போதிய உதவி செய்தலே ஆன்ம ஈகம் ஆகும்.

இங்கே அகமும் புறமும் சம்பந்தப்படுகின்றன. உள்ளே நின்று உந்துவது அகம். வெளியே நின்று ஆற்றுவது புறம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறத்தால் ஈதல் என்பது தான் சாதாரண மக்களாகிய நாங்கள் செய்வது. அகத்தால் ஈதலைத் தம்மை அறிந்த புண்ணிய ஆன்மாக்கள் செய்கின்றார்கள். ஒரு உதாரணம் கூறுகின்றேன். நானும் என் சிங்கள நண்பர் தளகுணே அவர்களும் ஒரு நாள் அவரின் உத்தியோகபூர்வ வாகனத்தில் பதுளை நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். அவிஸ்ஸாவலை ரோட்டில் ஒரு திருப்பத்தில் பெரிய கனவாகனம் ஒன்று வேகமாக வந்து திரும்பி மோதியதில் எங்கள் வாகனத்தின் முன்பக்கம் சப்பையாகி விட்டது. எங்கள் இருவருக்குமோ எங்கள் வாகன சாரதிக்கோ எந்த வித பாதிப்பும் ஏற்படவில்ல. உடனே தளகுணே அவர்கள் எமது ஆன்மீக குருநாதரை நினைத்து அவரால்த் தான் நாங்கள் காப்பாற்றப்பட்டோம் என்று கூறினார்.

நாங்கள் எங்கள் குருநாதரைப் பின்னர் கண்ட போது நாங்கள் கேட்காமலே திரு.தளகுணே அவர்கள் கூறியது போல் பிறர் கேட்ட ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும் விதத்தில் எம்மை நாடி வந்த பாரிய விபத்தைத் தான் தடுத்து நிறுத்தியதாகக் கூறி "என்ன! நான் கூறியது சரிதானே?" என்று எங்கள் இருவரிடமுங் கேட்டார். இவ்வாறு தான் ஞானியர்களின் அக ஈகை அமைந்திருக்கும். ஆத்ம பலம் பெற்றவர்களுக்கு, ஆன்மீக மேம்பாடு அடைந்தவர்களுக்கு இது ஒரு சாதாரண விடயம்.

ஆனால் எம் போன்றோர்கள் புற ஈதலில்த் தான் ஈடபட முடியும். அவ்வாறு ஈடுபடுவதால் எமது ஆன்மா உயர்வடைந்து காலா காலத்தில் தன்னைத் தானே உணர்ந்து ஆன்ம ஈகத்தில் உறைந்திருக்க முடிகின்றது என்கின்றது எமது இந்து மதம். புற ஈதல் பற்றி வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார் - "தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு." அதாவது முயற்சி செய்து பெற்ற பொருள் முழுவதும் தகுதியுடைவர்களுக்கு உதவி செய்வதற்கே பயன்படுத்தப்படவேண்டும். எனவே முயற்சி செய்து பெற்ற எமது வசம் இருக்கும் பொருட்கள் பிறருக்கு உதவி செய்வதற்கே பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூறுகின்றார் வள்ளுவப் பெருமான். ஒட்டுறவும் ஒருமைப்பாடும் பற்றிப் பேச வந்த நீங்கள் எதற்காக திருக்குறளின் ஒப்புரவு அத்தியாயத்தில் இருந்து பிறருக்கு உதவி செய்வது பற்றிக் கூறுகின்றீர்கள் என்று உங்களுட் சிலர் கேட்கலாம். காரணம் இருக்கின்றது. **இன்றைய தமிழ்ப் பேசும் மக்களிடையே பிறருக்கு உதவி செய்வது என்பது குறைந்து கொண்டே போகின்றது. தம்மைப் பற்றியுந் தம்மோடு சம்பந்தப்பட்டவர்கள் பற்றியும் மட்டுமே சிந்திக்கின்றார்கள். நாளை என்ன நடக்கக் கூடும் என்பதைப் பற்றி அவர்கள் சிந்திப்பதாகத் தெரியவில்லை. எமக்கு இன்று குறிக்கோள்கள் இல்லை.**

குணநலன்களும் இல்லை. குறைபாடுகளே மேலோங்கி நிற்கின்றன. ஒரு உதாரணத்தைத் தருகின்றேன். வெளிநாட்டுப் பணம் சும்மா கிடைக்கின்றது என்பதற்காகச் சிலர் செலவு செய்யும் விதத்தைப் பார்த்தால் பரிதாபகரமாக இருக்கின்றது. உண்மையில் பணம் அனுப்புவோரில் பெரும்பான்மையினர் மிகவுங் கஷ்டமான சூழ்நிலையிலேயே பணத்தைச் சம்பாதித்து அனுப்புகின்றனர். தாய், தந்தையர், உற்றார், உறவினர் என்ற அவர்களுக்குத் தமது கடமைகளைச் செய்யவேண்டும் என்ற நல்லெண்ணத்தில் அவர்கள் பணம் அனுப்புகின்றார்கள்.

அந்தப் பணத்தைத் தாம் வசிக்கும் அந்தத் தேசங்களில் தாமே வீணாகச் செல்வு செய்யாமல் தமது உற்றார் வாழ்க்கை மேம்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் அந்தப் பணத்தை அனுப்புகின்றார்கள். அந்தப் பணம் வீண் ஆடம்பரச் செலவு செய்வதற்காகவா அனுப்பப்படுகின்றது என்பதை நாங்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

அதைக் கொண்டு வறியவர்களையாவது மேல் எழுப்ப வேண்டும் என்ற எண்ணமும் எமக்கு வருவதில்லை. வெறும் பகட்டை வெளிக்காட்டவே அந்தப் பணத்தைப் பாவிக்கின்றோம். எமது வாழ்க்கை முறையை உன்னிப்பாகக் கவனித்துப் பாருங்கள். நூறு வருடங்களுக்கு முன்னர் சிங்கப்பூர், மலேஷியாவில் இருந்து வந்த பணத்தைச் செலவழித்தோம். இன்று சுவிஸ்ஸில் இருந்தும், மத்திய கிழக்கில் இருந்தும் வேறு நாடுகளிலிருந்தும் வரும் பணத்தைச் செலவழிக்கின்றோம். ஆக மொத்தம் நாங்கள் உழைக்காமலே வாழ்கின்றோம். எமக்குக் கிடைக்கும் ஐஸ்வரியங்களைப் பகிர்ந்து கொள்ளாமலே காலத்தைக் கடத்துகின்றோம். சிலர் கோயில்களுக்கு அள்ளிக் கொடுக்கின்றார்கள். கோயிலுக்குக் கொடுத்தால் புண்ணியம் என்று கூறுகின்றார்கள். இறைவன் நீங்கள் கொடுக்கும் வெளிநாட்டுப் பணத்தை எதிர்பார்த்தா இருக்கின்றான்? எல்லாம் எங்கள் படாடோபத்தை வெளிக்காட்டவே நாங்கள் இவ்வாறு செய்கின்றோம். கோயில்களோ பணத்தையும் நகைகளையும் கோயில்களுக்கு மழைக்காலம் வரும்போது செலவழிக்கத் தேவையாக இருக்கும் என்று சேமித்து வருகின்றார்கள். ஆகவே பணம் வந்து கொண்டுதான் இருக்கின்றது. ஆனால் அது தக்கவர்கள் இடத்தில் போய்ச் சேராமல் இருப்பதால் எங்கள் வாழ்க்கைத் தரம் முன்னேறாது இருக்கின்றது.

அடுத்து, எங்கள் பிரதேசம் கல்விக்குப் பெயர் போனது. கலாசாரத்திற்குப் பெயர் போனது. இப்பொழுது கள்ளுக்குஞ் சாராயத்திற்குந் தான் பெயர் பெற்று வருகின்றது. யாழ்ப்பாணத்தில் நாளொன்றுக்கு சராசரியாக ஒருகோடி ரூபாவிற்குக் குறையாமல் மதுபானங்கள் விற்பனையாவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மதுவரித் திணைக்கள விபரங்களின்படி சென்ற ஆண்டு யாழ் மாவட்டத்தில் 71 ஆயிரத்து 336 லீற்றர் வெளிநாட்டு மதுபானங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**போரின் பின்னர் எங்கள் வாழ்க்கைகளைக் குறிக்கோள் அற்றதாக ஆக்கச் சதிகள் செய்யப்பட்டு வருகின்றன என்று அறியாமலே நாங்கள் விட்டில் பூச்சிகள் போல் அனலை நோக்கிப் பயணித்து வருகின்றோம். எங்கள் வாழ்க்கை முறையில் ஒரு மாற்றம் வேண்டும். ஒரு திருப்பம் வேண்டும். ஒரு திசை அமைக்கப்பட வேண்டும்.**

அதற்கு **எம்மிடையே ஒட்டுறவும் ஒருமைப்பாடும் ஏற்பட வேண்டும்.** இவ்வாறான சமுதாய மாற்றம் எம்மிடையே மலராது இருந்தால் யாழ் மண் அதன் தனிச்சிறப்பை முற்றாக இழந்து விடும். தனிப்பட்ட எங்களிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் கோபதாபங்கள், பொறாமைகள், எரிச்சல்கள் யாவும் எமது சமுதாயத்தைப் பாதிக்காத விதத்தில் நாங்கள் நடந்து கொள்ள முன்வரவேண்டும். தன் மூக்குப் போனலும் எதிரிக்குச் சகுனம் பிழைக்க வேண்டும் என்ற விதத்தில் நாங்கள் நடந்து கொள்ளல் ஆகாது.

**இன்றைய சூழலில் நாம் எல்லாவற்றையும் இழந்துவிட்டோம் என்று கூறி ஏங்குவாரும் உளர். இனி என்ன செய்ய, பணிந்துபோவோம் என்று அதிகாரத்தை நாடி அடிவருடிகளாக உருவெடுப்பவர்களும் உளர். அது காலத்தின் கோலம். எனினும் இன்று எங்கள் இளைஞர்கள் யுவதிகள் எங்களது மண்ணின் தனிச் சிறப்பு பற்றி அறியாமல் வாழ்கின்றார்களே என்று நாங்கள் மலைத்துப் போகும் அளவிற்கு நிலைமை கட்டுக்கடங்காமல் போயுள்ளதை உணர்கின்றேன்.** பண்பாடு, கலாச்சாரம், ஒழுக்கம், கல்வி என்பவைதான் எங்கள் தனிச் சிறப்பாக இருந்து வந்துள்ளது. எம்மிடையே ஒழுக்கமிகு வாழ்க்கைக்கு அந்நாட்களில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது. சமூக நல்லிணக்கத்திற்கும் கட்டுக்கோப்பான வாழ்க்கை முறைக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது. அண்மையில் கூட ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் எமக்கு உரிமைகள் நல்கக் கூடாது என்று துடிக்கும் அமைச்சர் விமல் வீரவன்ஸ கூட தமிழர் பாரம்பரியமாக உன்னத பண்புகள் கொண்ட ஒரு இனம் என்று சிங்களத்தில் கூற நான் கேட்டேன். அவ்வாறான எமது சமூகத்தில் தற்போது நாங்கள் காண்பது என்ன? குடும்பங்களில் வன்முறை, விபசார விடுதிகளின் தொகைகளில் அதிகரிப்பு, விவாகரத்து வழக்குகளின் தொகை அதிகரிப்பு, போதைப் பொருள் பாவனையில் கணிசமான அதிகரிப்பு, அதீத புகைபொருள், மற்றும் மது பாவனை, தற்கொலைகளின் தொகை அதிகரிப்பு, கொலை, கொள்ளைகள் அதிகரிப்பு - இவ்வாறு பல விதமான சமூகச் சீர்குலைவு நிகழ்வுகளுக்கு நாங்கள் இன்று முகம் கொடுத்து வருகின்றோம். இவை எவ்வாறு எங்கள் அமைதியான யாழ் சூழலுக்குள் ஊடுருவின என்று எவரும் கேட்பதாகத் தெரியவில்லை. இன்றைய எமது இளைஞர்கள் பிறந்து வளர்ந்ததே போர்க்காலச்சூழலில். அவர்களுக்குப் போர்வீரர்கள் அந்நியர்கள் அல்ல. வன்முறை அந்நியம் அல்ல. வன்முறையின் அடிப்படையிலான வாழ்க்கை முறை அந்நியம் அல்ல. ஆனால் நாங்கள் அந்தப் போர்வீரர்களின் பின்னணியைச் சற்றுப் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். வறுமை, கல்வியில் சிரத்தை இன்மை, சமுதாயப் புறக்கணிப்பு, வேலை கிடைக்காமை போன்ற பல காரணங்கள் அவர்களை இராணுவத்தில் சேர வைத்தன. கலைநோக்கான பார்வையையே, கலாச்சார விழுமியங்களையோ, கல்வி மீது பற்றையோ, ஒழுக்கம் மீது ஓர்மத்தையோ நாங்கள் அவர்களிடம் எதிர்பார்க்க முடியாது. எப்பொழுது மரணம் சம்பவிக்குமோ என்ற பயத்துடன் போர்க்காலங்களில் வளர்ந்த அவர்கள் அன்றன்றைக்குக் கிடைக்குஞ் சுகங்களையே நாடி வாழ்ந்திருப்பர். அத்துடன் தென்னவர்கள் பொதுவாகப் போர்த்துக்கீசர் விட்டுச் சென்ற சில வாழ்க்கை முறைகளில் முற்றாக மூழ்கி வாழ்பவர்கள். "காப்பள்ளா ∴பீப்பள்ளா சுதி கரப்பள்ளா" என்பது அவர்களின் பொதுவான வாழ்கைத் தத்துவம். அதாவது "நன்றாகச் சாப்பிடு, நன்றாகக் குடி, அன்றன்று கிடைக்குஞ் சகல நுகர்தல்களிலும் ஈடுபட்டு சுகம் அனுபவிப்பாயாக!" என்பதே அதன் பொருள். இப்பேர்ப்பட்டவருடன் பழகும் வாய்ப்பைப் பெற்ற எங்கள் இளைஞர்கள் எங்கே புத்தகங்களைத் தூக்கப் போகின்றார்கள், புத்தியை விருத்தி செய்யப்போகின்றார்கள்? எம் இளைஞர்களின் வாழ்க்கை முறையில் ஏற்பட்ட இந்த மாற்றத்தால் ஏற்பட்டது தான் சமூகக் கலாச்சாரச் சீரழிவு. ஆண்கள் பெண்கள் இருபாலாரையும் இது தாக்கி வருகின்றது. இவை தானாக ஏற்பட்ட தற்செயலான செயல் என்ற நாங்கள் எண்ணிவிட முடியாது. திட்டமிட்டு இப்பேர்ப்பட்ட கலாச்சாரச் சீரழிவிற்கு வித்திடப்பட்டு வருகின்றது என்பது என் கருத்து. எமது இளைஞர்கள், யுவதிகள் மீண்டும் தமது உரிமைகள் பற்றி, தமது தனித்துவம் பற்றி, தமது பாரம்பரியம் பற்றி, தமது வரலாறு பற்றி இனிமேல் கரிசனை செலுத்தல் ஆகாது அவர்கள் அன்றன்று கிடைக்கும் அற்ப சுகங்களுள் அமிழ்ந்து விட வேண்டும் என்ற எண்ணத்துடன் தான் போதைப் பொருட்களும் விபசார விடுதிகளும் இளைஞர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கு நம்மவரே உடந்தையாக இருந்து வருகின்றனர்.

தமது சமுதாயத்தின் சீரழிவிற்குத் தாமே காரணமாய் விளங்குகின்றார்கள் என்பதை அறிந்தோ அறியாமலோ செய்து வருகின்றனர். இராணுவத்தினரை முட்டாள்கள் என்று நாங்கள் எண்ணுவது தவறு. அவர்கள் தமக்கிடப்படும் கட்டளைகளை நிறைவேற்றவே இராணுவத்தில் சேர்ந்துள்ளார்கள். "தமிழ் மக்கள் எமது நாட்டைப் பிரிக்க எத்தனிக்கின்றார்கள். அதைத்தடுத்து நிறுத்த அவர்களின் இளைஞர் குழாமை உங்கள் பக்கம் இழுத்து அவர்களுக்கு மது, மாது, சூது போன்றவற்றில் ஈடுபாட்டை ஏற்படுத்துங்கள். அப்பொழுது தான் அவர்கள் மீண்டும் போர் பற்றிச் சிந்திக்க மாட்டார்கள்" என்று அறிவுரை வழங்கினால் அவற்றைச் சிரமேற் சுமந்து கடமையாற்றுவது அவர்களின் கடமை. ஆகவே போர் வீரர்கள் மீது கோபம் கொள்வதில் பிரயோசனம் இல்லை. **நாங்கள் எங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். நாங்கள் எங்கள் பாரம்பரியங்களை நினைத்துப் பார்க்க வேண்டும். நாங்கள் பொறிக்குள் அகப்பட்டு சிக்கிக் கொண்டுள்ளோம் என்ற உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும். எமது இளைஞர் யுவதிகளுக்கு இதை விளக்கிக் கொடுக்க வேண்டும்.** யாராவது நான் கூறும் கூற்று பொய்யானது, அப்படி எதுவும் நடைபெறவில்லை என்று கூறினால் எமது இளைஞர்களின் நடவடிக்கைகளையும் இராணுவத்தினரின் நடவடிக்கைகளையும் கூர்ந்து கவனியுங்கள் என்று தான் கூறுவேன்.

ஏன் என்றால் போருக்குப் பின்னர் தான் யாழ்ப்பாணத்தில் மது, போதைப் பொருள்பாவனை போன்ற புதிய மது கலாசாரமும் வேறு பல கலாசாரச் சீரழிவுகளும் அதிகரித்துள்ளன என்பது ஆராய்ந்தால் புலப்படும். 30 ஆண்டுகளுக்கு முன் இப்பேர்ப்பட்ட மதுபான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்பாடு யாழ்ப்பாணத்தில் காணப்படவில்லை என்று ஒரு கட்டுரையில் அண்மையில் வாசித்தேன். மேலும் அக் கட்டுரையில் உயர்க் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்கள் கூட மதுப்பழக்கத்திற்கு அடிமையாகும் சூழல் யாழ் மாவட்டத்தில் இன்று அதிகரித்து வருகின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வயது வந்தவர்களுக்கு நிகராக இளையவர்களுந் தாராளமாக மதுவைப் பாவிக்கின்றனர் என்றும் மதுபானசாலைகளில் நின்று மது அருந்தாது டின்கள், போத்தல்கள் போன்றவற்றில் வாங்கிச்சென்று வீதிகளில், சந்திகளில் வைத்து மது அருந்துகின்றார்கள் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதில் நாங்கள் கவனிக்க வேண்டியது "மதுப்பழக்கத்திற்கு அடிமையாகும் சூழல் யாழ் மாவட்டத்தில் அதிகரித்து வருகின்றது" என்ற கருத்தை. எமது வருங்கால சந்ததியினர் மேல் எமக்குக் கரிசனை இருந்தால், இப்பேர்ப்பட்ட சூழல் தொடர்வதை அரசாங்கமோ, மாகாண சபையோ, உள்நாட்டு அதிகாரங்களோ உடனே தடுத்து நிறுத்த வேண்டும்.

அவ்வாறு செய்யப்படுவதாகத் தெரியவில்லை. இங்கு தான் பொது மக்களாகிய நாங்கள் எமது ஒட்டுறவையும் ஒருமைப்பாட்டையும் வெளிக்காட்ட வேண்டிய கடப்பாடு எழுந்துள்ளது. நாங்கள் இதன்பொருட்டு போதிய கவனமீர்க்குங் கருத்தரங்கங்களையும், ஊடக வெளிப்பாடுகளையுங், கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளையும் நடத்த ஆவன செய்ய வேண்டும். எங்கள் சாதிகள், மதங்கள், தொழில்கள், பணவசதி - வசதியின்மைகள் போன்றவற்றை மறந்து எமது குழந்தைகள், எமது மாணவர்கள், எமது இளைஞர்கள் - யுவதிகள் என்று அவர்கள் அனைவரையும் அணைத்துக் கையேற்று, விழிப்புணர்வை அவர்கள் மத்தியில் ஏற்படுத்தவேண்டும்.

எமது வருங்கால சந்ததியினர் தவறான வழியில் செல்ல இடமளிக்கக் கூடாது என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் மேலோங்க வேண்டும். சிவத்தமிழ்ச் செல்வியார் இருந்த காலத்தில் எம்மை எல்லாம் அணைத்து எமக்கு வழிகாட்ட ஒரு அன்புச் செல்வியார் இருந்தார். எமது சமுதாயத்திற்கு அவர் போன்றவர்களின் அறிவுரைகள் அதிகமாகத் தேவைப்படுகின்ற போது அவர்கள் இன்று எங்கள் மத்தியில் இல்லாதிருப்பது மிகுந்த வருத்தத்தையும் வேதனையையும் அளிக்கின்றது. ஆனால் **இறைவன் எம்மைத் தவள விட்டுத்தான் எழுந்து நிற்க வைப்பான். கஷ்டத்தில் ஆழ்த்தியபின் கை கொடுத்துக் காப்பாற்றுவான்.** நாங்களே எங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் சிவத்தமிழ்ச் செல்வியாரை எம் மத்தியில் இருந்து தன்னண்டை அழைத்திருக்கக் கூடும். எனவே நாங்கள் தான் எம்மைத் திருத்த வழி அமைக்க வேண்டும்.

எவ்வாறு திருந்துவது? முகாமைத்துவத்தில் ஒரு கருத்து நிலவுகின்றது. தனிமனிதனோ, ஒரு நிறுவனமோ, ஒரு மக்கட் கூட்டமோ, ஒரு நாடோ எவையாக இருந்தாலும் நான்கு விடயங்களை ஆராய வேண்டும். ஆராய்ந்து அவை பற்றி உரிய நடவடிக்கை எடுத்தால் எம்மைத் திருத்திக் கொள்ளலாம். நாம் போகும் வழியை வெற்றிப் பாதையாக அமைக்கலாம் என்று நவீன முகாமைத்துவச் சாஸ்திரம் பகர்கின்றது. அந்த நான்கு விடயங்களும் என்ன? அதை ஆங்கிலத்தில் SWOT என்பார்கள் அதாவது Strengths, Weaknesses, Opportunities மற்றும் Threats என்பவையே அவை. அதாவது எங்கள் ஆற்றல்கள், வலுவின்மைகள், வாய்ப்புகள், அச்சுறுத்தல்கள் என்பன அவை. "ஆவன்னா வானா, வாவன்னா ஆனா என்று நினைவில் வைத்துக் கொள்ளலாம்! எந்த ஒரு தருணத்திலும் ஒரு நிறுவனமோ, தனி மனிதரோ சறுக்கிக் கொண்டு கீழ் நோக்கிப் போவதாகத் தெரிந்து கொண்டோமானால் அதற்கு நாங்கள் செய்ய வேண்டிய அவசர சிகிச்சை என்ன என்று பார்த்தோமானால், உடனே மேற்கண்ட நான்கு தலையங்கங்களின் கீழ் எமது நிறுவனத்தின் அல்லது தனிமனிதரின் அப்போதைய வாழ்க்கையைக் கணித்து மதிப்பீடு செய்ய வேண்டும். எமது ஆற்றல்கள் என்ன? எமது வலுவின்மைகள் என்ன? எமது வாய்ப்புக்கள் என்ன? எம்மைத் தாக்கும் அச்சுறுத்தல்கள் என்ன? என்று ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும். அவ்வாறு முடிவெடுத்த பின்னர் எங்கள் ஆற்றல்களை நாங்கள் வலுப்படுத்தவேண்டும்.

**வலுவின்மைகளைக் குறைக்க வேண்டும். வாய்ப்புக்களைத் தவறவிடாது நற்பயன்கள் பெற எத்தனிக்க வேண்டும். அச்சுறுத்தல்களைப் போதிய மட்டில் தடுக்க வேண்டும்.** இவற்றில் ஆற்றல்கள், வலுவின்மைகள் என்பவை அகம் சார்ந்தவை. மனதோடு சம்பந்தப்பட்டவை. மற்றைய இரண்டும் அதாவது வாய்ப்புக்களும் அச்சுறுத்தல்களும் வெளியில் நின்று வருபவை. புறம் சார்ந்தவை. ஆகவே இந்த விஞ்ஞான பூர்வமான முகாமைத்துவப் பரிகார முறையை எங்கள் தமிழ்ச் சமுதாயத்தின்பால் திருப்பினோமானால் நாங்கள் காண்பது என்ன? எமது தமிழ் மக்கள் பொதுவாகவே ஆற்றல் மிக்கவர்கள் என்று பெயர் எடுத்தவர்கள். இங்கிருந்து வெளிநாடு சென்ற தமிழர்கள் அங்குள்ள சுதந்திரக் காற்றை சுவாசிக்கத் தொடங்கியதும் எந்த அளவுக்குச் செழுமை பெற்று மலர்ந்துள்ளார்கள் என்று நான் கூறி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. ஆகவே சந்தர்ப்பங்கள் கிடைத்தால் அவர்கள் தமது ஆற்றல்களை மேம்படுத்தி வெளிப்படுத்தக் கூடியவர்கள் என்பது வெளிப்படை.

எமது பலவீனங்கள், வலுவின்மைகள் என்ன? இங்கு தான் நான் இதுவரை பேசியதின் கருவே அமைந்திருக்கின்றது. நாங்கள் பொதுவாக சுயநலம் மிக்கவர்கள். ஆணவங் கொண்டவர்கள். மற்றவர்களைப் போலியாக மதிப்பவர்கள். உள்ளன்புடன் மதிக்கத் தெரியாதவர்கள். எனவே எங்களுள் ஒட்டுறவு இல்லை, ஒற்றுமை இல்லை.

**ஒருமைப்பாடு இல்லை. ஒழுங்குகள் இல்லை. ஒவ்வொருவருந் தாம் எடுத்துக் கொண்ட வழியே சரி என்று வாதாடுபவர்கள். இந்த நிலையை மாற்றி எங்கள் வலுவின்மைகளைக் குறைப்பதானால் எங்களுள் ஒட்டுறவும் ஒருமைப்பாடும் அவசியம்.** இந்த ஒட்டுறவு என்பது எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுமைகளை மறந்து உறவு கொண்டாட வேண்டும் என்பதல்ல.

அண்மையில் ஒரு நண்பர் "நீங்கள் ஒற்றுமையைப் போதிக்கின்றீர்கள். என் மகன் ஒரு வேற்றுசாதிக்காரியை விரும்புகின்றான். ஒற்றுமைக்காக "அவளைக் கட்டிக் கொள்ளடா மகனே!" என்று கூறச் சொல்கின்றீர்களா?" என்று கேட்டார். அதற்கு நான் கூறினேன் "வேண்டாம் என்றால் வேண்டும் என்பார்கள் எங்கள் குழந்தைகள். வேண்டும் என்றால் வேண்டாம் என்பார்கள். கட்டிக்கொள், கட்டிக்கொள்ளாதே என்று கூறுவது எங்கள் கடமையன்று. கட்டிக்கொண்டால் என்ன நடக்கும், என்ன நடக்காது என்பவற்றை உங்கள் பிள்ளைகளுடன் கூடி இருந்து ஆழமாக ஆராயுங்கள். சாதிகள் விட்டுத் திருமணம் செய்வதால் என்ன நடக்கக் கூடும்; எந்த விதமான குடும்ப, சமூகத் தாக்கங்களை நாங்கள் எதிர்கொள்ள நேரிடும்; மற்றைய தாக்கங்கள் எவை; இன்று சுகமாக வாழ்க்கை அமைந்தாலும் உங்கள் குழந்தைகளின் காலம் வரும்போது அவர்களுக்கு வரன் தேடும் போது என்ன நடக்கும் என்ற பலதையும் ஆராயுங்கள். அப்படி அறிந்து தெரிந்து கொண்ட பின்னரும் உங்கள் மகன் தன் விருப்பத்தில் இருந்து விலக மாட்டான் என்று தெரிந்தால் நீங்கள் உங்கள் கடமையைச் செவ்வனே செய்த திருப்தியில் அவனைத் தன் வழியில் போக விடுங்கள்" என்றேன். "நாங்கள் பலாத்காரம், வன்முறை போன்றவற்றில் இறங்கி எங்கள் குழந்தைகளையே எதிர்ப்பது என்பது எந்த விதத்தில் ஞாயமாகும்" என்று கேட்டேன். நண்பருக்கு அவ்வளவு உடன்பாடு இல்லாவிட்டாலும் மௌனம் சாதித்தார். "குழந்தைகளின் மணவாழ்க்கை மகிழ்வுடன் அமையுமா என்பதே எங்கள் கரிசனையாக இருக்க வேண்டும். எங்கள் சாதிவெறி, மத வெறி, இன வெறி அன்று" என்று கூறியனுப்பினேன்.

ஒட்டுறவும் ஒருமைப்பாடும் விட்டுக் கொடுத்தலில் தான் தங்கி இருக்கின்றது. எந்த நேரமும் விட்டுக் கொடுக்கக் கூடாது என்ற மனோநிலையில் இருப்பவர்கள் தமக்கும் தம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்திக் கொண்டேயிருக்கின்றார்கள். இதை உணர்ந்தால் எமது வாழ்க்கை முறை சிறக்கலாம். எனவே எங்கள் பலவீனங்களை, வலுவின்மைகளை, ஆராய வேண்டிய காலம் இப்பொழுது வந்துள்ளது. நாம் எமது வலுவின்மைகளைக் குறைக்காவிட்டால் வெளிப் பாதிப்புகள் எம்மைத் தாக்கத் தொடங்கிவிடுவன. அவை தாக்கத் தொடங்கி விட்டன என்பதைத்தான் இந்தப் பேருரையில் உங்களுக்கு உணர்த்தப் பாடுபடுகின்றேன்.

அடுத்து வாய்ப்புக்களும் அச்சுறுத்தல்களும். வாய்ப்புக்கள் வந்து கொண்டேயிருக்கின்றன. அவற்றை எங்கள் ஒற்றுமையின்மையால், ஆணவத்தால், சுயநலத்தால் நாங்கள் தட்டிப் போக்கிக் கொண்டிருக்கின்றோம். இங்கும் ஒட்டுறவும் ஒருமைப்பாடும் தேவையாக இருக்கின்றன. **கட்சி, கட்சி என்று நாங்கள் கட்சிகளையே வளர்க்க எத்தனிக்காது மக்கள், மக்கள் என்று எம் மக்கள் நலன்களுக்காகக் கட்சிகளைப் பின்னணிக்குத் தள்ளிவிட்டு ஒற்றுமைப்பட்டு வாய்ப்புக்களைத் தவறவிடாது நற்பயன்களைப் பெற ஆவன செய்ய வேண்டும்.** அச்சுறுத்தல்கள் இருக்கத்தான் செய்யும். அவற்றைத் தடுக்க அங்கும் எம் மத்தியில் ஒட்டுறவும் ஒருமைப்பாடும் அவசியம். ஒட்டுறவும், ஒருமைப்பாடும் இருந்தால் எம்மால் அந்த அச்சுறுத்தல்களை நிச்சயமாகச் சமாளிக்க முடியும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே, ஒற்றுமை இன்றேல் அனைவர்க்குந் தாழ்வே. எனவே எமது ஆற்றல்களையும் வலுவின்மைகளையும் உணர்ந்து, வாய்ப்புக்களைத் தவறவிடாது நற்பலன்கள் எய்த, அச்சுறுத்தல்களைப் போதிய மட்டில் தடுக்க, ஒட்டுறவும் ஒருமைப்பாடும் எம் மக்கள் மத்தியில் அவசியம் என்று கூறி, வருங்காலத்தை நாங்கள் நம்பிக்கையுடன் எதிர்கொள்வோமாக என்று கூறி என்னை இன்று உங்கள் மத்தியில் பேச இடமளித்த அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு எனது நன்றி.

*(22ஆம் பக்கத் தொடர்ச்சி)*

நிலைபற்றியெல்லாம் இந்த நூலில் குறிப்பிட்டிருப்பதை இளைய தலைமுறையினர் படிக்கவேண்டும். இத்தகைய நல்ல கருத்துக்கள் அடங்கிய நீதியரசரின் சொற்பொழிவுகளில் ஒரு பகுதியை மட்டுமே இந்து மாமன்றம் ஆவணப்படுத்தி வெளியிட்டுள்ளது. இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. அவையெல்லாம் காலப்போக்கில் நூலாக வெளிவரும் என எதிர்பார்க்கலாம்" என்று கூறினார்.

மேற்படி இரு நூல்களினதும் முதற்பிரதிகளை யாழ் இந்தியத் தூதரக துணைத் தூதுவர் திரு. வி.மகாலிங்கம் அவர்களிடமிருந்து லண்டன், நல்லை ஆதீனக் கட்டிடக் குழுவின் பொருளாளர் திரு.வே.சிவசுந்தரம் பெற்றுக்கொண்டார். இதனைத் தொடர்ந்து சத்திய வித்தகர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அவர்கள் "தெய்வத்திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவாக "ஒட்டுறவும் ஒருமைப்பாடும்" என்ற பொருளில் பேருரையாற்றினார்.

நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்களுக்கு மாமன்றத்தினால் "சத்திய வித்தகர்" என்ற விருது அளிக்கப்பட்டதையொட்டி கவிஞர் சட்டத்தரணி ந.காண்டீபன் ஆக்கிய வாழ்த்துப் பாமாலையை செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களால் வாசிக்கப்பட்டு இந்திய துணைத் தூதுவர் திரு. வி.மகாலிங்கம் அவர்களால் வழங்கப்பட்டது.

**இந்த நிகழ்வின்போது இலண்டன் சிவஞானம் ரமேஸ் அவர்களது அன்பளிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் சிலருக்கு மடிக்கணினிகளும், மாமன்றத்தின் அன்பளிப்பாக ஆலயங்களுக்கு பன்னிரு திருமுறை தொகுப்பு நூல்களும் வழங்கப்பட்டன.**


மாமன்றப் பொதுச் செயளாளர் கலாநிதி முத்தையா கதிர்காமநாதன் அவர்களது நன்றியுரையுடன் நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களும் ஆராதனைகளும்

தெய்வத் திருமகள்
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி



நரர் பயில் தேசந்தன்னில் நான்மறை பயிலா நாட்டிற் பிறக்காது, மாதவஞ் செய்த இப்புண்ணிய பூமியில் பிறக்கும் பேறு பெற்றவர்கள் நாங்கள். பார்க்குமிடமெல்லாந் திருக்கோயில்; கேட்குமிட மெல்லாம் ஆலய மணியோசை; கூடிப் பழகுவது தொண்டரினம்; பேசிப் பழகுவது திருவார்த்தை; இந்த நிலையில் எமக்கு மன நலமும் இன நலமும் நல்லபடி வாய்க்கப்பெற்றுள்ளன. இத்தகைய வாய்ப்பை வெளிப்படுத்தி நிற்கும் இடங்களே ஆலயங்களாகும். இவற்றைச் சேர்ந்து வாயினால் வாழ்த்தி நெஞ்சினால் நினைத்துச் சென்னியைத் தாழ்த்தி நின்று எமக்கு இந்தப் பிறவியைத் தந்த இறைவனை வழிபடுவதே மாண்புடைச் செயலாகும். உள்ளத்தின் வளர்ச்சிக்கும், உயிரின் மலர்ச்சிக்கும் வழிபாடு முக்கியமாகும்.

### ஆலயந் தொழுவது சாலவும் நன்று

இறைவன் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்தவன். எனினும் ஆன்மாக்களுக்கு அருள்புரிவான் வேண்டித் திருமேனிகளை இடமாகக் கொண்டு திருக்கோயில்களில் எழுந்தருளிக் காட்சி தருகிறான். இந்த உண்மையைச் சைவமக்கள் நம்பிக்கையோடு ஏற்றுக் கொள்வர். ஏனைய இடங்களில் இறைவனை அறிந்து போற்றுவதிலும் பார்க்கத் திருக்கோயில்களில் அவனை உணர்ந்து போற்றுதல் எளிதாகிறது. இறைவனை எங்கும் காணலாம் என்று கூறுவது முற்றிலும் உண்மை. ஆனால் அப்படிக் காண்பதற்கு உயர்ந்த பக்குவம் வேண்டும். காணுகின்ற பொருள்கள் அனைத்திலுங் கடவுளைக் காண்பவராக இருப்பவர்களே இத்தகைய பக்குவம் உடையவர்கள். ஆனால் எல்லோராலும் இதனைச் சாதித்துவிட முடியாது. குறிகளும் அடையாளமும் அமைகின்றபொழுதுதான் கோயில் வழிபாட்டிற்பக்தி உண்டாகிறது. பக்தி நெறிக்கு வாயில்களாக அமைந்தவை திருக்கோயில்களே. நமது சுட்டுணர்வினால் அறியமுடியாத இறைவன் திருக்கோயில் வழியாக உயிர்களுக்குத் திருவருளை வழங்குகின்றான். பசுவின் உடம்பெங்கும் பால் நிறைந்து காணப்படுவதுபோல் உலகம் எங்கும் நிறைந்திருப்பது இறைசக்தி. பாலைப் பெறுமிடம் பசுவின் மடியாக இருப்பதுபோல் இறைவன் அருளைப் பெறுமிடம் திருக்கோயில்களாக அமைகின்றன. வானுலகத்தில் உள்ளவரும் இம்மண்ணுலகத்தில் வந்து திருக்கோயில் வழிபாட்டினைச் செய்து அளவற்ற பேறுகளை எய்துகின்றனர் என்பது எமது நம்பிக்கை.

விண்ணுலகில் இறைவனை அபிஷேகித்து ஆராதனை செய்யுங் கிரியைகள் இல்லை. எனவே திருமால் பிரமன் முதலிய தேவர்கள் பூவுலகத்துக்கு எழுந்தருளித் தரிசித்துச் செல்வதோடு இவ்வுலக மக்களையும் வாழ்த்தி ஆசிகூறிச் செல்வதாகப் புராணங்களுந் திருமுறைகளுந் தெரிவிக்கின்றன.

*"கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்*
*முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை*
*அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி*
*எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே."*

என்று பாடுகிறார் அப்பர் சுவாமிகள். தமிழ்வேந்தர் – களுந் திருக்கோயில்களை முதன்மையாகக் கருதினார்கள். தமது அரண்மனைகளைவிடக் கோயில்களை அழியாக் கலைச்செல்வங்களாகக் கட்டி முடித்தனர். வானளாவுங் கோபுரங்களிலும் ஸ்தூபிகளிலுங் கற்றூண்களிலுஞ் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளை இடம்பெறச் செய்தனர். இன்றும் எம்மவர் மத்தியிலே இவ்வுணர்வு குன்றி விடவில்லை.

### கோயில் தோன்றிய வரலாறு

பண்டைக் கால மக்கள் முதலில் இயற்கைப் பொருள்களை வணங்கி வந்தார்கள். சூரியன், சந்திரன், பஞ்சபூதம், மழை, நதி என்பவற்றைப் போற்றினார்கள். இவற்றின்மூலம் அருவ நிலையில் இறைவனை வணங்கினர். பின்பு அவற்றிற்குரிய உருவங்களைக் கண்டு அதன் மூலம் வணக்கம் செலுத்தினர். காலகதியில் தமக்கு நிலையான வீடு தேவைப்பட்டதுபோல் தாம் வழிபடும் இறைவனை வெய்யிலிலிருந்தும், மழையிலிருந்தும் காப்பதற்கு மரநிழல் அமைத்து மேடையுங் கட்டினர். பந்தலமைத்து மண்ணாலேயுங் கோயில் கட்டி வழிபட்டனர். இதன் பின் செங்கல்லால் அமைத்து வழிபட்டனர். ஆரம்பத்திலே திருவுருவமாக உருண்டைக் கற்களை எடுத்தனர். இதிலிருந்தே லிங்கம் தோன்றியிருக்கலாம். தமிழ் நாட்டிற் சில கோயில்களில் உருண்டைக் கற்களே மூலஸ்தானத்தில் இன்றும் காணப்படுகின்றன.

கி.பி. 3ஆம் நூற்றாண்டுக்குப் பின்புதான் பல்லவராட்சியில் இன்றைய அமைப்பிலே கோயில்கள் எழுப்பப்பட்டன. பல்லவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னர்கள் கலையபிமானிகளாக விளங்கினார்கள். நிரந்தரமாக நிலைபெறக்கூடிய கோயில்கள் உருவாக்கப்பட வேண்டுமென்று அவர்கள் விரும்பினர். மலைப்பாறைகளைக் குடைந்தும் பாறைகளில் உருவங்களைச் செதுக்கியும் கோயில்கள் உருவாக உதவினர். மகேந்திரவர்மன் என்ற பல்லவ மன்னன் இப்பணியில் முக்கிய இடம் பெறுகிறான். பல்லவ மன்னர்களுக்குப் பின் ஆட்சி புரிந்த சோழப் பெருமன்னர் காலத்தேதான் கோயில் கட்டுந் திருப்பணி மிகவும் பிரபல்யமடைந்தது. கருங் கல்லினாலும், செங்கல்லினாலுங் கோயில்களை அமைத்ததோடு விமானம், சுற்றுமண்டபம், கோபுரம், சுற்றுமதில் யாவும் மிக விரிவான நிலையில் அமைக்கப்பட்டன. கருங்கல், செம்பு என்பவற்றில் திருவுருவங்கள் சமைக்கப்பட்டன. முன்பு மானிட உருவங்களை வணக்கத்துக்கு எடுத்துக் கொள்ளவில்லை. சோழமன்னர் காலத்திலேதான் நாயன்மார்களுக்கும் ஆழ்வார்களுக்கும் திருவுருவங்கள் சமைத்து வழிபாடு செய்யப்பட்டது. இந்தக் காலத்திலேயே கோயில் கட்டுங் கலை ஈழநாட்டுக்குந் தென்கிழக்காசிய நாடுகளுக்கும் பரவியது. விஜயநகர மன்னர்களும் நாயக்க மன்னர்களும் ஆட்சி புரிந்த காலத்தில் மேலும் சிற்பச் சிறப்புக்களுடன் ஆலயத் திருப்பணிகள் விரிவடைந்தன. தெப்பக்குளம், அலங்கார மண்டபம், நந்தவனம், ஆயிரங்கால் மண்டபம் ஆகியவை இக்காலத்திலே திருக்கோயிலோடு இணைந்து விளங்கின. அத்துடன் கலை வளர்ச்சிக்கும் பண்பாட்டு மேன்மைக்கும் சமூக நலனுக்கும் திருக்கோயில்களே மையமாக நின்று நற்பணிகள் ஆற்றத் தலைப்பட்டதுங் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**ஆலய அமைப்பு**

இறைவனுடைய இருவகைப்பட்ட நிலைகள் சொரூபம், தடத்தம் எனப்படும். சொரூபம் என்பது எமது மனம் வாக்குக் காயங்களுக்கு அப்பாற்பட்ட நிலையாகும். தடத்தம் என்பது மனம் வாக்குக் காயங்களுக்கு உட்பட்டவனாக இறைவன் நின்று அருள் புரியும் நிலை. இவ்வகையில் மூவகைத் திருமேனிகளைத் கொள்ளுகிறான் பெருமான். அவை அருவம், அருவுருவம், உருவம் என்பன.

*"உருமேனி தரித்துக் கொண்ட தென்றலும் உருவிறந்த*
*அருமேனி யதுவுங் கண்டோம் அருவுரு வானபோது*
*திருமேனி யுபயம் பெற்றோம் செப்பிய மூன்றும் நந்தம்*
*கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவுதானே."*

மூவகைத் திருமேனிகளையும் இறைவன் கொண்டது, எமது கருமேனியைக் கழிக்கவேண்டு மென்ற கருணையினாலேயே. எமது பிறவியையே கருமேனி என்று குறிப்பிடுகிறார் அருணந்திசிவம். உருவத் திருமேனியுடன் விளங்குகின்ற ஆலய அமைப்பு உடம்பின் அமைப்பைப் போன்றதாகவே அமைந்துள்ளது. தூலம், சூக்குமம், காரணம் என்பவற்றை விளக்க மூன்று வீதிகளும், பதி, பசு, பாசம் என்பவற்றை விளக்க கொடிமரம், நந்தி, பலிபீடம் என்பனவும் தூலலிங்கமாகக் கோபுரமும், உள்ளமாகக் கர்ப்பக் கிருகமும், ஆறு ஆதாரங்களாகக் கொடிமரந் தொடக்கம் மூலஸ்தானம் வரை அமைந்த பகுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உண்டு என்பார்கள். பிண்டம் என்பது எம்முடல், அண்டம் உலகமாகும். பார்க்குமிட மெங்கனும் நீக்கமற நிறைந்து நிற்கும் இறைவன் எழுந்தருளியிருக்கும் பெரிய ஆலயம் உலகமே. எனவே மூன்று கோயில்களைக் காணலாம். உலகமாகிய கோயில், கற்கோயில், மனக்கோயில் என்பவை அவையாகும்.

கற்கோயில் அமைப்பைக் கூர்ந்து கவனிப் போமானால் அதிற் பல உறுப்புக்களைக் காணலாம். மூலவிக்கிரகம் எழுந்தருளியிருக்கும் பகுதி விமானம் எனப்படும். இதன் மேற்கூரை ஸ்தூபி எனப்படும். ஸ்தூபியின் கீழுள்ள கருவறை கர்ப்பக்கிருகம் எனப்படும். அதனை அடுத்திருக்கும் மண்டபங்கள் அர்த்தமண்டபம் என்றும் மகாமண்டபம் என்றும் இருவகைப்படும். இதைவிடச் சபாமண்டபம், வசந்தமண்டபம், வெளிமண்டபம் என்பனவும் அமைக்கப்படும். சுற்றுப் பிரகாரத் தெய்வங்களின் அமைப்புங் கொடிமரம், பலிபீடம் நந்திகளின் அமைப்பும் ஆலயங்களில் மிக முக்கியமானவை. இதைவிடத் தூலலிங்கம் எனப்படுங் கோபுரமே கோயில் வாயிலாக அமைகிறது. கோயில்களின் பெயர்கள் விமானங்களின் அமைப்பைக்கொண்டு ஏற்பட்டன என்று கூறப்படுகிறது. கோயிற் பெயர்களைத் தேவாரத்தில் அப்பர் சுவாமிகள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

*"பெறுக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்*
*பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றும்*
*கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்*
*கருப்பறியற் பொருப்பனைய கொகுடிக் கோயில்*
*இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்*
*இளங்கோயில் மணிக்கோயில் ஆலக் கோயில்*
*திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து*
*தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் திரு மன்றே"*

**ஆலயங்களின் உட்பொருள்**

தூல உலகில் வாழும் மனிதனைச் சூக்கும உலகில் அருட்சக்திகளோடு இணைக்கும் நிலையங்களே ஆலயங்களாகும். ஆலயங்களிற் காட்சி தரும் விக்கிரகங்கள்தான் இறைவன் என்று நினைக்கக்கூடாது. அவற்றினூடே விளங்கும் மெய்ப்பொருள்தான் இறைவன் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். மரத்தினால் ஒரு அழகிய யானை உருவாக்கப்பட்டது. அந்த யானை மரத்தை அன்றி வேறோர் இடத்திலிருந்து வந்து புகுந்ததல்ல. மரம்தான் யானையாகக் காணப்படுகிறது. யானையின் அங்கங்களின் அமைப்பை நோக்கினால் மரம் பாவனை அற்றுவிடுகிறது. என்ன மரத்தால் இது செய்யப்பட்டது என்று நோக்கும்போது யானையின் பாவனை மறைந்துபோகிறது. அதுபோல எல்லாம் இறைமயமாய் விளங்கும்போது உலகத் தோற்றம் உண்டாவதில்லை. ஆனால் பிரபஞ்சந் தோன்றும் போது இறைவன் வடிவு விளங்குவதில்லை. இக்கருத்துக்களை விளக்குவதே உருவ வழிபாடாகும். எமது பெற்றோர்கள் மற்றும் பெரியோர்களின் திருவுருவப் படங்களை வைத்து நாம் போற்றும்போது அவற்றை வெறுஞ்சித்திரமாக நினைப்பதில்லை. அவற்றிற்கு மாலைசூட்டி வழிபட்டு அழுது தொழுது நிற்கிறோம். அதேபோல, திருக்கோயிற் கருவறைகளில் வெறுங் கல்தான் காட்சி தருகிறது என நினைக்காமல் அதனுள் மறைந்து மிளிரும் இறைவனது உண்மை நிலையைக் காணச் சிரத்தை கொள்ள வேண்டும்.

*"மரத்தை மறைத்தது மாமத யானை*
*மரத்தில் மறைந்தது மாமத யானை*
*பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்*
*பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்"*

என்ற திருமந்திரப் பாடல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆலயங்களின் உட்பொருளை விளக்க எழுந்ததாகும். அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த திருவருள் ஊற்றுத் திருக்கோயிலில் அமைந்த திருவுருவங்களின் வழியாலே ஆன்மாக்களுக்குக் கிடைக்கிறது என்பதைச் சிறந்த உவமைகளின்மூலஞ் சிவஞானசித்தியார் காட்கிறது.

*"திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னை*
*சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவன் ஆங்கே*
*உருக்கோலி மந்திரத்தால் எனநினையு மவர்க்கும்*
*உளன்எங்கும் இலன்இங்கும் உளன்என் பார்க்கும்*
*விருப்பாய வடிவாகி இந்தனத்தின் எரிபோல்*
*மந்திரத்தால் வந்துதித்து மிகுசுரபிக் கெங்கும்*
*உருக்கான ஒண்ணாத பால்முலைப்பால் விம்மி*
*ஒழுகுவது போல்வெளிப்பட் டருளுவன் அன் பர்க்கே."*

சிவாலயங்கள் யாவும் வேத சிவாகமங்களில் விதித்த முறைப்படி அமைந்தவை. இவற்றின் தத்துவங்களை உணர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணிக்காப்பதால் நாடு நன்மைபெறும். ஒரு அரசனது அரண்மனைக்குச் சென்று ஏதாவது விண்ணப்பிக்க வேண்டுமானால் அங்கு செல்லவேண்டிய முறையை நன்கு அறிந்து செல்லுதல் இன்றியமையாததுபோல் சர்வலோக நாயகனாகிய இறைவனது திருவோலக்கத்தையுந் தரிசிக்க விரும்புவோர் அதற்குரிய முறையை அறிந்து கொள்ள வேண்டும்.

*"மன்னனருள் எவ்வண்ணம் மானிடர்பால் மாணவக*
*அன்ன வகையே அரனருளும்"*

என்பது திருக்களிற்றுப்படியார். ஆனால் இறைவனையும் மனிதரோடு சேர்த்து எண்ணிவிடக் கூடாது. என்றாலும் நீதி தவறாத அரசனை ஆண்டவனோடு சேர்த்துப் பேசுகிறார் திருக்குறள் ஆசிரியர். அறநெறியைத் தவறாது செலுத்தி வந்த மன்னர்களைத் தெய்வமாகவே நினைந்து போற்றலாம். திருக்கோயில்களில் இறைவன் இருக்கிறான் என்ற உணர்ச்சி உண்மையாக ஒருவர் உள்ளத்தில் தோன்றுமானால் அவர் பயபக்தியோடுதான் தரிசனத்திற்குச் செல்வார். அதனால் அவர்பெறும் அனுபவத்தை ஏனையோர்க்கு எடுத்துப் போதிப்பதில் தனிப்பெரும் ஆனந்தத்தை அடைவர். இந்த நிலையையே நாயன்மார்கள் வாயிலாக நாம் காணுகிறோம்.

## நித்திய நைமித்திகம்

கோயில் கட்டுவதோடு நின்றுவிடாது அக்கோயிலில் திருவருள் நிலை பெறுவதற்கு ஆற்ற வேண்டிய நித்திய நைமித்திக வழிபாடுகளைப் பற்றியும் உணர்ந்து செயற்பட வேண்டும். நித்திய வழிபாடு, அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம், கந்தம், தீபம் ஆகிய அங்கங்களோடு முட்டின்றி நடைபெற்றால் எமது அன்றாட வாழ்க்கை செவ்வனே நடைபெறும். இதேபோன்று நைமித்திக விழாக்கள் ஆலயங்களின் அருட்பொலிவை அதிகரிக்கச் செய்வதற்காக எடுக்கப்படுகின்றன. இவற்றை உற்சவம் என்று சிறப்பாக அழைப்பர். உற்சவம் என்பது கஷ்டத்தை இல்லாமற் செய்வதும் சுகத்தைக் கொடுப்பதும் என்ற கருத்தில் எழுந்ததாகும். இவை சிறந்த அபிஷேகம், விசேட பூசை, பதினாறு உபசாரம், தோத்திரம், திருமுறை, ஆசீர்வாதம், திருவுலா என்பவற்றைப் பிரதான அங்கமாகக் கொண்டு நிகழ்வனவாகும். இவற்றை நிகழ்த்துவிப் போரும் நிகழ்த்துவோருந் தரிசிப்போரும் பலவகைச் சிறப்புப் பேறுகளைப் பெற்று உய்வடைவர். அத்துடன் இதில் ஈடுபடும் ஒவ்வொருவருக்கும் விசேட நிம்மதியும் சந்தோஷமும் ஏற்படுகிறது. விசேட பூசைகள் நடக்கும்போது ஆலய தரிசனஞ் செய்வதால் தீராத நோய்கள் தீர்த்து வைக்கப்படு கின்றன என்பது முற்றிலும் உண்மை. கோயில்கட்டி இறைவனைப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் நடத்தும்போது கோவிலுக்குத் தகுந்தாற்போல் உற்சவங்களும் ஏற்படுத்தப்பட வேண்டும். இதனாலே தூய்மையுங் கலை வளர்ச்சியும் ஏற்படுகின்றன. இதனால் நாட்டுக்குச் சகல பேறுகளும் கிடைக்கின்றன என்றும் கூறப்படுகிறது. இயந்திரம் இல்லாத வாகனம் ஓடாது. அதுபோலவே இயந்திரம் இல்லாத உருவங்கள் அருட்பொலிவைக் கொடுக்கமாட்டா. இயந்திரங்களுக்கு எண்ணெய், நிலக்கரி முதலியன உணவாவதுபோல ஆலய இயந்திரங்களுக்கு அபிஷேகம், மந்திரம், பாவனை என்பன சக்தியைக் கொடுக்கின்றன. கோயில்களில் நடைபெறும் நித்திய பூசைகளினால் ஞானநெறியும், நைமித்திக விழாக்களினால் கர்மநெறியும் உணர்த்தப்படுகின்றன.

## மகா கும்பாபிஷேகம்

நைமித்திக விழாக்களில் முதன்மையாக எண்ணப்படுவது மகா கும்பாபிஷேக விழாவாகும். இதை நடாத்துவதினால் நாட்டிற்கும் மக்களுக்குந் திருக்கோயிலுக்கும் பெருஞ்சாந்தி ஏற்படுகிறது. இந்த நம்பிக்கையோடு பன்னெடுங்காலமாகக் கோயில்கள் செப்பனிடப்பட்டுக் காலத்திற்குக்காலம் மகா கும்பாபிஷேகம் நடைபெற்று வந்துள்ளது. திருக்கோயிலின் அருட்பிரவாகங் குறைவுபடாது அதிகரிக்க வேண்டுமானாற் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அட்டபந்தனம் புதுப்பித்துக் குடமுழுக்கு விழாச் செய்தல் உத்தமமாகும். ஆலயங்களில் அடிக்கடி பால், இளநீர் முதலியவற்றால் அபிஷேகம் செய்யப்படும்போது சிறிது சிறிதாக அட்டபந்தனங் கெட்டுவிடுகிறது. இதனால் பீடத்துக்கும் விக்கிரகத்திற்கும் இடையே துவாரம் ஏற்பட்டு விக்கிரகத்திற்கு அசைவு ஏற்படுதலுமுண்டு. இவ்வூறுபாடுகளினால் ஊருக்கும் பூசை செய்பவர்களுக்கும் பல இன்னல்கள் தோன்றக்கூடும். இவற்றை நீக்கிக் கொள்வதற்காக அட்டபந்தனத்தைப் புதுப்பித்துக் குடமுழுக்கு விழாவை எடுக்கிறார்கள். இவ்வாறு புனர்நிர்மாணம் செய்து கும்பாபிஷேகம் நடாத்துவது சிறந்த சிவபுண்ணியச் செயலாகும். முதலில் மூலமூர்த்தியைக் கருவறையிலிருந்து பெயர்த் தெடுத்துப் பாலாலயத்தில் எழுந்தருளப் பண்ணி, சிலகாலம் பூசையை நடாத்தி வருவதுடன் இவ்விடைக்காலத்தில் கருவறை, ஸ்தூபி யாவும் புதுப்பிக்கப்பட்டுத் திருப்பணிகள் முற்றுவிக்கப்பட வேண்டும். மீண்டும் மூலமூர்த்தியைக் கருவறையில் எழுந்தருளப்பண்ணி அட்டபந்தனம் சாத்தி உரிய முறைப்படி கும்பாபிஷேகத்தை நடத்த வேண்டும். ஆண்டுதோறுங் கும்பாபிஷேகம் நடைபெற்ற தினத்தில் மணவாளக்கோலத் திருவிழாவை நடாத்தி அருட்பிரவாகத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டும். மகாகும்பாபிஷேகத்தை நடாத்தி வைக்குஞ் சிவாசாரியாருந் தெய்வத்தோடு ஒப்பச் சிறந்த இடத்தை வகிக்கிறார். ஆசாரிய இலட்சணம் அனைத்தும் அமையக்கூடியதாக குடுமி, உருத்திராட்சம், பூணூல், உத்தரியம், வீபூதிப்பை ஆகியவற்றோடு சிவாச்சாரியார் விளங்கவேண்டும். முப்பத்திரண்டு உருத்திராட்சமுள்ள மாலையைக் கழுத்தில் அணியவேண்டும். நூற்றெட்டு மணிகள் சேர்க்கப்பட்ட உருத்திராட்ச மாலையை ஜெபத்துக்காக வைத்திருக்கவேண்டும். சுத்த வெண்மையானதும் முறைப்படி சமஸ்காரஞ் செய்யப்பட்டதுமான முப்புரிநூலை அணிந்து கொள்ள வேண்டும். பத்துமுழ நீளமான வேட்டியைப் பஞ்சகச்சமாகக் கட்டி அரையில் மேலாடை கட்டித் தோளில் உத்தரியத்துடன் சிரசு மூடித் துணியும் அணிந்துகொள்ள வேண்டும். அத்துடன் வேதவிற்பன்னராயுஞ் சிவாகம சிரோமணியாகவும் அழகும் பொலிவும் வாய்க்கப் பெற்றவராயும் அடக்கமும் ஆசாரமும் நிரம்பப் பெற்றவராயுங் காயத்திரி ஜெபந் தினமும் ஜெபிப்பவராயும் அமைய வேண்டும்.

## மகோற்சவம்

வருடந்தோறும் குறிப்பிட்ட தினங்களில் அமாவாசை, பூரணை என்பவற்றைமுன்பின்னாக வைத்து அமைவன மகோற்சவம் ஆகும். ஆறுமாதத்துக்கு ஒரு தடவையும் இவ்வுற்சவம் நடைபெறுவதுண்டு. மகோற்சவ காலத்தில் உற்சவமூர்த்தி காலை, மாலை தவறாமல் வீதிவழியாக உலாவந்து அடியார்கள் இருக்கும் இடத்தில் காட்சி கொடுக்கின்றது. இதனால் ஊருக்குச் சுபீட்சம் ஏற்படுகின்றது. நித்திய பூசையினால் ஆலயத்தில் ஆக்கப்படும் அருளானது நைமித்திக விழாக்களினால் ஊரின் நாலுபுறமும் பரப்பப்படுகின்றது. இக் காலங்களில் தேவர்களின் ஆசீர்வாதமும் பூலோகத்திற்கு நிரம்பக் கிடைக்கின்றது. மேலிருந்து தொட்டிநீர் குழாய்மூலங் கீழிறங்கி வருவதுபோல் தேவசக்திகள் திருக்கோயில்களை நோக்கி மகோற்சவ காலங்களில் இறங்கி வருகின்றன. கதவு திறக்காத வீட்டிற் சூரிய ஒளி புகுந்துகொள்ளாதது போல, மனக்கதவு திறக்கப்படாமல் ஆற்றப்படுங் கிரியைகளினால் தேவசக்தி இறங்கிவந்து எந்தப் பயனையுங் கொடுக்காது. மகோற்சவத்தின் ஆரம்பம் கொடியேற்றமாகும். சிவாலயங்களில் முன்னே காணப்படுவது இடபம். இது தருமத்தின் சினனமாகும். ஊழிக்காலத்தில் அழிவுக்கு அஞ்சிய அறக்கடவுள் வெள்ளை எருது உருவங்கொண்டு சிவபெருமானைச் சரணடைய அதனை அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்தியாகவுங் கொடியாகவும் ஏற்றுக்கொண்டார். அந்த அறக் கொடியைப் பெருவிழாவின் தொடக்கத்தில் தேவர்கள், முனிவர்கள் முதலாய பலரும் அறிய உயர்த்திக் கட்டுவதே கொடியேற்றமாகும். பஞ்சகிருத்தியங்களில் கொடியேற்றம், படைத்தலைக் குறிக்கும். இரண்டாம் திருவிழா, தூலம், சூக்குமம் ஆகிய இருவகை யாக்கையையும் நீக்கிக் கொள்ளும் பயனைக் குறிக்கும். வாகன உற்சவங்கள் எல்லா உயிர்களையும் காப்பாற்றுகிற காத்தல் தொழிலைக் குறிக்கும். மூன்றாம்நாள் திருவிழா, மூவினை, முக்குணம், முக்குற்றம், மும்மலங்களை ஒழித்தற் பொருட்டாகும். நான்காம்நாள் நாற்கரணம், நால்வகைத் தோற்றம் இவைகளை நீக்குதற் பொருட்டாம். ஐந்தாம்நாள் ஐம்புலச் சிற்றின்பங்களை நீக்குதற் பொருட்டாம். ஆறாம்நாள், காமாதி ஆறினையும் ஒழித்தற் பொருட்டாம். ஏழாம்நாள், எழுவகைப் பிறப்பைத் தவிர்த்தற் பொருட்டாம். எட்டாம்நாள், கடவுட் குணங்கள் எட்டினை விளக்குதற் பொருட்டாம். ஒன்பதாம்நாள், ஒன்பது திருமேனியில் இறைவன் எழுந்தருளுகிறார் என்பதைக் காட்டும். தேர்த் திருவிழாவானது தேவர்கள் பொருட்டு இறைவன் தேரேறித் திரிபுரதகனஞ் செய்தலைக் குறிக்கும். இதுவே சங்காரத் தொழிலை உணர்த்தும் உற்சவமாகும். தீர்த்தத் திருவிழா சிவானந்தமாகிய பேரின்பக் கடலில் ஆன்மா திளைப்பதைக் குறிக்கும். திருக்கல்யாண விழா இறைவனின் போக வடிவைக் குறிக்கும். ஆன்மாக்களுக்கு இறைவன் திருவருளாலேயே உலக இன்பமுங் கிடைக்கிறது என்பதைக் காட்ட மணவாளக் கோலத்துடன் காட்சியளிக்கும் விழா இதுவாகும். அவனிடத்துப் பெண்ணுருவாகக் காட்சி கொடுப்பது திருவருளேயன்றி வேறில்லை. மக்கள் நலனுக்குத் திருமணமுறை எவ்வளவு இன்றியமையாதது என்பதைக் காட்ட, தானே திருமணக் கோலங்காட்டி விளங்குகிறான் பெருமான்.

**சைவமக்களின் கவனத்துக்கு**

இதுகாறுங் கூறியவற்றால் ஆலயங்களின் இன்றியமை யாமையையும் ஆராதனைகளின் அவசியத்தையும்பற்றி அறிந்தோம். மேலும் இவ்விடயத்தில் எம்மால் மேற்கொள்ளப்படவேண்டிய கடமைகளையும் நாம் மறக்கக் கூடாது. தூய உடம்புடன் வாழ்பவனுக்குத் தூய உள்ளம் இயல்பாக அமைவதுபோல் திருக்கோயில்களைப் புனிதமாகப் பேணினாற்றான் அங்கு எழுந்தருளியிருக்கும் மூர்த்தி தெய்வத்தன்மையை நாட்டுக்கு நல்கும். கோயில் மாத்திரமல்ல, அர்ச்சகர், பணியாட்கள், அறங்காவலர் அனைவரும் தூயவாழ்வு வாழ்பவராக விளங்க வேண்டும். கருத்து, மனம், செய்கை இவை மூன்றும் ஒன்றுபட்டுச் செய்யுள் காரியங்கள்தான் நன்மையைத் தரும். இதற்காகவே மந்திரங்கள் ஏற்பட்டன. இவற்றைப் பொருளறிந்து ஜெபித்துப் பயபக்தியோடு கிரியைகளை ஆற்றக்கூடிய அந்தணர்களாலேயே கோயில் மூர்த்தி கரம் மேலும் அதிகரிக்கும் என்றால் அது முற்றிலும் பொருத்தமானது. சமயம் என்பது பக்தி உணர்வை மட்டும் வளர்ப்பதோடு நின்றுவிடாது மக்களின் பண்பாட்டு வளர்ச்சியிலும் பங்கேற்க வேண்டும். அத்துடன் இதனை அனுட்டிப்போர் திருவருளை முன்வைத்து வாழப் பழகிக்கொள்ள வேண்டும். எமது உடம்பை வெறுஞ் சோற்றுத் துருத்தியாக மாத்திரம் ஆக்கிவிடாது திருவுடம்பாக மாற்றவேண்டும். காண்பனவும், பேசுவனவும், செயற்படுவனவும் தூய்மையுடையனவாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

சமுதாயத்தில் ஊழல் தோன்றாது காப்பதுதான் சமயம். சமய நெறி இல்லாவிட்டால் சமுதாயம் கட்டுப்பாட்டை இழந்துவிடும். எனவே ஊருக்கு உபதேசஞ் செய்யும் பொது நீதிமன்றங்களாகத் திருக்கோயில்கள் விளங்க வேண்டும். கோயிற் பரிபாலனஞ் செய்யும் அறங்காவலர்கள் அனைவரும் வாள் நுனியில் நின்று கடமையாற்றுவது போன்ற நிதானம் வாய்ந்தவர்களாகவும், தினமும் அக்கோயிலுக்குச் சென்று வழிபடும் நியமமுடையவர் களாகவும், அந்தணர்களையும் ஊழியர்களையும் பெருமனதோடு பேணுபவர்களாகவும் விளங்க வேண்டும். எதனையும் பிடிவாதமாக வற்புறுத்தாமல் மனித சுபாவத்துக்கும் அறிவுக்கும் மதிப்பளிக்கும் பண்பாடு பேணப்படவேண்டும். அவரவர் பக்குவத்துக்கேற்றபடி ஆலயங்களுக்குச் சென்று வழிபட அனைவர்க்கும் சர்வ சுதந்திரமுண்டு. சமுதாயத்தில் அன்பில்லாதவர்கள் எவரும் சமயநெறி நிற்பவர் என்று சொல்வதற்குத் தகுதியற்றவராவர். அன்பின் இணைப்பால் சமுதாயத்தை இணைத்துச் செயற்படும் புனித தலங்களே ஆலயங்களாகும். இந்த உண்மைகள் யாவும் சைவ மக்களாகிய எமது உள்ளத்தில் பதியப்பட்டு நடைமுறையில் பயன் தரும் பணிகளாக மலரச் செய்வதற்கு நமது திருக்கோயில் களையும் சிவநெறியையும் பேணி நிற்பதோடு அதன்மூலம் சமூக நலன்களையும் பேணி வாழ்வோமாக.

**("சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்" நூலிலிருந்து)**

## பக்தியுணர்வு

*மனித வாழ்க்கை உணர்வுகளாலும், எண்ணங்களாலும் உருவாகின்றது. மனிதன் பலவகை உணர்வுகளின் நிலைக்களனாக விளங்குகிறான். மனிதனுக்குரிய உணர்வுகள் பல. அவைகள் எல்லாவற்றுள்ளும் தலை சிறந்த ஒன்றாகத் திகழ்வது பக்தியுணர்வு.*

*இப்பரந்த உலகைத்தை இனிது நோக்கி, ஊன்றியுணருந்தோறும், இதனைப் படைத்த கடவுள் ஒருவர் உண்டு என நம்புவது நமது அறிவிற்குப் பொருந்துவதேயாகும். அக்கடவுட் பொருளே, நமக்கு உடல், கருவி, உலகம், நுகர்ச்சி ஆகியவற்றைக் கொடுத்து, நம்முடைய நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப, இன்ப துன்பங்களை நல்கி, நம்மைக் காத்து ஆட்கொண்டு வருகின்றது. இந்த உண்மையினை உணர்ந்து நம்பி, நல்லொழுக்கம் கடைப்பிடித்து, நல்லவர்களாக வாழ்வதற்குரிய உணர்வே, பக்தியுணர்வு எனச் சுருக்கமாகக் கூறலாம்.*

*இத்தகைய பக்தியுணர்வினால், நமக்கு நம் உலகியல் வாழ்வில் மிகச் சிறந்த நன்மைகள் ஏற்படும் என்பது திண்ணம். உலகெங்குமுள்ள பல்வேறு சமய மக்களும் போற்றுகின்ற நிலையில் விளங்கிவரும் பக்திநெறிச் சான்றோர்களின் வாழ்க்கை வரலாறுகள் பலவும் இவ்வுண்மையை சான்றுபகரும்.*

– புலவர் ந. ரா. முருகவேள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத் திருப்பணியில் நாவலர் காட்டிய ஆர்வம்



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் அவதாரம் ஈழத்து சைவ வரலாற்றில் மட்டுமல்ல, தமிழகத்தின் சைவ வரலாற்றிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். இவர் ஈழத்து சைவத்தமிழ் மக்களுக்கு ஊக்கமும் உறுதியும் கொடுத்து விழித்தெழச் செய்தவர். சைவத்தமிழ் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் அயராது உழைத்த பெருமகன்.

நாவலரின் அரும்பெரும் பணிகளுள், இன்னொரு முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாக, போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட இரு கோயில்களின் புனருத்தாரண வேலைகள் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும் என்பதில் காட்டிய ஆர்வத்தையும் ஊக்கத்தையும் குறிப்பிட வேண்டும். இவைகளில் ஒன்று கீரிமலை சிவன்கோயில்; மற்றையது திருக்கேதீச்சரமாகும். திருக்கேதீச்சர ஆலயத்தில் இப்போது வளர்ச்சியும் எழுச்சியும் ஏற்பட்டிருக்கின்ற ஒரு நிலையில், இதற்கு அன்றைய நாளில் முக்கிய காரணகர்த்தாவாக அன்றைய நாளில் முக்கிய காரணகர்த்தாவாக நாவலர் பெருமான் இருந்திருப்பதை குறிப்பிட்டுச் சொல்லலாம்.

கி.பி. 1585 ஆம் ஆண்டு காலப் பகுதியில் போர்த்துக்கேயர் திருக்கேதீச்சர ஆலயத்தை அழித்ததிலிருந்து கட்டிட இடிபாடு களுடன், வருடந்தோறும் வீசிவந்த தென்மேற்கு பருவப் பெயர்ச்சிக் காற்றினால் மண்மூடிய வகையில் ஆலயம் காட்சியளித்தது. ஆலயம் இருந்த இடம் மண்மேடாகி, மரங்களும் வளர்ந்து காடாக மாறியது. அந்த வேளையில் தேவர்கள் வந்து திருக்கேதீச்சரப் பெருமானுக்கு அர்த்த சாமத்தில் பூசைசெய்துவிட்டு செல்வதாக மணியோசையைக் கேட்டவர்களும், தீப ஒளியைப் பார்த்தவர்களும் கூறியதாக சொல்லப்படுகிறது. ஆலயம் மண்மேடாகக் காட்சியளித்த முந்நூறு ஆண்டுகளுக்கும் மேலான காலப் பகுதியில் ஆலயத்தின் திருப்பெயரை இலங்கை சைவமக்களும் ஏனையோரும் கூறாமலும், கேளாமலும், சிந்திக்காமலும் இருந்துள்ளனர். செய்யப்பட வேண்டும் என்ற எண்ணம் எவரது மனதிலும் ஏற்படவில்லை. இக்காலப் பகுதியை ஒரு இருள் சூழ்ந்த காலம் என்றே சொல்லப்பட்டது.

இந்த நிலையிலேயே 1872 ஆம் ஆண்டில் நாவலர் பெருமானின் சிந்தனையில் திருக்கேதீச்சர ஆலயத்தைப் பற்றிய எண்ணம் தோன்றியது. "இலங்கை மாதோட்டத்தின் ஒரு பகுதியில் மறைந்துபோய் ஒரு மருந்து இருக்கின்றது. ஒரு திரவியம் இருக்கின்றது தேன் பொந்து இருக்கின்றது" என்றெல்லாம் திருக்கேதீச்சரநாதரை சைவ உலகுக்கும், இலங்கை சைவ மக்களுக்கும் முதன்முதலாக நினைவூட்டி, உணர்வூட்டி பிரசாரம் செய்து, அறிக்கை ஒன்றையும், துண்டுப் பிரசுரத்தையும் வெளியிட்டார். இவ்வாறாக திருக்கேதீச்சர ஆலயத்தின் நினைவை சைவ மக்களுக்கு அறிவித்து உணர்த்திய பெருமை நாவலர் பெருமானுக்கு உரியதாகும்.

நாவலர் பெருமான் வெளியிட்டிருந்த "யாழ்ப்பாண சமயநிலை" என்ற துண்டுப் பிரசுரத்தின் இறுதிப் பகுதியில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

"சைவசமயிகளே! தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களுள் இரண்டு இலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்றாகிய திருக்கோணமலைக்கு சம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்று இருக்கின்றது. மற்றொன்றாகிய திருக்கேதீச்சரத்துக்கு திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றும், சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றும் இருக்கின்றன. இத் திருக்கேதீச்சரம்வடமாகாணத்தின்கண்ணுள்ள மன்னாருக்கு அதி சமீபத்தில் இருக்கின்ற மாதோட்டத்தில் உள்ளது. இத்திருக்கேதீச்சரம் அழிந்து காடாகக் கிடக்கின்றதே! புதிது புதிதாக இவ்விலங்கையில் எத்தனையோ கோயில்கள் கட்டப்படுகின்றனவே! நீங்கள் இந்த மகாஸ்தலத்தைச் சிறிதும்நினையாததென்னையோ? இவ்விலங்கையிலுள்ள வீபூதிதாரிகள் எல்லாருஞ் சிறிது சிறிது உபகரிக்கினும் எத்துணைப்பெருந்தொகைப்பொருள்சேர்ந்துவிடும். இதைநீங்கள் எல்லீருஞ் சிந்தித்து இத்திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின் அருட்கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வார்." இவ்வாறு கூறி சைவமக்களை நாவலர் பெருமான் ஊக்கப்படுத்தினார்.

திருக்கேதீச்சரம் ஆலயம் அமைந்திருந்த நிலம் அரசாங்க சொத்தாக, வடமாகாணத்தின் அரச அதிபராகவிருந்த சேர் வில்லியம் துவைனம் என்பவரின் அதிகாரத்தின் கீழிருந்தது. ஆனால் திருக்கேதீச்சர நிலத்தை அரச அதிபர் துவைனம் மூலம் நாவலர் பெறவிரும்பவில்லை. அரச அதிபரின் உத்தியோக செயற்பாட்டில் நாவலருக்கு வெறுப்பு ஏற்பட்டிருந்ததே இதற்கான காரணமாகும். அந்நாளில் யாழ்ப்பாணத்தில் நிலவிய பஞ்சமான நிலைமையின்போதும், மக்களுக்குஏற்பட்ட பேதிநோய் காலத்திலும் ஏழைகளுக்கு கிடைக்க வேண்டிய அரசாங்க உதவிகளை அரச அதிபராகவிருந்த சேர் வில்லியம் துவைனம் என்பவரும், அவரின் கீழ் பணிபுரிந்தவர்களும் எடுத்துக்கொண்டனர். இதனால் தொதிக்தெழுந்த நாவலர் பெருமான் "சமயம்! சமயம்! இது நல்ல சமயம்! வெகுசனத் துரோகம்" என்று குறிப்பிட்டு இது தொடர்பான துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டிருந்தார். "யாழ்ப்பாணத்து கச்சேரி அநீதி, பொய், கோள் முதலிய புத்தகங்கள் படிப்பிக்கும் கல்லூரி அதன் தலைவர் துவைனம் துரை" என்றெல்லாம் பிரசாரம் செய்தார்.

இந்நிலையில்நாவலர்பெருமானும்மறைந்தார். அவ்வேளையில் அரச அதிபர் துவைனம் விழிப்புணர்ச்சி பெற்றார். சக்சேரிக்கு விடுமுறை வழங்கி, உத்தியோகத்தர்கள் அனைவரையும் நாலவர் பெருமானின் இறுதிச் சடங்கில் பங்குபெற்றச் செய்தார். அடுத்த சில ஆண்டுகளுக்குள் திருக்கேதீச்சர நிலத்தை அந்நிய மதத்தவர் கைக்கு கிடைக்காமல் வெகு திறமையாக சைவர்களுக்கே உரித்தாக்கி வைத்தார்.

நாவலர் பெருமான் திருக்கேதீசரம் தொடர்பான அறிக்கையை வெளியிட்டு 21 வருடங்களின் பின், 1893 ஆம் ஆண்டில் அவரது விருப்பம் நிறைவேறிவிட்டது. திருக்கேதீச்சர ஆலய புனருத்தாரணப் பணிகள் ஆரம்பமாகி நடைபெறலாயிற்று.

***(திருக்கேதீச்சர ஆலய மகாகும்பாபிஷேக (1976) மலரிலிருந்து பெறப்பட்ட தகவல் குறிப்புகள்)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளசிச்செடி வளர்ப்போம்

### துளசியின் வகைகள் :-

துளசியில் மூன்று வகைகள் உண்டு. அவை கிருஷ்ணதுளசி, கருந்துளசி சாதாரணதுளிசி என்பனவாகும். இவற்றில் கருந்துளசி வீட்டுப்பூஜைகளில் பயன்படுத்துவதில்லை. ஆனால் ஆலயப்பூஜைகளில் இது பயன்படுத்தப்படுகின்றது.

### துளசியைப் பூஜிப்பதன் பயன்கள் :-

* மங்களமாகத் துளசியை மகிழ்ந்து பூஜிப்போரது தீவினையைப் போக்கி சிறந்த பலன்களைத் தரும்.
* நாள் தோறும் துளசியைப் பூஜிப்பின் அரும்பிணியைப் போக்கி ஐஸ்வர்யங்களை தரும்.
* சிறப்பாகத் துளிசி வளர்த்து வணங்குவோர்க்குப் புத்திரபாக்கியத்தை தரும்.
* கன்னியர் துளசிமாதாவைப் பூஜித்துவரின் சிறந்த கணவர் வாய்க்கப்பெறுவார்.
* கிருகஸ்தன் துளிச்செடியைப் பூஜித்துவரின் கீர்த்தியுடன் வாழப்பெறுவான்.

### துளசிமாதாவின் அவதாரம் :-

முன்னொரு காலத்தில் லக்ஷ்மிதேவி, தர்மவஜன், மாதவி எனும் தம்பதிகளிற்கு மகளாகப் பூலோகத்தில் அவதரித்தாள். இவள் பெருமாளை நோக்கி தவம்செய்து பல்வேறு வரங்களைப் பெற்றாள். இவளே துளசிச்செடியாக மாறி பெருமாளுக்குப் பிரியமானவளாக விளங்குகிறாள். இலக்குமிதேவியின் அம்சமான துளசிதேவி கார்த்திகை மாதத்துப் பௌர்ணமியில் அவதரித்தாள். எனவே வருடாவருடம் இந்நாளில் துளசிச் செடியைப் பூஜிப்பவர்களிற்கு இலக்குமிதேவியின் அருட்கடாட்சம் கிடைக்கப்பெறும்.

### விருட்ஷாயுர் வேதம் போற்றும் துளசி :-

"ஒருவனுடைய வீட்டில் துளசிச்செடி எத்தனை நாட்கள் விளங்குகின்றனவோ அத்தனை ஆயிரம் வருஷங்கள் அவன் வைகுந்தத்தில் பெருமை பெறுகின்றான்" எனக் கூறுகிறது.



### கீதை போற்றும் துளசி :-

"பத்ரம், பலம், புஷ்பம், தோயம்" (இலை, பழம், பூ, கனி) என கிருஷ்ணபகவான் தன்னைப் பூஜிக்கத் தேவையான நான்கு பொருட்களைக் கீதையில் குறிப்பிடுகிறார். இங்கு பத்திரம் எனக்குறிப்பிடப்பட்டது துளசி இலையையே எனப் பலர் கருதுகின்றனர். இதனாலேயே விஷ்ணு ஆலயங்களில் தரும் பிரசாதங்களில் முக்கியமானது துளசித் தீத்தமாகின்றது.

### துளசிச் தளத் தானம் :-

கார்த்திகை மாதத்தில் துளசித்தளத்தைத் தானம் செய்தால் ஆயிரம் பசுக்களைத் தானம் செய்த புண்ணியம் உண்டு.

### விஞ்ஞானம் போற்றும் துளசி :-

செடிகளுக்கெல்லாம் உயிர்மட்டுமல்ல உணர்வும் உணடு. அவுற்றோடு நாம் நமது உணர்ச்சிகளைக் கூடப்பரிமாறிக் கொள்ளலாம். அதாவது அன்பு கூடக் காட்டலாம் என இன்று விஞ்ஞானிகள் எடுத்துக்காட்டியுள்ளனர். அந்தவகையில் தாவரம் எல்லாவற்றுள்ளும் மிகவும் உணர்ச்சிவசப்படக் கூடியதும். பாதிக்கப்படக்கூடியதும், அன்பைப் பிரதிபலிக்கக்கூடியதுமான தாவரமாகத் துளசி உள்ளத்தைப் பல ஆராய்ச்சிகள் மூலமும் நிறுவியுள்ளனர்.

இதேபோல் அதிகளவு கரியமிலவாயுவை (காபனீர்ஒட்சைட்) உட்கொண்டு அதிகளவு பிராணவாயுவை (ஒட்சிசன்) வெளிவிடும் தகவு துளசிச்செடிக்கு உண்டு. எனவே, இச்செடி வாழும் சூழல் மனிதவாழ்விற்கு மிகவும் உகப்பானது எனவும் விஞ்ஞானம் எடுத்தியம்பியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தக் கூத்தனுக்கோர் ஆனி உத்தரம்

கலாபூஷணம் திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு

[14.07.2013 இல் ஆனி உத்தர பெருவிழா]



அபிடேகப் பிரியனான நடேசப் பெருமானுக்கு ஒரு வருடத்தில் ஆறு அபிடேக புண்ணிய காலங்கள் சிறப்பாக அமைந்துள்ளமை சைவப் பெருமக்கள் அறிந்ததே. இத்தகைய அபிடேக காலங்கள் புனிதமும் மகத்துவமும் வாய்ந்தவை.

தமிழ் நாடு, இலங்கை உட்படசகல சிவனாலயங்களிலும் சிவனாருக்குரிய நடேசரபிஷேகங்கள், பூசை, உலா யாவும் சிறப்பாக இடம் பெறுதல் கண்கூடு. ஆனி உத்தர அபிடேக நிகழ்வை ஆனித் திருமஞ்சனம் என்றும் அழைப்பர். மனிதர்களுக்கு ஒரு வருட காலம் தேவர்களுக்கு ஒரு நாளாகும். ஒரு நாளில், வைகறை, காலை, உச்சி, மாலை, இரவு, அர்த்தயாமம் என அறுவகைப் பொழுதுகள் உள்ளன. தேவர்களின் வைகறைக் காலத்திற்குச் சமானமானது மார்கழி மாதமாகும், காலைப் பொழுதுக்கு மாசி மாதமும், உச்சிப்பொழுதுக்கு சித்திரை மாதமும், மாலைப் பொழுதுக்கு ஆனி மாதமும், இரவு பொழுதுக்கு ஆவணி மாதமும், அர்த்தயாமப் பொழுதுக்கு புரட்டாதி மாதமும் சமமாகின்றது.

ஆனி மாதத்தில் இடம் பெறும் உத்தரம் ஆனி உத்தரமெனச் சிறப்புப் பெறுவதோடு அன்றைய தினத்தில் சிதம்பர நடராஜ தரிசனமும் விசேடம் வாய்ந்ததாகும்.

ஆனி உத்தர விழாவன்று சிவபிரானுக்கு பால், தயிர், நெய், தேன், இளநீர், பஞ்சாமிர்தம், விபூதி, சந்தனம், குங்குமம் ஆகியவற்றால் மூர்த்திக்கு விசேட அபிடேகம் இடம் பெற்று தொடர்ந்து அலங்காரம், பூசை, அர்ச்சனை, தோத்திரம் ஆகியன இடம் பெற்றதும், நடேசப்பெருமான் சிவகாமசுந்தரி சமேதராக ஆலய வீதி உலா வருவார். சிவனடியார்கள் இப்புண்ணிய தினத்திலே ஒரு வேளை உணவையேனும் தவிர்த்து விரதமிருந்து சிவதரிசனம் செய்து எம்பெருமான் இன்னருள் பெறுவர். சிதம்பரத்திலே இத்தினத்தன்று சிவகாமசுந்தரி சமேத நடேசப் பெருமான் அபிடேக, அலங்கார, பூசை, அர்ச்சனை தோத்திரம் யாவும் நிறைவேறிய பின் வீதி உலா வரும் காட்சி மிக சிறப்பாக இருக்கும்.

அபிடேகப் பொருள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நற்பயனை அளிக்கவல்லதாம். சிவனார் அபிடேகப் பிரியராக கருதப்பட்ட போதும் ஆலயத்தில் சகல மூர்த்திகளுக்குமே முறைப்படி அபிடேகம் இடம் பெறாமல் இல்லை.

நீர் அபிடேகம் மனத்துாய்மையையும், பால் அபிடேகம் ஆயுள் விருத்தியையும், தயிர் அபிடேகம் உடல் ஆரோக்கியத்தையும், மக்கட்பேற்றையும், நெய் அபிடேகம் சுகவாழ்வு வெற்றி மோட்சம் என்பனவற்றையும், பஞ்சாமிர்த அபிடேகம் நீண்ட ஆயுள் பூரணசுகம் ஆகியவற்றையும், இளநீர் அபிடேகம் புத்திரபாக்கியத்தையும், மஞ்சள் பொடி வசீகரம், மங்களம் ஆகியவற்றையும், அன்னாபிடேகம் உயர் பதவி, புகழ் ஆகியவற்றையும் விபூதி அபிடேகம் ஞானத்தையும், தேனாபிடேகம், குரலினிமை, தேக சுகம் ஆகியவற்றையும் குங்குமம் மங்களத்தையும், சங்கு நீர் அபிடேகம் வெற்றியையும் அளிக்கும் என்பது நம்பிக்கை. எம்மைப் போலவே, இறையையும் நாம் கருதி இறைவனுக்கு ஸ்நானம் ஆபரணம், அலங்காரம் செய்வது பூசை முறையிலும் அடங்கியுள்ளன. இதேபோன்று மூர்த்திக்குச் செய்யும் ஸ்நானமே அபிடேகமாகின்றது. அபிடேகத்தின் பின்னர் அடியார்க்கு வழங்கப்பெறும் பால், பஞ்சாமிர்தம் போன்ற பிரசாதங்கள் நிரம்பிய அருட்சக்தி வாய்ந்தவை. இந்த வகையில் அபிடேகத் தீர்த்தம் அடியார்க்கு ஆத்மீக நிறைவையும், புனிதத்தையும், நல்லாரோக்கியத்தையும், அருளும். இதுவே அருட்பிரசாதமாகும். மூர்த்திக்கு நிகழும் அபிடேகத்தின் தனிச் சிறப்பும் இதுவேதான்.

அம்பலக் கூத்தனின் ஆடும் தாண்டவத்துள் மறைந்திருக்கும் தத்துவத்தை நோக்கின், உயிர்களின் வாழ்க்கை ஆரம்ப நிலையில் சக்தியின் பரிபாலிப்பே மேலோங்கி நிற்கும். அப்போது சிவபோதம் பின்னணியில் இருக்கும், பின்னர் பிறவிக்குப் பிறவி ஜீவன்கள் பிறந்து பக்குவமடைய அவற்றிற்கு ஞானம் ஏற்பட சக்தியின் செயற்பாடு குறைவடைந்து சிவத்தின் செயற்பாடு முன்னுக்கு வர ஆரம்பிக்கின்றது. சிவபோதம் தலையெடுக்கின்றது.

இந்த வகையில் சக்தியின் திருநடனமாக ஆரம்பித்த வாழ்க்கை ஆனந்தக் கூத்தனின் திருநடனமாக நிறைவு பெறுகின்றது. வாழ்க்கையின் ஆரம்பத்தில் தேவியின் திருநடனமாக ஆரம்பித்து தொடர்ந்து ஈசனின் திருநடனமாக நிறைபெறுகின்றது. இந்நிலையில் இயற்கை சக்தியின் ஆடும் களமாகவும் சித், ஆகாசம் ஈசனுக்கு ஆடுமிடமாகவும் அமைகின்றது. சித்அம்பரம் என்பது அறிவாகிய வெளியாகி, சித்சபையாகவும் சிதம்பரமுமாகின்றது.

இந்த வகையில் இந்த ஆனி உத்தர புண்ணிய தினத்தை, விழாவை சிதம்பரத் தலத்திலேயே கண்டுகளித்தால் எத்தனை சிறப்பாக இருக்கும். அதற்கும் கொடுத்து வைக்கவேண்டும். முன் ஜென்மத்தில், நற்செயல்கள், புண்ணியத்தை செய்திருப்பதன் ஊடாகவே அந்தப்பலன் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோகர் சுவாமியின் ஐம்பதாவது குருபூசை வைபவம்

யோகர் சுவாமியின் ஐம்பதாவது குருபூசை. 2014 ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி நிகழவிருக்கின்றது. இதனை முன்னிட்டு அகில இலங்கை இந்து மாமன்றம், ஏனைய சமய நிறுவனங்களையும் இணைதது நாடளாவிய ரீதியில் சிறப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதற்கு திட்டமிட்டுள்ளது. எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதியன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இது தொடர்பான ஒழுங்கமைப்பு கூட்டமொன்று நடைபெறவிருகிறது.

# நற்சிந்தனை நல்கிய ஞானத் தந்தையார்

(இக்கட்டுரை ஊடாக சுவாமிகள் திருவுள்ளத்தில் கனிந்த நற்சிந்தனையை ஒரு ஞானப்பூங்காவாகக் காட்டுகின்றார் வித்துவான் க.வேந்தனார். 1965 ஆம் ஆண்டில் வெளிவந்த சிவதொண்டன் சிறப்பு மலரில் இந்தக் கட்டுரை பிரசுரமாயிருக்கின்றது.)

***சிந்தனைநின் தனக்காக்கி நாயினேன்தன்***
***கண்ணிணை நின் திருப்பாதப் போதுக்காக்கி***
***வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குன்***
***மணிவார்த்தைக் காக்கி ஐம்புலன்கள் ஆர***
***வந்தனை ஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை***
***மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்***
***தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்***
***தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே***

- (திருவாசகம்)

***சிவனடியே சிந்திக்கும் திருப் பெருகு சிவஞானம்***


(சேக்கிழார்)

தண்ணருள் நிறைந்த யோகர் சுவாமிகள் விண்ணெழுங் கதிரோன் போன்ற ஞானத்தந்தையார் தவநெறியில் நின்றொழுகி வழிகாட்டிய சான்றோன்.அவர் திருவாய் மலர்ந்தருளிய நற்சிந்தனை என்னும் ஞானப்பனுவல் அற்புதப் படைப்பாகும். மூவர் கோனாகிய முழுமுதற் சிவனையே சிந்தித்துப் பாடும் திருநெறிய தமிழ்போலவே நற்சிந்தனையும் சிறந்து விளங்குகின்றது. சிவனையே அல்லும் பகலும் சிந்தித்துப் பரவும் தூய உள்ளம் கொண்டவர்களாய் எல்லோரும் வாழ வேண்டுமென்பதே சுவாமிகளின் திருவுள்ளக் கருத்தாகும். சிந்தனையைச் சிவன்மேலே செலுத்திய பின் ஆற்றுஞ் செயல்கள் எல்லாம் சிவன் செயல்களாகவே தோன்றும்.

***"உன்னை மறப்பேனோ உயிர் நான் தரிப்பேனோ***
***என்னை மறப்பாயோ ஈசனே கண்வளராய்"***

எனச் சுவாமிகள் ஓலாட்டில் உரைத்தருளுகின்றார். .சுவாமிகள் தம்மை முற்றும் ஈசனிடம் ஒப்புவித்து நின்று உள்ளம் உருகுகின்றார். உன்னை மறப்பேனோ உயிர் நான் தரிப்பேனோ என்னுங் குரல் நற்சிந்தனையென்னும் ஞானநெறியில் சுவாமிகள் உரைத்து நின்ற ஈடுபாட்டை எமக்குக் காட்டுகின்றது. ஈசனையும் மறந்து வாழும் வாழ்வு வாழ்வல்ல, அவ்வாழ்வு உயிரற்ற வாழ்வேயாகும்.ஈசனே உன்னை மறந்து யான் உயிர் தரியேன் எனச் சுவாமிகள் உரைக்கின்றார்.

***ஆண்டு நீ அளித்த அருளினை***
***மருளினால் மறந்த வஞ்சனேன்***
***இங்கு வாழ்கிலேன் கண்டாய்***



என மணிவாசகர் சிவபெருமானிடம் முறையிடுவது போன்ற அன்பு நிலையில் ஊறிய சுவாமிகளும் உயிர் தரிப்பேனோ என உரைத்து ஈசனை வேண்டுகின்றார். ஈசனே நான் உன்னை மறந்து வாழேன், .நான் மறந்தாலும் நீ என்னை மறக்கவே மாட்டாய். என்னை மறப்பாயோ? என ஈசனின் பெருங்கருணைத்திறத்தை வியந்து பாராட்டுகின்றார். மலப்பிணிப்பினால் உயிர்கள் ஈசனை மறந்தாலும் ஈசன் பால் நினைந்தூட்டும் தாயினைப்போல உயிர்கள் மேல் இரக்கம் கொண்டு அவைகளின் மலப்பிணிப்பை அகற்றி ஆட்கொண்டருளுவார்.

இதனை,

***ஊனாய் உயிராய் உளத்தில் சுவையளிக்கும்***
***தேனாய் தெவிட்டாத தெள்ளமுதே கண்வளராய்***

என சுவாமிகள் உரைப்பதால் உணர்க.இன்னும் தாம் அருளிய. ஓலாட்டின் கண்,

***"எல்லாமாய் அல்லவுமாய் இருக்கும் பராபரனே"***

என்றும்,

***ஆருயிர்கள் தோறும்***
***அது வதுவாய் தோன்றிநிற்கும்***
***பேருருவே இன்பப் பெருக்கே"***

என்றும்,

ஈசனின் சிறப்பியல்பு பொதுவியல்பு என்பவற்றை சிறந்தெடுத்துப் பாராட்டுகின்றார்.

***ஊனாய் உயிராய் உளத்தில் சுவையளிக்கும்***
***தேனாய் தெவிட்டாத தெள்ளமுதே***

எனச் சுவாமிகள் கூறும் தொடர்களுடன்,

***"ஊனாய் உயிராய் உணர்வாய் என் உட்கலந்து***
***தேனாய் அமுதமாய் தீங்கரும்பின் கட்டியுமாய்"***

என வரும் மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகத் தொடர்களையும் ஒப்பிட்டு நோக்குக.

இங்ஙனம் சுவாமிகள் தாம் அழுந்தி உணர்ந்த திருவருள் நலத்தை ஆராவேட்கையுடன் பாடிப் பரவிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்களே நற்சிந்தனையில் இடம்பெற்றுள்ளன. நற்சிந்தனை எனும் பனுவலை ஓர் ஞானாப்பூங்கா என்றே நவிலலாம். அப்பூங்காவில் ஞானக்கனிகள் நிரம்பி உள்ளன. சுவாமிகளின் அருள் நோக்கம்பெற்ற மெய்யடியார்கள் அப்பூங்காவில் புக வேண்டும். அங்கு காணப்படும் ஞானக்கனிகளை சுவைத்துச் சுவைத்துச் சித்தம் சிவமாக வேண்டும்.

*"பார்ப்பார் பரமனை எங்கும்*
*பதையாதே சுகம் இதயத்தில் தங்கும்*
*ஆர்தான் உனக்கு நிகர் ஆவார்*
*ஐயப்படாதே தெய்வம் உன்னிடம் உண்டு"*

என சுவாமிகள் சாற்றுகின்ற தவநெறிச்சார்பை தெளிய வேண்டும். "ஓம் சிவாயநம என்று செபிப்பாய் உள்ளத்தில் கள்ளத்தை அவிப்பாய்." உள்ளத்தில் கள்ளத்தை வைத்துக் கொண்டு உயர்ந்த ஞானத்தை எய்த முடியாது. 'மனத்தின் கண் மாசிலனாதல அறன்' என்பது திருக்குறள். சிந்தையில் தெளிவு தோன்றினால் சிவன் இரண்டறக்கலந்து எம்மை ஆட்கொள்வான் எனும் உண்மையை சுவாமிகள் உணர்த்துகின்றார்.

*அத்துவிதப் பொருளை*
*அறிவுக்கு அறிவான தொன்றை*
*சித்தத்திலே நீ வைத்து –சின்னத்தங்கம்*
*சிந்தை தெளிந்திடடி.*

என வரும் சுவாமிகளின் அருள்மொழிகளை நோக்குக.ஆசையற்றபோதே ஆண்டவனைக் கண்டிடலாம் என்ற உண்மையை தங்கத்தினிடம் சுவாமிகள் சாற்றுகின்றாார்.

*"ஆசை வலையிற் சிக்கி*
*ஆண்டவனை நீ மறந்தாய்*
*பூசை செய்து பொன்னடியைத் தங்கமே*
*பூரணமாய் வாழ்ந்திடடி"*

இச்செய்யுளில் பூரணம் என்பது பேரா இயற்கைப் பெருவாழ்வு.

*ஆரா வியற்கை அவாநீப்பின் அந்நிலையே*
*பேரா இயற்கை தரும்.*

என்பது திருக்குறள் பூரணமாய் வாழும் பேற்றை எய்தத்தான் நாங்கள் பிறவி எடுத்துள்ளோம். பிறவியின் நோக்கத்தை மறந்து, ஆசை வலையிற் சிக்கி அல்லல்படுகின்ற எம்மை நோக்கி சுவாமிகள் இரக்கப்படுகின்றார். தங்கதிற்கு கூறுவது போல எமக்கு கூறுகின்றார். சிவபெருமானின் பொன்னடியைப் பூசை செய்தால் பூரணத்தை அடையலாம் என்று புகல்கின்றார். உலகப்பற்றில் மூழ்கி உண்மைப்பொருளாகிய இறைவனை மறந்து அல்லல்படும் மக்களை அழைத்து அறிவுரைக்கின்றார்.

*காகம் உறவு கலந்துண்ணக் கண்ளர்*
*அகண்டா கார சிவ*
*போகமெனும் பேரின்ப வெள்ளம்*
*பொங்கித் ததும்பிப் பூரணமாய்*
*ஏக உருவாய்க் கிடக்கு தையோ*
*இன்புற்றிட நாம்இனி எடுத்த*
*தேகம் விழுமுன் புசிப்பதற்குச்*
*சேரவாரும் செகத் தீரே*

எனத் தாயுமானவர் உலகத்தோரை கூவி அழைக்கும் குரலுடன் கலந்து,

*"ஆசை வலையிற் சிக்கி*
*ஆண்டவனை நீ மறந்தாய்*
*பூசை செய்து பொன்னடியைத்*
*தங்கமே பூரணமாய் வாழ்ந்திடடி"*

எனும் குரலும் கேட்கின்றது.

சுவாமிகள் உள்ளத்தில் ஞான ஒளி நடமாடிக்கொண்டே ஒளி பரப்பியது. இன்றும் பரப்புகின்றது. ஞானத் தேசு நிறைந்த சிவப் பொலிவுடன் அவர் அழைக்கின்றார்.

*அன்பே சிவமஅறிந்திட்டா*
*அதுவே நாம் என தெரிந்திட்டர்*
*என்புருகப் பாடிடடா*
*எழுந்திரடா நடந்து வாடா*
*எல்லாம் சிவரூபமடா*

இந்த அழைப்புக் குரலிலே ஞான வெள்ளம் அலை எறிகின்றது. 'எங்கும் சிவ ரூபமடா' என்ற தொடர் பார்த்தவிடம் எங்குமொரு நீக்கமற நின்ற பரிபூரண ஆனந்தக் காட்சியை நினைவூட்டுகின்றது.

சுவாமிகளின் ஞானப்பூங்காவில் சிவத்தென்றல் வீசுகின்றது.திருவருள் நிலா எறிக்கின்றது. எல்லாம் வல்லவன் செயலைப் பச்சைக்கிளி பாடுகின்றது. கூவும் குயில் ஈசன் புகழ் இயம்புகின்றது. இறைவாமல் பிறவாமல் என்றும் எங்கும் சிவனடியை கண்டிறைஞ்சும் இன்பப் பெருவாழ்வை குதம்பை எய்துகின்றாள். அணிமயில் பெருமானைபார்த்த வண்ணம் ஆடுகின்றது. அதன் மருங்கில் ஆனந்தமாக நின்று பாம்பும் ஆடுகின்றது .தங்கம் சுவாமிகளின் திருநோக்கம் பெற்று சிவநாமம் பாடுகின்றாள். தொண்டர்கள் ஆதி அந்தம் இல்லா அப்பனுக்கு மங்களம் பாடுகின்றார்கள். அன்னை ஒத்த செல்வனின் அருள்ஒளி ஞானப்பூங்காவில் நின்று நிழல் ஆடுகின்றது. இத்துணைச்சிறந்த நற்சிந்தனையால் தமிழ் மொழி ஞானவளம் இனிந்துவிட்டது.நற்சிந்தனையை நல்கி நம்மை வாழ்வித்த ஞானத்தந்தையாராகிய யோகர் சுவாமிகளை நாளும் பொழுதும் வணங்கி வாழ்த்துவோம்.

*உணர்ந்தார்க்குக் குணர்வரிய*
*ஓங்கார மெய்ப்பொருளைக்*
*கணந்தான் மறவாமல்*
*கைதொழுவா என் மனமே*
*சித்தத்துள் தித்திக்கும்*
*தெள்ளமுதைத் தெய்வத்தை*
*எத்திக்கும் போற்றுதற்கு*
*என்பின்னே வாமனமே*

என வரும் சுவாமிகள் குரலுடன் கலந்து நாமும் எமது மனத்தை அழைத்து வழிகாட்டி வாழ்வோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உலகளாவிய ரீதியில் இந்து மதம்

# இத்தாலியில் விநாயகர் ஆலயம்

இத்தாலி ஒரு கிறிஸ்தவ நாடாகும். இங்குள்ள ரோம் எனப்படும் ரோமாபுரி பெருநிலத்தின் தலைநகரமான வத்திக்கான் நகரில் கத்தோலிக்க மதத்தின் தலைமைப்பீடம் அமைந்துள்ளது. பாப்பரசர் தலைமையிலான திருச்சபை இங்கிருந்து செயற்பட்டு வருகின்றது.

இத்தகைய ஒரு நாட்டில் இப்போது இந்து மதத்தின் செயற்பாடுகள் இடம்பெறத் தொடங்கியிருக்கின்றன. புலம்பெயர் இந்து மக்களின் வழிபாட்டுக்காக இந்து ஆலயங்கள் அங்கு தோற்றம் பெறத் தொடங்கிவிட்டன. இங்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ள விநாயகர் ஆலயம் ஒன்றைப்பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளன. யாழ் மாவட்டத்தில் உள்ள ஊரெழு கிராமத்தைச் சேர்ந்த திருமதி மாதினி கிருபாகரன் நீண்டகாலமாக இத்தாலியில் வாழ்ந்து வருகின்றார். இவர் அங்குள்ள விநாயகர் ஆலயத்தைப் பற்றி அறியத்தந்துள்ளார்.

இத்தாலி நாட்டிலுள்ள நகரங்களில் ஒன்று பலர்மோ. இங்குள்ள மலையடிவாரத்தின கீழ் அதனை அண்மித்த பகுதியில் மர்வூலியா வீதி இருக்கின்றது. இந்த வீதியின் 61 ஆம் இலக்க இடத்தில் ஸ்ரீமுத்து விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. விநாயகப் பெருமானை மூல மூர்த்தியாகவும், வள்ளி தெய்வயானை சமேத முருகப் பெருமான், லட்சுமி, மனோன்மணி அம்பாள், வைரவர் சண்டேஸ்வரர் ஆகிய பரிவார மூர்த்திகளை கொண்டதாகவும் ஆலயம் தோற்றம் பெற்றுள்ளது.






இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து சென்ற இந்து மக்கள் சிலர் ஒன்றிணைந்து விநாயகப் பெருமானுக்கு ஆலயம் அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தை முன்வைத்தனர். இவர்களது முயற்சியின் பலனாக 2008 ஆம் ஆண்டு அக்டோபர் 26 ஆம் திகதியன்று ஆலயம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இடம்பெற்றது .இலண்டனில் இருந்து வருகை தந்த சிவஸ்ரீ ஸ்ரீஹரக் குருக்கள் இது தொடர்பான கிரியைகள் மற்றும் பூஜை வைபவங்களை நடாத்தி வைத்தார்.

இந்த ஆலயக் கட்டிடப் பணிக்காக நிர்வாகக் குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டது.இந்தக் குழுவில் 14 பேர் அங்கத்துவம் வகித்தனர். திரு. நாகரத்தினம் ஜெயக்குமார் குழுவின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். குழுவினரின் ஆக்கத்தினாலும் ஊக்கத்தினாலும் பொதுமக்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட நிதி உதவியுடனும் ஆலயத்தின் கட்டிடப்பணி விரைவாக இடம் பெற்று வந்தது .நிர்வாகக் குழுவின், தலைவர் ஜெயக்குமார் குழுவின் பொருளாளர் திரு. மதிக்குமார் ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினருடன் இணைந்து இரவு பகலாக உழைத்ததினால் ஆலய சிற்பங்கள் மற்றும் வசந்த மண்டப அலங்கார வேலைப்பாடுகளுடன் ஆலய கட்டிடப் பணியை சில மாதங்களில் நிறைவு செய்யக்கூடியதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதனைத் தொடந்து 2009 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 14 ஆம் திகதியன்று மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது .யாழ் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலைச் சேர்ந்த சிவஸ்ரீ கணேசக்குருக்கள் மகா கும்பாபிஷேக கிரியைகளை நடாத்தி வைத்தார்.இவருக்கு உதவியாக அதே ஆலயத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ ஜெகதீஸ்வர ஐயா கும்பாபிஷேக கிரியைகளில் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார். மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 21 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்றது.

மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டதன் பின்னர் ஆலயப் பூசகராக கதிர் என அழைக்கப்படும் கதிர்காமத்தம்பி ஐயா பணியாற்றி வருகிறார். இங்கு நித்திய பூசை வழிபாடுகள் நடைபெற்று வருவதுடன் விஷேட தினங்களிலும் சிறப்புப் பூசைகள் இடம் பெற்று வருகின்றன.

2009 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் ஆவணி சதுர்த்தி நாளில் விநாயப் பெருமானுக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் பூசைகள் நடைபெற்று வருகின்றன.இந்த நிகழ்வில் பெருமளவு அடியார்கள் ஆட்டக்காவடி பாற்காவடி மற்றும் கற்பூரச்சட்டி என்பனவற்றை எடுத்து வருகின்றனர். . பஜனையிலும் கலந்து கொள்வார்கள்.

இங்கு 2010 ஜுன் 4ஆம் திகதியன்று மகா கும்பாபிஷேகத்தின் ஓராண்டு நிறைவையொட்டிய வருடாபிஷேகம் இடம் பெற்றது. இதனைத் தொடந்து ஜுலை 21ஆம் திகதியிலிருந்து தொடர்ந்து 12 தினங்கள் அலங்கார உற்சவம் சிறப்பாக நடந்தேறியது. ஒவ்வொரு வருடமும் ஜுலை மாதத்தில் அலங்கார உற்சவம் இடம் பெற்று வருகின்றது .


இத்தாலியில் உள்ள இந்து மக்களின் உதவியுடனும் ஒத்துழைப்புடனும் ஆலய நிர்வாகக் குழுவின் சிறப்பான பரிபாலனத்துடனும் விநாயகப் பெருமானின் திருவருள் துணை கொண்டு நித்திய நைமித்திய பூசைகள் இடம் பெற்று ஆலயம் சிறப்பான வகையில வளர்ச்சி பெற்று வருகின்றது என்பதை குறிப்பிட்டு சொல்லலாம்.

**- அ.கனகசூரியர்**

## மாமன்றம் வாழ்த்துகிறது

# மணிவிழா கண்ட

## கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சிறப்பு உறுப்பினர்களில் ஒருவர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன். இவர் அண்மையில் அகவை அறுபது நிறைவு பெற்றதன் ஊடாக மணிவிழா கண்டுள்ளார். கடந்த ஏப்ரல் மாதம் ஆறாம் திகதியன்று யாழ் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்திலும், ஜுன் மாதம் இரண்டாம் திகதியன்று வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்திலும் இவரது மணிவிழா வைபவம் சிறப்பாக இடம் பெற்றிருந்தன. இவரது தமிழியற் பணிகளைப் பாராட்டி கௌரவிக்கும் வகையில் வவுனியா மணிவிழா குழுவினர் ‘முத்தமிழ் வித்தகர்’ என்ற விருதினை வழங்கியிருப்பதை சிறப்பாக குறிப்பிடவேண்டும்

நயினை ஸ்ரீ நாகபூஷணிஅம்பாள் தேவஸ்தானத்தில் மரபு வழிப்பரம்பரையில் தோன்றிய கனகசபாபதி - கோகிலாம்பாள் தம்பதியினரின் மூத்த புதல்வனாக பிறந்தவர் நாகேஸ்வரன்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை நயினாதீவு மகா வித்தியாலயத்திலும், பின்னர் நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியிலும், தொடர்ந்து உயர் கல்வியை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும் பயின்றார்.1974 ஆம் ஆண்டு க.பொ.த (உயர்தரம்)பரீட்சையில் சித்தியடைந்ததைத் தொடந்து யாழ் பல்கலைக்கழகத்தில் இணைந்து பட்டப்படிப்பை மேற்கொண்டு தமிழ் இலக்கியத் துறையில் கலைமாணி சிறப்புப் பட்டத்தை பெற்றுக் கொண்டார். 1988 ஆம் ஆண்டில் முதுகலைமாணி பட்டமும் இவருக்கு கிடைத்தது.இதற்கும் மேலாக கடந்த சில வருடங்களுக்கு முன்னர் பேராதனை பல்கலைக்கழகத்தில் ஆய்வை மேற்கொண்டு கலாநிதி பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் இப்போது சப்ரகமுவ பல்கலைக்கழக மொழித்துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். இவர் ஒரு சமய -ஆன்மீக இலக்கிய சொற்பொழிவாளர் என்பதற்கும் மேலாக ஒரு கதாப்பிரசங்க வித்துவர்னாகவும் திகழ்ந்து வருகிறார். இலங்கையில் மட்டுமல்ல இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் பல நிகழ்வுகளில் இவரது சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெற்றுள்ளன.பட்டி மண்டபம் நிகழ்சிகளிலும் கலந்து கொண்டுள்ளார்.

இவரது ஆக்கங்கள் நாளேடுகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.தமிழ் இலக்கியம், சமயம், பண்பாடு சார்ந்த பதினைந்துக்கும் மேற்பட்ட ஆய்வு நூல்களையும் இவர் எழுதிவெளியிட்டுள்ளார்.

தனது அறிவாற்றலால் பெற்றுக்கொண்ட இத்தகைய பட்டங்களுக்கு மேலாக இவரது நாவன்மைக்காக பெற்றுக்கொண்ட கௌரவப் பட்டங்கள் ஏராளம். "வாசீககலாநிதி"என்பது இவரது பெயருடன் இணைந்து கொண்டுள்ள பட்டமாக சிறப்புப் பெறுகிறது.

இவர் இலங்கை வானொலியில் பகுதிநேர அறிவிப்பாளராகவும், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராகவும், நேர்முகவர்ணனையாளராகவும் பணியாற்றியிருக்கிறார்.இலங்கை வானொலியில் பல வருடங்களாக சைவ நற்சிந்தனை, சமய இலக்கியப்பேச்சு மற்றும் கலந்துரையாடல்கள் போன்ற நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி வருகிறார்.

மணிவிழா கண்ட கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களை அகில இலங்கை இந்து மாமன்றம் இனிதே வாழ்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மாமன்ற செய்திகள்

- 15.07.2013 அன்று நல்லூரில் சுவாமி விபுலானந்த அடிகள் நினைவு விழாவை மாமன்றம் ஒழுங்கு செய்துள்ளது.
- இலங்கை கட்டளை பணியகத்தின் அழைப்பின் பேரில் அகில இலங்கை இந்து மாமன்றம் சார்பில் கலாநிதி குமாரசுவாமி சோமசுந்தரம். தாவர உணவு கட்டளை வகுப்பது பற்றி நியதிகள் தயாரிக்கும் குழுவிற்கு தலைமை தாங்குகிறார்.
- 'தேர்' ஆராய்ச்சி இதழை வெளியிட மாமன்றம் ஒழுங்கு செய்து வருகின்றது. மேலும் விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும்.
- முள்ளியவளையில் ஆதரவு தேவையான தாய்மார் களுக்கான ஆதரவுத்திட்டம் மாமன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- யாழ்பல்கலைக்கழக மாணவர்களுக்கு இன்னும் மடிக் கணனிகளை 15.07.2013ல் மாமன்றம் வழங்குகின்றது.
- கணனி வகுப்புகள் நடத்தும் இந்து நிறுவனங்களுக்கு மேசைக்கணனிகள் வழங்க மாமன்றம் ஒழுங்கு செய்கிறது.
- இந்து ஆலயங்களுக்கு பன்னிரு திருமுறை தொகுப்பு நூல்கள் மேலும் வழங்கவும் ஒழுங்கு செய்யப்படுகின்றது.

### இலவச இணைப்பு

முத்தமிழ் வித்தகர்

**சுவாமி விபுலானந்த அடிகளாரின்**

வண்ணப்படம்.

## இந்து ஒளி வாசகர்களுடன் சில வார்த்தைகள்

"தீபம் இருளை விலக்கி எதிரேயுள்ள பொருளைக் காட்டுகிறது. அதுபோல படிப்பறிவு அறியாமை என்ற இருளை அகற்றி உண்மைகளை உணர்த்துகிறது." இது காஞ்சிப் பெரியவரின் அருள்வாக்கு. மாமன்றத்தின் பணிகளுள் ஒன்றாக சமய சஞ்சிகையொன்றை வெளியிட வேண்டும் என்ற மாமன்ற உறுப்பினர்களது நீண்டகால விருப்பமும் வேண்டுகோளும் 1996 ஆம் ஆண்டின் திருக்கார்த்திகை திருநாளன்று நிறைவேறியிருக்கிறது. மாமன்றத்தின் காலாண்டிதழாக தோற்றம் பெற்ற "இந்து ஒளி" யின் முதலாவது தீபத்தின் முதலாவது சுடர் காஞ்சிப் பெரியவரின் மேற்படி அருள்வாக்குடன் அன்றைய தினம் பிரகாசித்தது.

அன்றைய தினத்திலிருந்து வருடந்தோறும் ஏற்றி வைக்கப்பட்ட ஒவ்வொரு தீபத்திலிருந்தும் நான்கு சுடர்கள் பிரகாசித்து வந்தன. மலர்ந்துள்ள விஜய வருடத்திலிருந்து காலாண்டிதழ் என்பதற்கு பதிலாக இருமாத ஆன்மீக இதழாக "இந்து ஒளி" பிரகாசிக்கத் தொடங்கியிருக்கிறது என்பது அனைவரும் அறிந்த விஷயமாகும். மீண்டும் திரு. அ. கனகசூரியர் யாழ் மண்ணிலிருந்து இணைந்து பணியாற்றுகிறார் எங்களுடன்.

இந்து ஒளி இருமாத ஆன்மீக இதழாக வெளிவருவதையிட்டு வாசகப்பெருமக்கள் பலர் கடிதங்கள் மற்றும் தொலைபேசி ஊடாக மகிழ்ச்சி கலந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்து வருகிறார்கள்.

"இந்து ஒளி" தீபம் ஏற்றிவைக்கப்பட்டு பதினேழு வருடங்கள் நிறைவுபெற்றுள்ள நிலையில் பதினேழாவது தீபத்தின் நான்காவது சுடராக மலர்ந்துள்ள இவ்விதழை வாசகப் பெருமக்களின் கரங்களில் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மடாலய திறப்பு விழா, சுவாமி விபுலாநந்தரின் நினைவு தின சிறப்பிதழாக சமர்ப்பிப்பதில் அகில இலங்கை இந்து மாமன்றம் பெருமகிழ்ச்சியடைகிறது.

"இந்து ஒளி" ஆன்மீக இதழ் சம்பந்தமாக வாசகப் பெருமக்களிடமிருந்து கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் காத்திரமான ஆலோசனைகளையும் தொடர்ந்து வரவேற்கிறோம்.

இந்து ஒளி ஆசிரியர் குழு சார்பாக

**முத்தையா கதிர்காமநாதன்**

*பொதுச் செயலாளர்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆதீன மடாலய திறப்பு விழாவில்
## (23.06.2013)




தேவார பாராயணம்




செஞ்சொற்செல்வரின்
வரவேற்புரை




நல்லை ஆதீன முதல்வரின் ஆசியுரை மேடையில் மாண்புமிகு
மகாலிங்கம், நீதியரசர் விக்னேஸ்வரன், திரு. சூ. பாலசிங்கம்



நீதியரசர்
சிறப்புரை



இந்திய இராஜதந்திர தூதுவர்
மாண்புமிகு
வி. மகாலிங்கம் சிறப்புரை




திரு சூ. பாலசிங்கம்
சிறப்புரை





மாமன்றத்தலைவரால் திரு சூ. பாலசிங்கம் கௌரவிக்கப்படுகிறார்.
அருகில் கலாநிதி ஆறு. திருமுருகன், திரு. முத்தையா கதிர்காமநாதன்



மாமன்றத்
தலைவர் திரு. கந்தையா
நீலகண்டன் சிறப்புரை




மாண்புமிகு வி. மகாலிங்கம்
அவர்களால் நீதியரசர்
கௌரவிக்கப்படுகிறார்



மாண்புமிகு வி. மகாலிங்கம்
திரு. வே. கந்தசுவாமி
அவர்களினால்
கௌரவிக்கப்படுகிறார்



திரு. வே. சிவசுந்தரம் மாமன்றத்
தலைவரால் கௌரவிக்கப்படுகிறார்.
அருகில் கலாநிதி ஆறு. திருமுருகன்



திரு. க. சண்முகநாதன்
மாமன்ற பிரதித்தலைவர்
திரு. மா. தவயோகராஜா
கௌரவிக்கப்படுகிறார்



கலாநிதி ஆறு. திருமுருகன்
திரு. சூ. பாலசிங்கம்
அவர்களினால்
கௌரவிக்கப்படுகிறார்



மழவராயர் நம்பிக்கை நிதிய அறங்காவலர்
புருஷோத்தமன் மாண்புமிகு மகாலிங்கம்
அவர்களினால் கௌரவிக்கப்படுகிறார்



திரு. ந. சச்சிதானந்தன் கலாநிதி
முருகேசு கதிர்காமநாதனால்
கௌரவிக்கப்படுகிறார்



திரு. தேவசகாயம்
திரு. தனபாலா அவர்களினால்
கௌரவிக்கப்படுகிறார்



திரு. ரங்கநாதன்
பொதுச்செயலாளரால்
கௌரவிக்கப்படுகிறார்



சபையோர்




ஆதீனத்துக்கு விஜயம் செய்த கலாநிதி சின்னத்துரை சோமசேகரம் கௌரவிக்கப்படுகிறார்.
அருகே கலாநிதி ஆறு. திருமுருகன், திரு. சின்னத்துரை தனபாலா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. QD/19/NEWS/2013


# ஆதீன மடாலய கட்டிட திறப்பு விழா 23.06.2013



நல்லூர் கந்தன் முன்னிலையில் ஊர்வலமாக எடுத்துவரப்பட்ட வள்ளி தேவயானை சமேதராய் ஆறுமுகன் சுவாமி.



ஊர்வலம்




கோமாதா பூஜை



சுபநேரத்திற்காக காத்திருக்கும் மாநகர முதல்வரும் மாண்புமிகு மகாலிங்கம் அவர்களும்......



ஆதீன மடாலயத்தின் ஆதீன தலைவரும் கட்டட குடும்பத்தாரும் மாமன்றத்தலைவரும் திரு சண்முகதாசனும்.இணைந்து திறந்து வைக்கின்றனர்.




மாமன்ற தலைவர் கட்டிட அமைப்பு அறிவிப்பு கல்லை திரை நீக்கம் செய்கின்றார்.



திரு. வே. சிவசுந்தரம் மடாலயத்தில் அறையொன்றை திறந்துவைக்கின்றார். அருகில் கலாநிதி ஆறு. திருமுருகன்



திறந்து வைக்கப்பட்ட கட்டிடம்

இவ்விதழ் இல. 48B, புளூமெண்டால் வீதி, கொழும்பு - 13, யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org